வடாற்காடு மாவட்டத்தில் கல்கி—II

கல்கி

KALKI
26.7.87
ரூ. 1.50



வளமான வடாற்காடு விஷமாகிறது!


Godrej
Marvel
மார்வல்-இதம் தரும் தன்மை
காஞ்சிப்பட்டுப் போன்ற மென்மை.
ஸ்பன் லிலக போன்ற தன்மை. காஞ்சீவரம் பட்டுப்
போன்ற மென்மை. தேங்காய் எண்ணெயின் இயற்கையான
நற்குணங்கள் தரும் நுரைவளத்தின் செழுமை.
மற்ற சோப்புகளை விட
3 மடங்கு அதிகம் தேங்காய் எண்ணெ கொண்டது.



குடியுரிமை கேட்பது குற்றமா?

கூர்க்காலாந்து பிரச்னை:
சுப்பிரமணிய சுவாமி விளக்குகிறார்!

கூர்க்காக்கள் எதற்காகப் போராடுகிறார்கள்?

நேபாளத்தைத் தாயகமாகக் கொண்டுள்ள கூர்க்காக்கள் இந்தியாவில் கிட்டத்தட்ட பன்னிரண்டு லட்சம் பேர் வாழ்கிறார்கள். இவர்களில் பத்து லட்சம் கூர்க்காக்கள் டார்ஜிலிங் மலைப்பகுதிகளில் வாழ்கிறார்கள். இவர்கள் போராட்டத்தின் அடிப்படை 'குடியுரிமைக் கோரிக்கை'தான். 1950–ல் இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் கூர்க்காக்கள் சம்பந்தமாக ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தப்படி, 1950–ல் யார் யார் தன்னை இந்தியக் குடிமகனாக்குமாறு விண்ணப்பம் கொடுத்தார்களோ அவர்கள் இந்தியர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள். இப்போது அவர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் பிரச்னை இல்லை. அப்போது குடியுரிமை கேட்கத் தவறிய கூர்க்காக்களுக்கும் அவர்களது வம்சாவளிகளுக்கும்தான் இன்று பிரச்னை. இடையே கடந்த முப்பத்தாறு ஆண்டுகளில் நேபாளத்திலிருந்து வந்திருக்கும் புதிய கூர்க்காக்கள் வேறு! இதைத் தவிர, இந்தியா – நேபாளம் – பிரிட்டன் ஆகிய நாடுகளிடையே உள்ள ஒரு முத்தரப்பு ஒப்பந்தப்படி ராணுவத்தில் பணிபுரிந்த, பணிபுரிகிற கூர்க்காக்களுக்கு நேபாளம், இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் குடியுரிமை உண்டு. ஆனால், 'நேபாளக் குடியுரிமை வேண்டாம், முற்றிலும் இந்தியக் குடிமகனாகவே இருக்கிறோம்' என்கிறார்கள் இந்த வகை கூர்க்காக்கள்.

இவர்கள் போராட்டத்தில் இறங்கியது ஏன்?

வங்காளிகளுக்கும் கூர்க்காக்களுக்கும் இடையே கலாசாரத்தில் அடிப்படை வித்தியாசங்கள் உண்டு. சுதந்திரம் பெற்றதிலிருந்தே வேலை வாய்ப்பு, கல்வி போன்றவற்றில் மலைப்பகுதியில் இருக்கும் கூர்க்காக்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். அப்படியே வேலை வாய்ப்புக் கிடைத்தாலும், பியூன் வேலை போன்ற அடிமட்ட வேலைகள்தான் கிடைத்தன. வங்காளிகளும் மார்வாடிகளும் டார்ஜிலிங் தேயிலைத் தோட்டங்களை வளைத்துப் போட்டுக் கொண்டு, கூர்க்காக்களை அடிமைகள்போல் வேலை வாங்குகிறார்கள். அரசுப் பதவிகளில் மேல்நிலையில் வங்காளிகளே இருந்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்ததிலிருந்து நிலைமை இன்னும் மோசமாயிற்று. போதாதற்கு 1983–ல் மேகாலயா பகுதியில் தேயிலைத் தோட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த நாலாயிரம் கூர்க்காக்கள் வேலையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். இவற்றையெல்லாம் கண்டு கொதித்தெழுந்த கூர்க்காக்கள் சிறு



* கெய்ஷிங்

● டார்ஜிலிங் மலைப்பகுதியில் மூன்று எம்.எல்.ஏ. தொகுதிகளும் ஒரு எம்.பி. தொகுதியும் உள்ளன.

● கடந்த வருடம் டிசம்பர் 19—ம் தேதியன்று பிரதமர் ராஜீவ் காந்தி டார்ஜிலிங்கில் பேசிய கூட்டத்திற்கு வந்தது இருநூறு பேருக்கும் குறைவே. இவ்வளவு சிறிய கூட்டத்தில் இதுவரை எந்த ஓர் இந்தியப் பிரதமரும் உரையாற்றியதில்லை! கூர்க்காக்கள் முற்றிலும் புறக்கணித்ததால் இந்த நிலை ஏற்பட்டது.

● கடந்த தேர்தலின்போது முதல்வர் ஜோதிபாசு டார்ஜிலிங் பகுதியில் பிரசாரம் செய்யவில்லை.

● சமீபத்தில் நடந்த பதின்மூன்று நாள் 'பந்த்'தின் போது, 'போதும் நிறுத்திக் கொள்வோம்' என்று கெய்ஷிங் விடுத்த வேண்டுகோள் கூர்க்காக்கள் மத்தியில் எடுபடவில்லை. வன்முறைகள் தொடர்ந்தன. இதனை, 'கெய்ஷிங்குக்குக் கூர்க்காக்களிடம் உள்ள செல்வாக்கு குறைந்துவிட்டதாக அர்த்தமல்ல; மக்கள் அந்த அளவு மனம் நொந்து போயிருக்கிறார்கள் என்று அர்த்தம்' என்று விமர்சிக்கிறார்கள் சில அரசியல் பார்வையாளர்கள்.

சிறு குழுக்களாக அமைந்து, போராட்டத்தைத் துவக்கினார்கள். மத்திய அரசு, மாநில அரசு இரண்டுமே இந்தப் போராட்டங்களை முதலில் லட்சியம் செய்யவில்லை. இப்போது சமாளிக்க முடியாமல் திணறுகின்றன.

கூர்க்கா தேசிய விடுதலை முன்னணி (GNLF) எப்படி உருவாயிற்று?

சுபாஷ் கெய்ஷிங் ஒரு நேபாள எழுத்தாளர். ராணுவத்திலும் பணிபுரிந்தவர். மக்களிடம் நன்கு அறிமுகமானவர். போராடிக் கொண்டிருந்த சிறு குழுக்களை ஒன்றாக இணைத்து இந்த முன்னணியை உருவாக்கினார். இவரது பேச்சும், எழுத்தும் கூர்க்காக்கள் மத்தியில் புதிய எழுச்சியைத் தோற்றுவித்தன.

இவர்களின் போராட்டம் குடியுரிமை கேட்பது மட்டும்தானா?

முதலில் குடியுரிமை கேட்பது மட்டும்தான் இருந்தது. பின்னர் நேபாளி மொழியை அரசியல் சாசனத்தின் எட்டாவது ஷெட்யூலில் (இந்தியாவில் பேசப்படும் மொழிகள் பற்றியது). சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை பிறந்தது. மூன்றாவதாகத் தங்களுக்குக் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை தரப்பட வேண்டுமென்று கூறினார்கள். தங்களுக்குத் தனி மாநிலம் கொடுத்தால்தான் பிரச்னைகள் தீரும் என்று இன்று நம்புகிறார்கள். நியாயமான அவர்களின் கோரிக்கைகள் அலட்சியப்படுத்தப்பட்டதாலேயே இந்த அளவுக்குத் தீவிரமடைந்திருக்கிறார்கள். ராஜீவ் காந்தி மேற்கு வங்காளத் தேர்தலுக்கு முன்னர், "கூர்க்காக்கள் தனி மாநிலம் கேட்பதில் என்ன தவறு?" என்று கூர்க்காக்களின் போராட்டத்தை ஆதரித்துப் பேசினார். அவரது நோக்கம் ஆட்சியில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியைத் தொல்லைக்கு உள்ளாக்க வேண்டும் என்பதுதான். ஆனால் தேர்தலில் அடி வாங்கிய பிறகு அவரே, 'மே. வங்க முதல்வரும் கூர்க்காக்களும் பேசிப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளட்டும்; நான் தலையிட அவசியமில்லை'' என்றார். இப்போது மறுபடி, தானே நேரிடையாக கெய்ஷிங்கைச் சந்தித்துப் பேச முன்வந்திருக்கிறார். இப்படி ஒரேயடியாக முரண்பட்டு நடந்து கொள்வதால் பிரச்னைகள் விசுவரூபமெடுக்கின்றன.

கூர்க்காக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் தனி மாநிலம் ஒன்றுதான் வழியா?

இந்தியாவிலுள்ள எத்தனையோ பல பிரச்னைகள், சுலபமாகத் தீர்த்து வைக்கப்படக் கூடியவைதான். ஆனால் ஆளும் கட்சியினர், தங்கள் அரசியல் ஆதாயத்திற்காகப் பிரச்னைகளை ஊதி வளர்த்துவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலில் அவர்கள் கேட்கும் குடியுரிமையைக் கொடுத்துவிட்டுப் போகலாமே? என்ன தவறு? இன்று, குடியுரிமை கிடைக்கப் பெறாமல் உள்ள கூர்க்காக்களும் காலம் காலமாக இந்தியாவில்தான் வசித்து வந்திருக்கிறார்கள். ஆனால் புதிதாக யாரும் குடியேறாமல் பார்த்துக் கொள்வது நல்லது. அதுபோல அவர்கள் மொழியை அங்கீகரித்து அரசியல் சாசனத்தில் இடம் பெறச் செய்வதில் தவறேதும் இல்லை. உருது மொழி பாகிஸ்தானின் ஆட்சி மொழி. அது நமது அரசியல் சாசனத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதே! மேலும் டார்ஜிலிங்கின் வளர்ச்சிக்குத் தனியாக ஓர் அமைப்பை நிறுவி வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்கலாம். இந்த அமைப்பு கூர்க்காக்களின் கல்வி, வேலை வாய்ப்பு வசதிகளையும் கவனிக்குமாறு செய்யலாம்.

பேட்டி: **ப்ரியன்**

புகைப்படம்: **சுபா**

வளமான வடாற்காடு விஷமாகிறது!


ஆம்பூர் பஸ் ஸ்டாண்டில் இறங்கி, ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்து டிபனுக்காகக் காத்திருந்தபோது, அங்கு கொடுக்கப்பட்ட தண்ணீரை எடுத்து ஒரு வாய் உறிஞ்சினார் நமது சக நிருபர் ஒருவர். ஆனால் உறிஞ்சிய தண்ணீரை உள்ளே விழுங்கவில்லை. வாஷ் பேஸினுக்கு ஓடிச் சென்று துப்பிவிட்டார். 'என்ன' என்று முகஞ்சுருங்கக் கேட்டபோது, 'நீங்களும் குடித்துப் பாருங்கள்' என்றார்.

குடித்துப் பார்த்தோம். தண்ணீர் நாக்கில் பட்டதுமே ஒருவித அரிப்பு; அப்படியொரு மோசமான சுவை. வேறுவழியின்றி நாங்களும் துப்பிவிட்டுத் திரும்பினோம். சர்வரைக் கூப்பிட்டு, "நல்ல தண்ணீராய்க் கொண்டு வரக் கூடாதா?" என்று கேட்க, "சார்! நீங்களெல்லாம் ஊருக்குப் புதுசா? ஆம்பூரில் தண்ணீர் இப்படித்தான் சார் இருக்கும்!" என்றார்.

ஆம்பூரில் மட்டுமல்ல; வாணியம்பாடியிலும் இதே கதைதான். அதற்கு என்ன காரணம்? அங்கே உள்ள நூற்றுக்கணக்கான தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர்தான், அந்தச் சோக நிலைமையின் மூல காரணம். அந்தக் கழிவு நீரிலுள்ள விஷத் தன்மைதான், குடி நீரைப் பாதிப்பதோடு, அங்குள்ள விளை நிலங்களையும் பாதிப்பதாகச் சொல்கிறார்கள். நேரில் சென்று பார்த்தோம்.

ஆம்பூரை ஒட்டியே ஓடுகிறது பாலாறு. ஆம்பூரில் உள்ள சிறியதும் பெரியதுமான பல்வேறு தோல் பதனிடும் தொழிற்சாலைகளும், தங்கள் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரைப் பாலாற்றில்தான் கொண்டு வந்து கலக்க விடுகின்றன. இப்போது பாலாற்றில் தண்ணீர் ஓடுவதைக் காண முடியாவிட்டாலும், கருஞ் சிவப்பு நிறத்தில் இந்தக் கழிவு நீர் ஓடை போல ஓடிக் கொண்டிருப்பதைக் கண்கூடாய்க் காணலாம்.

'இந்தச் சுகாதாரக்கேட்டின் விளைவுகள் பற்றி ஒரு தோல் தொழிற்சாலைக்கே சென்று, சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்தால் என்ன?' என்று தோன்றவே, அங்குள்ள மிகப் பெரிய தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் ஒன்றான் ஃபரீடா டேனரீஸ் என்கிற தோல்பதனிடும்தொழிற்சாலையினுள் நுழைந்தோம். தொழிற்சாலையின் நிர்வாகப் பொறுப்பு வகிக்கும் ஹபிபுர் ரகுமானைச் சந்தித்தோம். அவர், "வாருங்கள்" என்று





தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்ட் கெமிகல்ஸ் நிறுவனத்தின் ஓரத்தில் கொட்டிக் கிடக்கும் இடறிலைக் கழிவுப் பொருள்களும், கழிவு நீரும்...

எங்களை அழைத்துக் கொண்டு போய், "இது தான் எங்கள் கழிவு நீரை ட்ரீட்மெண்ட் செய்யும் பகுதி" என்று காட்டினார்.


அங்கே பிரும்மாண்டமான நான்கு தரை மட்டத் தொட்டிகள் இருந்தன. அவற்றிலெல்லாம் பலமான துர்நாற்றத்தைப் பரப்பியபடி, குழம்பிய கருஞ்சிவப்பு நீர் தேங்கியிருந்தது. "இந்தத் தொட்டியிலுள்ள கழிவு நீரில் பொதுவாகச் சுண்ணாம்பு (லைம்), குரோம் (குரோமிய உலோகம்) உப்பு; கடுக்காயின் கழிவுகள், பல வண்ணச் சாயங்கள் இவை கலந்திருக்கும். இதில் 'குரோம்' என்பது லேசான விஷத்தன்மை உடையது. எனவே, இந்தக் கழிவு நீரைச் சுத்தப்படுத்தி வெளியேற்ற வேண்டியது அவசியமாகிறது. திறந்த வெளித் தொட்டிகளில் தேக்கப்படும் நீரின் ஒரு பகுதி, வெயிலில் ஆவியாகி விடுகிறது. மீதியுள்ள பகுதி குழாய் மூலம் வேறு ஒரு பகுதிக்கு பம்ப் செய்யப்பட்டு, மோட்டார் சக்தி மூலமாய்ச் சுத்தம் செய்யப்படுகிறது. நீங்களே பாருங்கள்...." என்றார்.

பக்கத்திலேயே இருந்த இன்னொரு சிறு இடத்தைக் காட்டி, "இதுதான் எங்கள் பரிசோதனைச் சாலை. கழிவு நீரில் உள்ள விஷத் தன்மையின் பல்வேறு நிலைகளும் இங்கே





° திருமலே கெமிக்கல்ஸ்: "இதுதான் கழிவு நீர்ச் சுத்திகரிப்புச் சாதனம்...." என்றார்கள்.



° தோல் பதனிடும் தொழிற்சாலையின் உட்புறத் தோற்றத்தின் ஒரு பகுதி






° ஃபரீடா டேனரீஸ்: கழிவு நீர்ச் சுத்திகரிப்புத் தொட்டிகள்

ஆய்வு செய்யப்பட்டு, எந்த அளவில் கழிவு நீரை வெளியேற்றினால், எந்தவிதமான சுகாதாரக் கேடும் ஏற்படாதோ, அத்தகைய அளவில் வெளியேற்றி வருகிறோம். இந்த 'எஃப்ளுயண்ட் (கழிவு நீர்) டிரீட்மெண்ட் பிளாண்ட்டை' நிறுவ எங்களுக்குச் சுமார் இருபது லட்ச ரூபாய் செலவாயிற்று. அது தவிர, அதைத் தொடர்ந்து இயக்கி, கழிவு நீரைத் தூய்மைப்படுத்துகிற வேலைக்காக நாங்கள் மாதாமாதம் சுமார் பத்தாயிரம் ரூபாய் வரை செலவழிக்கிறோம். இருந்தாலும் நாங்கள் சந்திக்கும் இன்னொரு பெரிய பிரச்னை, பிரித்தெடுக்கப்பட்ட விஷத் தன்மையுள்ள கழிவுகளை எங்கே கொண்டு போய்க் கொட்டுவது என்பது. இப்போது தொழிற்சாலையினுள்ளேயே ஒரு பகுதியில் கழிவு நீரிலிருந்து பிரிக்கப்பட்ட இடநிலையிலான கழிவுகளைக் கொட்டி வைத்துக் கொண்டிருக்கிறோம்" என்றார்.

"நீங்கள் இருபது லட்சம் செலவழித்து, சுற்றுப்புற சுகாதாரக் கேட்டைத் தவிர்க்க, இப்படி ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி. ஆனால் ஆம்பூரில் உள்ள எல்லாத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும் இந்த முறையைக் கையாளுகிறார்களா?" என்று கேட்டபோது அவர் "இல்லை. ஒரு சில பெரிய தொழிற்சாலைகள் மட்டுமே இத்தகைய நடவடிக்கையை எடுத்துள்ளன. சிறுசிறு தொழிற்சாலைகள்தான் இங்கே மிக அதிகம். எனவே அவர்களுக்குக் கழிவு நீர் ட்ரீட்மெண்ட் பிளாண்ட் நிறுவுகிற அளவுக்கு நிதி வசதி இல்லை. வங்கிகளிலும்கூட, இந்த ட்ரீட்மெண்ட் பிளாண்ட் நிறுவுவதற்கு எனப் பிரத்தியேகமாய் எந்தவித நிதியுதவியும் செய்வதில்லை. அரசாங்கமும் மானியம் ஏதும் தருவதில்லை. இருந்தாலும் ஆம்பூரிலுள்ள அத்தனை தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் ஒன்று சேர்ந்து, அசோசியேஷன் ஒன்று ஆரம்பித்து, அதன் மூலம் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். ஆம், ஆம்பூர் நகரத்திலுள்ள



* பாலாற்றில் ஓடும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவு நீர்

சில தகவல்கள் .....

- தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீரில் மிகவும் அதிகப்படியான உப்பு இருக்கும். சாதாரணமாய் நாம், 'என்ன! தண்ணி ஒரே உப்பாய் இருக்கே!' என்று சொல்லுகிற தண்ணீரில் லிட்டருக்கு ஒரு கிராம் உப்பு இருப்பதாகக் கணக்குச் சொல்கிறார்கள். ஆனால் தோல் தொழிற்சாலைக் கழிவு நீரில் மூன்று, நான்கு கிராம் உப்பு இருப்பது சர்வ சாதாரணம்.

- தவிர, இந்தக் கழிவு நீரில், கெட்ட நாற்றம் பரப்புகிற ஆர்கானிக் துகள்கள் (Organic impurities) கலந்திருக்கும். இதன்கூடக் கலந்திருக்கும் மற்றவை, சுண்ணாம்பு, குரோம் என்கிற குரோமியம் முதலான ரசாயனப் பொருட்கள்.

- 'குரோம்' விஷத்தன்மையுடையதுதான் என்றாலும் மனித, மற்றும் விலங்குகளின் உயிருக்கு ஆபத்தானதில்லை.

- சுத்தம் செய்யாமல் வெளியேற்றப்படும் கழிவு நீர், நிலத்தில் பாயும்போது, நிலம் சத்துக்களை இழந்து, பயிர் செய்யப் பயனற்றுப் போகிறது. தண்ணீரில் கலப்பதால், அது குடிக்க லாயக்கில்லாமல் போகிறது.

தோல் பதனிடும் தொழிற்சாலைகள் எல்லாவற்றுக்கும் பொதுவாக, ஆம்பூர் நகரத்துக்கு வெளியே ஒரு ட்ரீட்மெண்ட் பிளாண்ட் அமைக்கப்படும். எல்லாத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்தும் அவரவரும் கழிவு நீரைக் குழாய்கள் மூலமாக அந்தப் பொது இடத்துக்குக் கொண்டு செல்வார்கள். அங்கே அது சுத்திகரிக்கப்பட்டு, விஷம் நீங்கிய நிலையில் வெளியேற்றப்படும். இதற்கான நிலம்கூட வாங்கியாகிவிட்டது. இந்தப் பெரிய திட்டத்துக்காக பாங்கில் லோன் கேட்கப்பட்டுள்ளது. எப்படியும் இன்னும் இரண்டு வருஷங்களுக்குள் இத்திட்டம் முழுமையடைந்து, ஆம்பூரின் பெரும்பிரச்னை தீர்ந்துவிடும்....'' என்றார்.

''மிக்க மகிழ்ச்சி. சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் நிறம் எப்படியிருக்கும்?'' என்று நாங்கள் அவரிடம் கடைசியாகக் கேட்டபோது, ''அது ஏறத்தாழச் சுத்தமான நீரின் நிறத்தில்தான் இருக்கும்'' என்றார்.

உடனே நாங்கள், ''உங்கள் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரின் நிறம் கருஞ்சிவப்பாகத்தானே இருக்கிறது...'' என்று குறுக்கிட்டபோது, ''அது சாக்கடை நீர்க் கலப்பால் ஏற்பட்ட நிறம்....'' என்று போட்டாரே ஒரு போடு!

ஆம்பூர், வாணியம்பாடிக்கு அடுத்தபடியாகச் சுற்றுப்புறச் சுகாதாரம் அதிகமான அளவில் பாதிக்கப்படும் மற்றொரு ஊர் ராணிப்பேட்டை. வடாற்காடு மாவட்டம், தொழில் ரீதியில் பின்தங்கிய மாவட்டம் என்பதால், ராணிப்பேட்டையில் அரசாங்கம் தொழிற்பேட்டையை அமைத்தது. அதுவே சுற்றுப்புறச் சூழலுக்கும் தலைவலியாக அமைந்துவிட்டது! அங்குள்ள தொழிற்சாலைகளிலேயே மிக அதிக அளவில் பிரச்னையைக் கிளப்பிவிட்டிருப்பவை, தொழிற்பேட்டையின் மெயின் ரோடை ஒட்டியே அமைந்துள்ள தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு கெமிக்கல்ஸ் அண்டு குரோமேட்ஸ் லிமிடெட் நிறுவனமும் திருமலை கெமிக்கல்ஸ் நிறுவனமும்தான்.

தமிழ்நாடு கெமிக்கல்ஸ் நிறுவனத்துக்கு எதிரில், சாலையின் மறுபுறத்தில் ஒரு பெரிய குட்டை போல, பச்சை நிறத் தண்ணீர் தேங்கியுள்ளது. குட்டையை அடுத்தாற்போல் வீடு கட்டியுள்ள வக்கீல் கணேசன், ''இந்தக் கெமிக்கல்ஸ் ஃபாக்டரிகள் எல்லாம் வருவதற்கு முன்பே, ஹவுசிங் போர்டு எங்களுக்கெல்லாம் பிளாட்டுகளை விற்றுவிட்டது. வாங்கியவர்களில் என்னைப் போன்ற பலர், வீடுகளையும் கட்டிக் கொண்டுவிட்டோம். அப்புறம்தான் இந்த ரசாயனத் தொழிற்சாலைகள் முளைத்தன. பிரச்னையும் ஆரம்பமானது. இந்தத் துர்நாற்றம் வீசும் குட்டைக்குக் காரணமே, தமிழ்நாடு கெமிக்கல்ஸ், திருமலை கெமிக்கல்ஸ் ஆகிய இரண்டும்தான். இரண்டுக்கும் பொதுவாகக் கழிவு நீர்க் குளம் ஒன்று உள்ளது. அது நிரம்பி, கால்வாய் மூலம் ரோட்டைக் கடந்து, இங்கே வந்து தேங்கி, எங்களுக்குப் பிரச்னை தந்து கொண்டிருக்கிறது. பகலில் வெயில் ஏற ஏற, இந்தப் பகுதியே துர்நாற்றத்தைத் தாங்க முடியாமல் திணறும். தவிர, தெரியாமல் இந்தத் தண்ணீரைக் குடித்துவிடும் ஆடு மாடுகள்கூட செத்துப் போய்விடுகின்றன. இந்தப் பகுதியின் நிலத்தடி நீரின் சுவையையும் இது வெகுவாகப் பாதிக்கிறது. அருகிலுள்ள நிலங்களில் போய் இந்தக் கழிவு நீர் சேருவதால் அந்த நிலங்களும் பாதிக்கப்பட்டுப் பயிரிட முடியாமல் போய்விடுகின்றன....'' என்றார்.

இத்தனை பிரச்னைகளுக்கு முக்கிய காரணமான தமிழ்நாடு கெமிகல்ஸ் அண்டு குரோமேட்ஸ் நிறுவனத்திற்குப் போய், அவர்கள்

• இந்தச் சுற்றுப்புறச் சுகாதாரக் கேடுகளைத் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதுதான் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு நிறுவனம். இது கடந்த நான்கைந்து வருடங்களாய் இருந்து வந்தாலும், கடந்த இரண்டாண்டுகளில்தான் கொஞ்சம் சுறுசுறுப்பாய்ச் செயல்பட்டு வருகிறது.

• பெரிய தோல் தொழிற்சாலைகள், இப்போது மாசு கட்டுப்பாடு முயற்சிகளில் தீவிரமாய் இறங்கி, ட்ரீட்மெண்ட் பிளாண்ட்கள் அமைப்பதில் ஈடுபட்டுள்ளன. (ஆம்பூரில் மட்டும் சுமார் இரு டஜன் டேனரிகளில் இத்தகைய பிளாண்ட்கள் அமைக்கப்பட்டுள்ளனவாம்.)

• ட்ரீட்மெண்ட் செய்யப்பட்டு, வெளியேற்றப்படும் தண்ணீரால் ஆபத்தில்லையே தவிர, குடிக்க உபயோகிக்க முடியாது.

• சுகாதாரக் கேட்டை ஏற்படுத்துகின்றன என்று காரணம் காட்டிச் சுமார் 150 டேனரிகள் மீது கோர்ட்டில் கேஸ்கள் போடப்பட்டுள்ளன. ஆனால் பலர் 'ஸ்டே' வாங்கிவிட்டார்கள்.

• அரசாங்கத்தில் உயர் அதிகாரியாய்ப் பணியாற்றும் ஒரு விஞ்ஞானியுடன் 'ஆஃப் அஃபிஷியலாய்' பேசினபோது அவர் சொன்னது: "இப்போது நிறைய டேனரிகளில், எஃப்ளுயண்ட் ட்ரீட்மெண்ட் பிளாண்ட்கள் நிறுவப்பட்டுள்ளன என்பது உண்மைதான். ஆனால் அவை தொடர்ந்து உபயோகிக்கப்பட்டு, கழிவு நீர் சுத்திகரிக்கப்படுவதில்லை. மாசுக் கட்டுப்பாடு வாரிய ஆபீஸர்கள் திடீர் விசிட் செய்தால், அப்போது டேனரிகளில் நடக்கிற காட்சிகளைப் பார்க்க வேண்டுமே! பல நாட்களாக இயங்காத பிளாண்ட்டை இயக்க ஆபீஸர் தலையைக் கண்டதும்தான் ஆர்டர்கள் பறக்கும். ஆபீஸருக்குக் காப்பி, கூல் டிரிங்ஸ், இத்யாதிகள் கொடுத்துக் கவனித்துக் கொண்டே, 'இதோ போகலாம் ஸார்.... ஒரு நிமிஷம்.... இதோ சீஃப் மானேஜர் வந்துவிடுவார்... இதோ' என்றெல்லாம் சாக்குபோக்குக் காட்டிக் கொண்டே இருப்பார்கள். ஒருவழியாய் பிளாண்ட்டைப் பார்க்கப் போனால், அங்கே, 'நேற்றுவரை ஒழுங்காய்த்தான் இயங்கிக் கொண்டிருந்தது. இன்றைக்குத்தான்... கொஞ்சம் பிராப்ளம்....' என்பார்கள்!"

தொகுப்பு: மௌஷ்மி

பதிலை அறிய விரும்பினோம். அங்கே போனபோது, நிறுவனத்தின் மேனேஜிங் டைரக்டர் சுந்தரம் இருந்தார். பேட்டிக்கு ஐந்து நிமிடம் ஒதுக்கித் தாருங்கள் என்று நாங்கள் கேட்டபோது, உள்ளே சென்று திரும்பிய உதவியாளர், "எம்.டி. பிஸி. உற்பத்தி மானேஜர் உங்களைச் சந்திப்பார்" என்றார்.

காத்திருந்தோம். வெளியே போயிருந்த புரொடக்ஷன் மானேஜர் பாலகிருஷ்ணன் வந்ததும், நேராகச் சென்று எம்.டி.யைச் சந்திக்க இருவரும் சுமார் கால் மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். கடைசியில் புரொடக்ஷன் மானேஜர், "நாங்கள் பேட்டியெல்லாம் தரக்கூடாதே சார்...." என்றார்.

"நீங்கள் தொழிற்சாலை பற்றிய ரகசியங்களைச் சொல்லப் போவதில்லை. உங்கள் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர், சுகாதாரக் கேட்டை ஏற்படுத்தி வருகிறது என்பது கண்கூடு. இதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதைத்தானே சொல்லப் போகிறீர்கள்?" என்றபோது, "நாங்களும் கழிவு நீர் ட்ரீட்மெண்ட் பிளாண்ட் நிறுவியிருக்கிறோம். விஷத்தன்மை நீக்கப்பட்ட பின்புதான் கழிவு நீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் எந்த ஒரு ஆபத்தும் இல்லை" என்றார் அவர்.

"நாங்கள் உங்கள் கழிவு நீர் ட்ரீட்மெண்ட் பிளாண்ட்டைப் பார்க்கலாமா?" என்றபோது, மறுபடியும் எம்.டி.யைக் கேட்டுவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டு வந்தவர், "உங்களுக்கு அதைக் காட்ட இயலாது; சாரி" என்று சொல்லிவிட்டார்.

அடுத்து, இன்னொரு நிறுவனமான திருமலை கெமிக்கல்ஸுக்குப் போனோம். அந்தத் தொழிற்சாலையின் முக்கியமான பொறுப்பிலிருக்கும் ஒருவர் எங்களைச் சந்தித்தார். "எனது பெயரையோ படத்தையோ பிரசுரிக்காமல் தயவு செய்து விஷயங்களை மட்டும் பிரசுரியுங்கள்..." என்று பேச ஆரம்பித்தார்...

"எங்கள் தொழிற்சாலையில் ஸ்விஸ் மற்றும் இத்தாலிய நாடுகளின் ஒத்துழைப்புடன் மூன்றே முக்கால் கோடி ரூபாய் செலவில் ட்ரீட்மெண்ட் பிளாண்ட் நிறுவியிருக்கிறோம். எங்கள் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவே மிக மிகக் குறைவு. காரணம், கழிவு நீரிலுள்ள இரசாயனப் பொருட்களைப் பிரித்தெடுத்துச் சுத்த நீராக்கி, மறுபடியும் அந்த நீரையே நாங்கள் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். நீங்களே வந்து பாருங்கள். அதை நீங்கள் போட்டோகூட எடுத்துக் கொள்ளலாம்" என்று கூறி அழைத்துச் சென்றார்.

"இதுதான் கழிவு நீர்ச் சுத்திகரிப்பு பிளாண்ட். இங்கே வந்து சேரும் ரசாயனக் கழிவுகள் அடங்கிய நீர், இந்தப் பிளாண்டில் சுத்திகரிக்கப்பட்டு, நச்சுத்தன்மை நீங்கின நிலையில் மறுபடியும் எங்களாலேயே உபயோகப்படுத்தப்படுகிறது. அடுத்ததாக வெளியேறும் வாயு நிலையிலான கழிவையும் நாங்கள் சுத்தப்படுத்தி, விடுகிறோம். எனவே, எங்கள் தொழிற்சாலை, சுகாதாரக் கேட்டை உண்டு பண்ணுகிறது என்கிற பேச்சுக்கே இடமில்லை" என்றார். *

"மேலும், ராணிப்பேட்டை தொழிற்பேட்டையே, தவறான முறையில் இட்டமிடப்பட்ட ஒன்று. ஒரூர் தொழிற்பேட்டை மெக்கானிக்கல் இஞ்ஜினீரிங் தொழிற்சாலைகள் நிறைந்தது. எனவே, அங்கே இதுபோன்ற

* இவ்விஷயத்தில் சுற்றுப்புறச் சூழல் மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரியின் கூற்று முற்றிலும் மாறுபடுவது விசித்திரமே! காண்க, கலெக்டர் பேட்டி பக்கம் 62.

சுற்றுப்புறச் சூழல் சுகாதாரக் கேட்டிற்கு வாய்ப்புகள் இல்லை. ஆனால் ராணிப்பேட்டையோ ரசாயனத் தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அமைக்கப்பட்ட தொழிற்பேட்டை. இந்நிலையில் சாலையின் ஒருபுறம் தொழிற்சாலைகளும் மறுபுறம் மக்கள் வசிப்பதற்கான வீடுகளும் என்று திட்டமிட்டது மிகப் பெரிய தவறு. தொழிற்சாலைப் பகுதியிலிருந்து சுமார் பத்து கிலோ மீட்டராவது தள்ளி மக்கள் வசிக்கிற பகுதியை அமைத்திருக்க வேண்டும்'' என்றார் அவர்.

தொழில்வளம் நாட்டில் பெருக வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்களுக்கே இடமில்லை என்றாலும் அதைச் சரியான முறையில் திட்டமிட்டு அமைக்க வேண்டாமா? பின்விளைவுகளை முன்கூட்டியே தெரிந்து கொண்டு அதற்குத் தகுந்தாற் போல் நடவடிக்கைகளை எடுக்க அரசு தவறி விட்டது.

உதாரணமாகத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளையே எடுத்துக்கொள்வோம். இந்தத் தொழில் மூலம் மட்டும் இந்தியாவுக்கு ஆண்டுதோறும் ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. குறிப்பாக வடார்க்காடு மாவட்டத்திலுள்ள ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய ஊர்களிலும், அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லிலிருந்தும் மட்டும் ஆண்டுக்கு அறுநூறு கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. இது மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம்தான். ஆனால் உலகின் வேறெந்த நாட்டிலும் இந்த அளவுக்குத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இல்லை; நம் நாடுதான் முன்னணியில் நிற்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். என்ன காரணம்? இதனால் ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் சீர்கேடுதான் காரணம். உலக நாடுகள் பல, பதனிடப்பட்ட தோலை நம்மிடமிருந்துவாங்கிக்கொள்கின்றன. பதனிடுதலால் ஏற்படும் நச்சுத்தன்மையை நாம் அனுபவிக்க விட்டுவிடுகின்றன. அவை தப்பி விடுகின்றன. இதை நமது அரசு சிந்திக்க வேண்டும். உடனடியாகத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவு நீரைச் சுத்திகரிக்க ஆவன செய்ய வேண்டும். அது முடியாது என்றால், இப்பகுதிவாழ் மக்களின் குடியிருப்புக்குச் சிறந்த மாற்று ஏற்பாடுகளை வேறிடத்தில் செய்ய வேண்டும். நஷ்ட ஈடும் தரப்பட வேண்டும். இரண்டிலொன்று செய்யாவிட்டால், ஏற்கெனவே விஷமாகிவிட்ட ஆம்பூர், வாணியம்பாடி குடிநீர் மேலும் மேலும் விஷமாகி அந்தப் பகுதி விளைநிலங்களை மட்டுமல்ல; மக்களின் உடல்நலத்தையும் வெகுவாகப் பாதிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. இதுவே ராணிப்பேட்டைக்கும் பொருந்தும்.


— எஸ். சந்திரமௌலி

மேலட்டை வண்ணப்படங்கள், மற்றும் வடார்க்காடு தொடர்பான புகைப் படங்கள்: **கே.வி. ஆனந்த்**



''நீங்க ஆபரேஷன் பண்ணின கேஸ் பொழைச்சுக்கிட்டுதா? நம்ப முடியலையே!''

''முதல்ல நர்ஸ் வந்து சொன்னப்போ நானே நம்பலே!''



தரகர்: மாடு வாங்கிக் கொடுத்தேனே, என்ன கொடுக்குது?

இவர்: காலையிலே மூணு, மாலையில் ரெண்டு!

தரகர்: லிட்டரா?

இவர்: ஊகூம். உதை!



''எங்கள் கம்பெனி முதலாளியின் சாமர்த்தியம் யாருக்கும் வராது!''

''எப்படிச் சொல்றே?''

''பாரேன், ஒரு கப்பல் கவிழ்ந்துவிட்டது. அதை நீர்மூழ்கிக் கப்பல்னு ஒருத்தனிடம் விற்றுவிட்டார்!''

— கடுவை கோபால்சாமி



ரும் மேனி
கு ரெக்ஸோனா
Rexona
T AND GLOWING SKIN
மின்னி மிளிரும் மேனி...எந்நாளும் உங்கள் பொன்னான கனவு...நிறைவேற வரமளிப்பது ரெக்ஸோனா.
சரளம், கருவா, கிராம்பு, ஹபுஷா (தேவதாரம்) ஆகிய நாலு வகை இயற்கைத் தைலங்களின் நற்கலவையான ரெக்ஸோனா...சருமப் பராமரிப்பிற்கு இயல்பான வழியாகும்.
ரெக்ஸோனா
உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைக்கிறது
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
LINTAS RX 90 2416 TM

வேலூரைச் சுற்றி....




அண்ணா கலை அரங்கம்



சாது சுவாமிகள்

அண்ணாகலையரங்கமா? அலறி அடித்து ஓடு!




சத்துவாச்சாரியிலுள்ள தமிழ்நாடு வீ.வ. வாரிய வீடுகள்

●● ஓர் அரசுத் துறையே பொய் சொல்லுமா? இந்தக் கேள்வியை வேலூரின் புறநகர்ப் பகுதியான சத்துவாச்சாரியில் போய்க் கேட்டால், "ஓ! சொல்லுமே!" என்று சொல்லிவிட்டு, ஆதாரம் கொடுப்பார்கள். ஆமாம்! தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மலையடிவாரமான சத்துவாச்சாரி பகுதியில் 967 சதுர அடியில் வீடு கட்டித் தருவதாக விளம்பரம் செய்தது. அதற்கு ஒரு லட்சத்து முப்பத்தேழாயிரம் என்று விலையும் நிர்ணயித்தது. ஆனால் வீடு கட்டி முடிக்கப்பட்டு உரியவர்கள் குடிவந்தபோதுதான் வீட்டு வசதி வாரியம் பொய் சொன்ன குட்டு வெளிப்பட்டது. உண்மையில் கட்டிய வீட்டின் பரப்பு 860 சதுர அடிதான்! நூறு சதுர அடி பரப்பை வீட்டுக்காரர்கள் எல்லாருமாய்ச் சேர்ந்து இன்னமும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். கிடைத்த பாடுதான் இல்லை! இதைத் தவிர, ஒரு வசதியும் செய்துத் தரப்படாத நிலையிலும் ஒவ்வொரு வீட்டுக்காரரும் பராமரிப்புக்கென்று மாதா மாதம் அறுபது ரூபாயை வீ.வ. வாரியத்துக்குத் தண்டமாய் அழுது கொண்டிருப்பதாக அங்கலாய்க்கிறார் சத்துவாச்சாரி வாசியான மணி என்பவர்.

●● வேலூரில் உள்ள 'அண்ணா கலை அரங்கம்' அரசால் நடத்தப்படுகிறது. தினமும் அதில் சினிமா காண்பிக்கிறார்கள். அவ்வப்போது பொது நிகழ்ச்சிகளும் நடக்கும். ஆனால் உட்கார்ந்துதான் பார்க்க முடியாது. காரணம், அங்குள்ள அத்தனை இருக்கைகளும் பழுதடைந்த நிலை. கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்தால், அதிலுள்ள ஆணிகள் உடலைப் பதம் பார்க்கும் அபாயம். அதனால் பலர் அண்ணா கலையரங்கம் என்றாலே அலறியடித்துக் கொண்டு ஓடும் நிலைதான்!

●● ஜலகண்டேசுவரர் கோவிலுக்குள் ஒரு கிணறு இருக்கிறது. அபிஷேகத்துக்கு அந்தக் கிணற்றிலிருந்துதான் தண்ணீர் எடுக்கப்படுகிறதாம். கிணற்றைக் கம்பிச் சட்டம் போட்டு மூடியிருந்தாலும், அதன்மேல் 'இக்கிணற்றுக்குள்ளே காசு போட்டு, அது படிக்கட்டில் நின்றால் நினைத்த காரியம் நிறைவேறும்" என்று போர்டு எழுதி வைத்திருக்கிறார்கள். கிணற்றினுள் எட்டிப் பார்த்தபோது, உள்ளே ரிசர்வ் பாங்கின் சில்லறைப் பெட்டகம்போல் காசுகள் குவிந்து கிடந்தன. பலரும் காசுகளைப் படிக்கட்டில் போட முயன்றுமுயன்றுதோற்றுக்கொண்டே இருந்தார்கள். அதைப் பார்த்தபோது, இப்படி ஒரு மூட நம்பிக்கையை ஆலய நிர்வாகிகளே வளர்க்கலாமா என்றுதான் வருத்தத்துடன் எண்ணத் தோன்றியது.

●● வேலூரிலுள்ள டவுன் பஸ்கள் 'சென்னையில் ஓடும் 'வி' சர்வீஸ் மாதிரி வேக



* குகைக் கோயில்

பட்டு. காசித் தீர்த்தம் வழியாக, லப்பை கிருஷ்ணாபுரம் வரை செல்லும் பதினாறு கி.மீ. நீளமுள்ள சாலை நீண்ட காலமாகப் பராமரிக்கப்படவில்லை என்பதுதான் அது. "அரசுக்கும், உள்ளூர் எம்.எல்.ஏ.வுக்கும் சொல்லிச் சொல்லி அலுத்துப் போனது. ஒருவேளை அடியேனின் உயிரைப் பலி கொடுத்தால்தான் இந்தச் சாலை பராமரிக்கப்படும் என்றால், அடியேன் உயிரைப் பலி தரவும் தயாராய் இருக்கிறேன்..." என்று சுவாமிகள் மனம் நொந்து சொல்கிறார்.

மாகப் பாய்ந்து சென்று விபத்துக்களை உருவாக்கு வதாகப் பலரின் குற்றச்சாட்டு. அது மட்டுமா? பஸ்ஸை ஸ்டார்ட் செய்த பிறகும் பத்துப் பதினைந்து நிமிடங்களுக்குப் பஸ்ஸை நகர்த்துவதே இல்லை. அதனால் ஸ்டார்ட் செய்த பஸ்தான் முதலில் போகும் என்று நினைத்து பஸ் ஏறுபவர்களுக்கு வயிற்றெரிச்சல்தான் மிச்சமாகும். நாங்கள் பல முறை அனுபவித்த வயிற்றெரிச்சல் இது.

●● வேலூருக்கு அருகாமையில் இருப்பது காசிக்குட்டை என்னும் ஊர். குட்டை என்பது என்னவோ போல் இருப்பதால் 'காசித் தீர்த்தம்' என்று பெயர் மாற்றம் செய்திருக்கிறார், அங்குள்ள சாது சுவாமிகள் என்னும் சாமியார். பூண்டி மகானின் சிஷ்யரான இவருக்கும் ஒரு குறை: வேலூரிலிருந்து விருதம்பட்டு. காசித் தீர்த்தம் வழியாக...

●● பல இடங்களிலும் குறைகளையே கண்ட எங்கள் கண்களுக்கு ஓரிடம் மட்டும் பளிச்சென்று மகிழ்ச்சிகரமாய்த் தெரிந்தது. ஆனால் அது வேலூர் நகருக்குள் அல்ல; வெளியில். காவேரிப்பாக்கத்திலிருந்து நெமிலி செல்லும் பாதையோரத்தில் யார் கண்ணுக்கும் சட்டென்று புலப்படாத மாதிரி இருக்கிறது மகேந்திரவாடி குகைக் கோயில். இது ஒரே பாறையால் ஆனது. முராரி என்னும் திருமாலுக்காகப் பல்லவர் காலத்தில் (கி.பி. 580 — 638) அமைக்கப்பட்ட இக் குகைக் கோயிலின் அமைப்பு எளிமையாக உள்ளதுதான் தனிச் சிறப்பு. அமைதியான இடம். அற்புதமாகப் பராமரித்து வரும் தொல்பொருள் இலாகாவுக்கு ஒரு ஷொட்டு!

— நமது நிருபர்கள்



"அரசியல்வாதியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டது ரொம்பத் தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"முதலிரவில் சோடா கொண்டு வராமல் ஏன் பாலைக் கொண்டு வந்தாய் என்று சண்டைக்கு வந்துவிட்டார்!"

— இலகா

மேலதிகாரி: "வருஷக் கணக்கா இந்த ஏரியாவில் திருட்டு நடந்துக்கிட்டிருக்கே... நீங்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கீங்க?"

இன்ஸ்பெக்டர்: "போலீஸ் ஸ்டேஷன் உட்பட எல்லா இடத்துலேயும், 'திருடர்கள் ஜாக்கிரதை'ன்னு போர்டெல்லாம் மாட்டி வச்சிருக்கோம் சார்!"

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா



திருடன் 1: என்னால ஓடவே முடியாதே. மாட்டிக்கிட்டா என்ன பண்றது?

திருடன் 2: அதைப் பத்தி நீ ஏன் கவலைப் படறே? நீ திருடிக் கொடு. நான் ஓடறேன்!

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

"உன் மனைவி பாகீரதியைப் 'பாகீ'ன்னு கூப்பிடாம 'பாக்கி'ன்னு கூப்பிடுறியே?"

"அப்படிக் கூப்பிட்டாலாவது வரதட்சணை பாக்கி வராதா என்றுதான்."

— இலகா

— இவர்கள் —
இந்தியர்கள்



தலைப்பை வைத்துக் கொண்டு அரசியல் நெடி வீசும் படம் என்று யாராவது நினைத்துக் கொண்டு போனால் அவர்களுக்கு நிச்சயம் ஒரு மென்மையான அதிர்ச்சி காத்திருக்கிறது. ஒரு காதல் கதையாகத் தொடங்கி, குடும்பக் கதையாக ட்ராக் மாறி ஓடும் ஒரு படம்.

ராமராஜன்தான் ஹீரோ. இவர் டைரக்டராக இருந்தவர் என்று நம்புவதற்குக் கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கிறது. அது என்ன எப்போது பார்த்தாலும் விளக்கெண்ணெய் வழிகிறாற்போல் ஒரு முக பாவம்.

ராமராஜனின் காதலைப் பெறுவதற்காக மாதுரி டன் டன்னாய்க் கடிதங்கள் அனுப்புவதென்ன, போஸ்டர்கள் ஒட்டுவதென்ன, அப்புறம் பெட்டிஷன் பெரிய நாயகியின் யோசனைப்படி காதலனை போலீஸ் ஸ்டேஷன் வரை இழுத்துச் சென்று கட்டாயத் தாலி கட்ட வைப்பதென்ன? நம்ப முடியாத சுவையான மிகை. மாதுரி குறை சொல்ல முடியாத அளவிற்குப் பட்டை தீட்டிக் கொண்டுவிட்டார்.

கதையில் ஒரு சிறுகதையாக அமையும் எம்.ஆர். ராதாரவி — வஸந்த் காம்பினேஷனில் ராதாரவி இன்னொரு வைரம். அந்தத் தூக்கி வாரப்பட்ட கிராப், எழுத்துப் போட்ட பனியன் வாங்கும் பாங்கு, மகனிடம் அடங்கி அடங்கிப் போகும் தன்மை ஜோர். கசாப்புக் கடை ஆசாமி கடைசியில் தான் பாலூட்டி வளர்த்த கிளியை 'கைமா' செய்துவிட்டு, போலீஸ் ஜீப்பில் ஏறி ஒரு துப்பு துப்புகிறாரே, க்ளாஸ். படத்துக்குப் படம் நடிப்பைப் புடம் போட்டுப் புடம் போட்டு வெளிப்படுத்துகிறார் ராதாரவி.

இடைவேளைக்கு முன்னால் மாதுரியைப் பார்த்து 'நீ தோத்துட்டே, தோத்துட்டே' என்று ராமராஜன் கூறுவதைப் பார்க்கும் போது ஏதோ பெரிய வெடி வெடிக்கப் போகிறது என்று பார்த்தால், கல்யாணமாகாத மூன்று தங்கைகளைக் காட்டுகிறார் ஹீரோ. கொஞ்சம் 'சப்'தான். ஆனாலும் அதற்கப்புறம் கதையைப் பின்னியிருக்கும் விதம் ஒன்றும் சோடை போய்விடவில்லை. ஒவ்வொரு தங்கையின் கல்யாணத்தின் போதும் ஒரு சிக்கலை வைத்து, அதை மிக ஜாக்கிரதையாக விடுவித்திருக்கிறார் டைரக்டர்.

எஸ்.எஸ். சந்திரன் ஜோடி க்ளைமாக்ஸின் போது தலையைக் காட்டிக் களேபரம் பண்ணுவது சரியான ஷாக் ட்ரீட்மெண்ட் — நமக்கு!

பாடல் காட்சிகளை வித்தியாசமாக எடுக்க முயற்சி செய்திருக்கிறார்கள்.

வசனங்களை மனத்தில் பதிகிற மாதிரி எழுதியிருக்கிறார்கள்.

பெட்டிஷன் பெரிய நாயகியாக வரும் லக்ஷ்மி கடைசிவரை ஒட்டாமல் நடித்திருப்பதால், அவர் நடிப்பு மனத்தில் ஒட்டவில்லை என்பது தவிர துவக்கத்திலிருந்து கடைசி வரை அலுப்பு தட்டாமல் திரைக்கதையைச் சொல்லியிருக்கும் டைரக்டரை நிச்சயம் பாராட்டித்தான் ஆக வேண்டும்.

— ஜெயமன்மதன்




ஜனாதிபதி தேர்தலின் முடிவு!
ஜெயில்சிங்
இந்திய மக்கள்
2 மாதகாலத்தில் நீக்கப்பட வேண்டியவர்கள் ___ மந்திரி சபை மாற்றம்
காலைப் பிடிச்சு விட முடியாதுன்னு சொல்றவங்க போங்க வெளியே!
நாற்காலியிலே உட்கார்ற சுகமே தனி!



கல்கி

1987 ஜூலை 26
மலர் 45 இதழ் 52
பிரபவ ஆடி 10



ஜால்ரா ஜனநாயகம்!

ஜனநாயகம் என்பது, பல்வேறு கட்சிகள் தனித் தனியாகவோ, கூட்டணி அமைத்தோ, மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சியைக் கைப்பற்ற முயல்வது மட்டுமே என்று நமது நாட்டில் கருதப்படுகிறது. பெரும்பான்மை இடங்களைச் சட்ட மன்றத்தில் அல்லது நாடாளுமன்றத்தில் கைப்பற்றி, ஒரு கட்சி ஆட்சிக்கு வந்துவிட்டால், பிறகு அந்தக் கட்சித் தலைவர் சொன்னதே சாட்சி, கொண்டதே கோலம், வைத்ததே சட்டம் என்றாகிவிடுகிறது. உண்மையில் இது சர்வாதிகாரம்தானேயொழிய ஜனநாயகமல்ல.

மெய்யான ஜனநாயகத்தில் அதிகாரம் மக்களிடம் இருக்கும். கிராமப் பஞ்சாயத்து வரை ஜனநாயகம் தழைத்துப் படர்ந்திருக்கும். வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், காரியாலயங்கள் முதலியவற்றிலும் ஜனநாயகப் பண்புகள் நடைமுறையில் காணப்படும். அச்சமற்ற விவாதங்கள் நடக்கும். தவறுகள் எந்தத் தரப்பில் இருந்தாலும் சரி, அவர்கள் கூச்சமோ, தயக்கமோ, கர்வமோ காட்டாமல் இயல்பாகத் தங்களைத் திருத்திக் கொண்டு விடுவார்கள். இதனால் நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டு நாடு வளம் பெறும். இவை எல்லாவற்றிலும் மிக முக்கியமானது உட்கட்சி ஜனநாயகம். இந்தத் தத்துவம்தான் ஜனநாயகத்தில் பதவிக்கு வரும் ஒரு கட்சியின் தலைவன் சர்வாதிகாரியாக மாறாமல் தடுத்து நிறுத்துகிறது.

நமது எம்.பி.க்களும், எம்.எல்.ஏ.க்களும், மந்திரிகளும், முதல்வர்களும், சபாநாயகர்களும், ஏன், பிரதமரும்கூட எத்தனையோ தடவை அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் போய் வந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு தடவையாவது அவர்கள் அந்நாடுகளில் உட்கட்சி ஜனநாயகம் எப்படிச் செயல்படுகிறது என்று ஆராய்ந்து அறிந்திருக்கிறார்களா? சந்தேகமே. அப்படியே அறிந்திருந்தாலும் அதனால் இவர்கள் பயன் பெறவில்லை என்பது நிச்சயம்.

இவர்கள் பெரும்பாலும் ஜால்ராக்களாக இருக்கிறார்கள். தப்பித் தவறி யாராவது, தைரியத்தைத் திரட்டிக் கட்சித் தலைமையை விமர்சித்தால், அவர் 'துரோகி' என்று முத்திரை குத்தப்பட்டுக் கட்சியை விட்டே வெளியேற்றப்படுகிறார். இதற்குச் சமீபத்திய எடுத்துக்காட்டு அருண் நேரு, வி. ஸி. சுக்லா, அரிஃப் முகமது கான் ஆகிய மூவரும் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பது. இவர்களுக்குக் கல்தா கொடுத்ததற்கு ஒரு காரணமும் கட்சி மேலிடம் தரவில்லை என்பதோடு, தன் நிலை விளக்கம் தர இவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கூடத் தரப்படவில்லை. இதுவா ஜனநாயகம்?

இவர்கள் செய்த குற்றம் என்ன? காங்கிரஸுக்கு விரோதமான மாற்றுக் கட்சிகளுடன் உறவு வைத்துக் கொண்டார்களா? இல்லை. பிரதமரைப் பதவி இறக்க முயன்றார்களா? அதுவுமில்லை. மாறாக, காங்கிரஸுக்கும் பிரதமருக்கும் விசுவாசத்துடன் தாங்கள் இருப்பதாகவே திரும்பத் திரும்பக் கூறினார்கள். அவர்கள் செய்த குற்றமெல்லாம், நாட்டு நலனைக் கருதி, தங்களுக்குச் சரி என்று தோன்றிய சில மாற்றுக் கருத்துக்களைப் பிரசாரம் செய்ததுதான்.

இந்த மாற்றுக் கருத்துக்கள் ஒரு கடித வடிவில் வி.பி. சிங்கினால் வரையப்பட்டுப் பிரதமருக்குப் போயிருக்கிறது. அதைப் பத்திரிகையில் படிக்கும்போது பெருமிதத்தால் மெய்சிலிர்க்கிறது. 'அடடா, இந்தக் கருத்துக்களைப் பிரதமர் ஏற்று அமல்படுத்தினால் நாடு எப்படி சிறக்கும்! எவ்வாறெல்லாம் முன்னேறும்!' என்ற எண்ணத்தில் மனம் பூரிப்படைகிறது.

ஆனால் ராஜீவ் என்ன செய்கிறார்? வி.பி. சிங் மீது கை வைக்கப் பயந்து (இது வரை), அவருடன் உறவாடிய குற்றத்துக்காக வேறு மூவரைப் பழி வாங்குவதுபோல் கட்சியிலிருந்து வெளியேற்றுகிறார்! உட்கட்சி ஜனநாயக உரிமைகளை ராஜீவ் மதிக்கத் தயாராக இல்லை. கட்சிக்குள் இருந்தபடியே கட்சிக்கும் ஆட்சிக்கும் நாட்டுக்கும் நலன் பயக்கக் கூடிய மாற்றுக் கருத்துக்களை யாரும் வெளியிடுவதை ராஜீவால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை! இம்மூவரையும் வெளியேற்றியதன் மூலம், மற்றவர்களுக்கும் ஓர் எச்சரிக்கை செய்திருக்கிறார். அதுவும், ஜனாதிபதி தேர்தலில் இவர்களுடைய வோட்டுக்களையும் இவர்களுடைய ஆதரவாளர்களின் வோட்டுக்களையும் ஆர்.வி.க்காகக் கோரிப் பெற்ற கையோடு, இவர்களைப் பழி வாங்கியிருப்பது அநாகரிகத்தின் உச்சம்.

பிரதமர், ஜால்ரா ஜனநாயகத்தையே மிகவும் விரும்புவது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் தொடர்ந்து ஜால்ரா போட்டுக் கொண்டே இருக்கப் பலர் தயாராக இல்லை என்பதையும் அமைச்சர் முஃப்டி முகமது சயீதின் ராஜினாமா உணர்த்துகிறது. உடனடியாகப் பிரதமர் திருந்தினாலன்றி ஜால்ராக்களின் தப்புத் தாளங்களே அவரைத் தத்திங்கிணத்தோமில் திணற அடித்து வீழ்த்தி விடும்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மாநகராட்சி— தத்தெடுக்க வேண்டும்!

* மேன்மைமிகு எம்.எல்.ஏ.க்கள்; மாண்புமிகு மந்திரிகள்' தலைமையகத்தில் உள்ள 'வஞ்சப் புகழ்ச்சி அணி'யை இன்னும் சிறிது நீட்டி, மக்கள் வயிற்றில் அடிக்கிறார்களே' ஏன் தெரியுமா? வயிற்று வலி — அதை சரிப்படுத்தத்தான் என்றும் சொல்லியிருக்க லாம். வாழ்க ஜனநாயகம்! வளர்க குடிமக்கள்!

நாகப்பட்டினம்., எஸ். சத்தியாராஜன்.

* சிரித்துச் சிரித்து வயிற்றை வலிக்க வைக்கத் தலை யங்கத்தினாலும் முடியும் என்பதை நிரூபித்துவிட்டீர் கள்.

போடிநாயக்கனூர். எம். ரமேஷ் குமார்.

* காவல்துறையில் கீழ்மட்டத்திலிருந்து, மேல் மட்டம்வரை இருக்கும் அதிகாரிகளின் நடத்தைகளை விமர்சித்தும் பாராட்டியும், அரசியல்வாதிகளின் செயலுக்கு சவுக்கடி கொடுப்பதுபோலும் இருந்தது சி.வி. நரசிம்மனின் பேட்டி. இதன்மூலம் காவல் துறை வரலாற்றில் ஒரு 'திருப்பு முனை' கூட ஏற்படலாம்!

குத்தாலம், எஸ். ராஜா.

* 'ஆறுதலுக்கு ஒரு மாறுதல்' கேலிச் சித்திரங்கள் வரிசையில், ஜெயவர்த்தனா தமிழ் ஈழத்தைத் தமிழ் மக்களுக்குப் பிரித்துக் கொடுத்து விடுவதாக ஒரு கார்ட்டூன் போட்டிருந்தால் அதைப் பார்த்தாவது ஆறுதலடைந்து கொள்வோம்.

விருத்தாசலம். டி. நாகராஜன்.

* மனநோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து மறு வாழ்வு கொடுக்கும் SCARF போன்ற உன்னதமான சமூக சேவை நிறுவனங்களுக்கு நமது அரசு நிறைய உதவி செய்ய வேண்டும். செய்யுமா?

மயிலாடுதுறை. எஸ். சிவசங்கர்.

* 'மன நோய்' சுகாதார அமைச்சகப் பட்டியலிலும் சமூக நலத்துறை அமைச்சகப் பட்டியலிலும் இடம் பெறவில்லை என்ற அதிர்ச்சியைக் கல்கியின் கட்டுரை களைந்தெறியும் என்றே நம்புகிறோம்.

கோடிக்கரை. எஸ். ஷாந்தினி.

* எம்.ஜி.ஆர். ஆட்சியில் தங்களைக் கவர்ந்த அம்சம் என்ன? — என்ற கேள்விக்கு, அவருடைய அளவிட முடியாத மனிதாபிமானம் எனப் பதிலளித்ததன் மூலம், எவர் மீதும் தனக்குத் தனிப்பட்ட விருப்போ வெறுப்போ இல்லை என்பதைத் தெளிவு படுத்திவிட் டார் தராசு. பாராட்டுக்கள்!

சென்னை—15. வி. முரளி.

* 'உமியும் தவிடும் நாட்டையே உயர்த்தும்' கட்டுரை படித்தேன். உமியை விறகுகளிலும், மரத்தூள் அடுப்பு களில் மரத்தூளுக்கு மாற்றாகப் பயன்படுத்தலாம். இது சிக்கனமான, சிரமமில்லாத எரிபொருள் என்பது எங்கள் வீட்டில் கண்ட அனுபவபூர்வமான நிஜம்.

திருத்துறைப்பூண்டி. டி.ஜே. பிரிட்டோ.

* நிஜமாகவே ஜெயமோகனின் 'நுரைக்குமிழி' உள்ளத்தைத் தொட்டது. மனசுக்குத் தர்ம நியாயம் எல்லாம் தெரியாது என்ற நிதர்சனமான, ஆழமான உண்மை, ஒரு நிமிடம் நம் மனத்தைச் சுடுகிறது. யதார்த்தமான முடிவை ஜீரணிக்க முடியவில்லை. மனிதன் பெரும்பாலும் தன் தவறை உணருவதில்லை; ஆனால் பிறரிடமிருந்து மட்டும் நியாயத்தை எதிர் பார்க்கிறான் என்பதை அழகாய், தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார், கதாசிரியர். அடிமனத் தின் நுண்ணிய வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் அவரது படைப்புக்கு அன்பார்ந்த பாராட்டுக்கள்.

சாலிகிராமம். இந்திரா விஜயகுமார்.

* நகராட்சிப் பள்ளியில் பயின்று, நல்ல மதிப்பெண் பெற்றுச் சென்னை மாநகராட்சிக்கு நற்பெயரை எடுத் துக் கொடுத்த பத்மாவதியை, மாநகராட்சி தத்து எடுத்துக் கொள்ள வேண்டும். வெறும் ஆயிரம் ரூபாய் பரிசு கொடுத்ததோடு நின்றுவிடாமல், முந்நூறாவது ஆண்டைக் கொண்டாட இருக்கும் மாநகராட்சி பத்மாவதியின் மேற்படிப்புச் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் அப்பள்ளியின் ஆசிரியப் பெருமக்களையும் மாநகராட்சி கௌரவிக்க வேண்டும். அப்போதுதான் மாநகராட்சிப் பள்ளிகளின் மீது அனைவருக்கும் ஒரு நம்பிக்கை ஏற்படும். மாநகராட்சி ஆசிரியர்களும் உற்சாகத்தோடு பணிபுரிவார்கள்.

சென்னை—39. சி.தெ. இளமுருகன்.

* போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு பென்ஷன் திட்டம் என்று அமைச்சர் அறி வித்துவிட்டார் என்று நீங்கள் கேட்டவை பகுதியில் கூறுகிறீர்கள். ஆனால் நாங்கள் அறிந்தவரையில் இது எம்.ஜி. ஆர். ஆட்சி யின் வாய்ச்சவடால்தான். எப்படி என்கிறீர் களா? விளக்குகிறேன்:

1972—ஆம் ஆண்டுவரை தமிழகத்தில் உள்ள அரசு பஸ்கள் தமிழக அரசு போக்கு வரத்துத் துறையின் கீழ் இயங்கி வந்தன. இந்த அரசு இலாகாவில் பணியாற்றியவர் களுக்கு அரசு ஊழியர்களுக்கு உள்ள விதி களின்படி பென்ஷன் உண்டு. 1972 முதல் போக்குவரத்துக் கழகங்கள் ஆரம்பிக்கப் பட்டன. இவை அரசு இலாகா அல்ல; பென்ஷன் விதிமுறை கிடையாது. இப் போது அமைச்சர் என்ன கூறியிருக்கிறார் என்றால், "தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையில் பத்தாண்டு பணியாற்றி, பிறகு மாற்றலாகி போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்குப் பென்ஷன் திட்டம் அமுலாக்கப்படும் என்று. அவர் கூறியுள்ளபடி பார்த்தால், போக்குவரத்துக் கழக ஊழியர்களில் ஐந்து சதம் பேர் ஏற் கெனவே தாங்கள் பெற உரிமையுள்ள பென்ஷன் தொகையைத்தான் பெறுவார் கள். மீதி 95% பேருக்குப் பட்டை நாமம்!

சேலம். எஸ்.ஜி. கேஷவ்ராமன்.




ஒரு கனவு நனவாகிறது!

ஒரு பைலட்... அதுதான் அவன் எப்போதும் ஆக விரும்பியது. ஒரு குழந்தையாக இருந்தபோதே அவனது பேச்செல்லாம் அது பற்றித்தான் இருக்கும். ஒரு நாளைக்கு இரு தடவை ஹார்லிக்ஸைக் குடித்துப் பெரியவனாக, வலுவுடன் வளர் என்று அவனுக்கு நான் சொன்னது நினைவிருக்கிறது.

இப்போது, அதெல்லாம் உண்மையாகவே நடந்துவிட்டது. ஒரு நாளைக்கு இரண்டு வேளை ஹார்லிக்ஸ் குடிக்கும் பழக்கத்தை அவனுக்கு நாங்கள் ஏற்படுத்தியது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இத்தனை வருடங்களிலும் அவனுக்கு அது உறுதுணையாக இருந்து வந்துள்ளது.



வளரும் குழந்தைகளுக்கு நலமளிப்பது.



சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

HMM-9240 TAM

மனம்

நா. நாகூராஜன்

வீட்டில் அன்றைக்கு யாருக்கும் சாப்பிடக் கூட இஷ்டமில்லை. எடுத்ததற்கெல்லாம் எரிச்சல்தான் வந்தது.

அப்பா வேலையைச் சாக்கு வைத்து வெளியூருக்குக் கிளம்பிப் போய்விட்டார். போகிற போது ஜமுனாவையும் அம்மாவையும் எச்சரித்து விட்டுத்தான் போனார்.

"இதோ பாரு ஜமுனா... அவ கூப்பிட்டா இவ கூப்பிட்டான்னு நீ கலாவோட கல்யாணத்துக்குப் போனியோ, எனக்குக் கெட்ட கோபம் வரும். அவன் என்னை அவமானப் படுத்திட்டான். சொந்த அண்ணன்னு கூடப் பாராமல் பெண்டாட்டி வீட்டுக்காரங்க பணத்தைப் பார்த்து அவன் புத்தி பேதலிச்சிடுத்து. இல்லாட்டா இத்தனை வீட்டுக்குப் பத்திரிகை கொடுத்தவன் எனக்குக் கொடுக்காமல் இருப்பானா?"

ஜமுனாவிற்கு அப்பாவின் ஆதங்கம் புரிந்தது. சின்ன வயதிலேயே வேலைக்குப் போய்க் குடும்பத்தைத் தோளில் தாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுச் சித்தப்பாவை ஆளாக்க அவர் பட்ட கஷ்ட நஷ்டங்கள் புரிந்தது.

"சரிப்பா..."

"உனக்குச் சங்கடமாத்தான் இருக்கும். கலாவும் நீயும் நல்ல ஃப்ரண்ட்ஸ். சாயங்காலம் நான் வந்துடுவேன். அம்மாவோ, தம்பியோ யாரும் போயிடாம பார்த்துக்கோ. இந்த அப்பாவோட மானம் உன் கையிலம்மா..." என்று சொன்னபோது அந்த நாற்பத்தைந்து வயது மனிதர் சின்னக் குழந்தையாக மாறிவிட்ட மாதிரி ஜமுனாவிற்குத் தோன்றியது.

"அப்பா நீங்க தைரியமாப் போயிட்டு வாங்கோ..." என்றாள்.

அவர் இறங்கி நடந்தார்.

அம்மா ஜமுனாவைச் சாப்பிடக் கூப்பிட்டாள்.

"இந்நேரம் தாலி கட்டியிருப்பாங்களா?" என்று அம்மா கேட்டாள்.

"ச்சே... அழகா இந்நேரம் கல்யாணச் சாப்பாடு சாப்பிட வேண்டியது. அப்பாவால கெட்டது." என்று ஜோக் அடித்தான் பிரபா.

ஜமுனாவிற்கு மனம் கனத்துக் கிடந்தது.

டைப்ரைட்டிங் தோழியிடம் கலா தன்னைக் கண்டிப்பாகக் கல்யாணத்திற்கு வரச் சொன்னதும் பத்திரிகை கொடுத்ததும் அப்பாவிற்குத் தெரியாது.

"கலா ரொம்ப ஃபீல் பண்ணிச் சொன்னும்மா ஜமுனா. நீ மட்டுமாவது கண்டிப்பா கல்யாணத்துக்கு வரணுமாம். சண்டையெல்லாம் பெரியவங்களுக்குள்ளே தானாம்..." என்றாள் தோழி.

இன்று கல்யாண மண்டபத்தில் ஜமுனாவை எல்லோரும் எதிர்பார்த்திருப்பார்கள். தலைக்குத் தலை வராதது பற்றி வருத்தம் தெரிவிப்பார்கள். ஆனால் யாருக்கும் உண்மையான காரணம் தெரியாது. அதை வெளியில் சொல்லவும் முடியாது.

ஜமுனாவிற்கு முன்னால் கலாவுக்குக் கல்யாணம் நடக்கிறதே... அதைப் பொறுக்க முடியாததால்தான் வரவில்லை என்று நினைப்பார்கள். அதுதான் உலகம்!

ஜமுனாவின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது.

அம்மா சாப்பிட்ட களைப்பில் சமையலறை மூலையில் ஒரு பலகையைத் தலையணையாக வைத்து உறங்க ஆரம்பித்தாள்.

பிரபா நண்பனைப் பார்க்க வெளியில் கிளம்பினான்.

ஜமுனா அப்பாவை நினைத்துக் கொண்டாள்.

வேலையில் மனம் நிலையாமல் அவரும் பெயருக்குப் பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பார், அங்கே?

அப்பா இன்று பூஜை செய்கையில் நீண்ட நேரம் கண்ணீர் மல்க இருந்தது ஜமுனாவுக்குத் தெரியும்.

பிரபாவின் வேலை வாய்ப்பும், ஜமுனாவின் கல்யாணமும் தவிர வேறு ஒரு பிரார்த்தனையும் இருக்க வேண்டும் அதில்!

கலாவுக்காகப் பிரார்த்தனை செய்திருப்பார்!

ஜமுனாவுக்கு முதலில் சித்தப்பா ஏற்பாடு செய்த பிள்ளை வந்து பார்த்து விட்டுப் போன போது கூட அப்பா பூஜையில் அதிக நேரம் செலவழித்தார்.

அந்த இடம் முடியவில்லை.

சித்தப்பா தம் மகளுக்கு இவ்வளவு செய்கிறேன் என்று வருகிறவர்களிடம் பெருமையடித்ததால், அவர்களும் நிறைய எதிர்பார்த்ததால் — அந்த இடம் அமையவில்லை.

அதில் ஆரம்பித்தது விரிசல்!

சித்தப்பாவின் வியாபார சாதுர்யமான பேச்சு, அப்பாவால் தாங்கிக் கொள்ள முடியாததாக இருந்தது.

"இப்படியெல்லாம் பொய் சொல்ல வேண்டுமா?" என்பார்.

ஜமுனாவிற்குச் சித்தப்பாவின் வாய்ப்பந்தல் ஆச்சரியத்தையும் பயத்தையும்தான் தந்தது.

"பேச்சுச் சாமர்த்தியம் இல்லாம இருந்தே ஜமுனாவுக்கு இந்த ஜன்மத்துல கல்யாணம் ஆகாது..." சாதாரணமாகச் சித்

தப்பா சொன்ன வார்த்தை அப்பாவின் கோபத்தைக் கிளப்பிவிட்டது.

"அவளுக்கு எப்படிக் கல்யாணம் நிச்சயம் பண்ணணும்னு எனக்குத் தெரியும். நீ வந்து கெடுக்காமல் இருந்தால் சரி" என்றார்.

அன்று எழுந்து போனவர்தான்.

கலாவின் கல்யாணப் பத்திரிகையில் அப்பாவின் பெயர் இல்லாததை எல்லாரும் ஜமுனாவிடம் சொன்னார்கள்.

ஜமுனா அவர்களுக்குப் பத்திரிகை வராததை யாரிடமும் சொல்லவில்லை.

கல்யாண ஏற்பாடுகள் — தடபுடல்கள் — பெரிய செலவுகள் — பிரம்மாண்டமான கல்யாண மண்டபம் — எல்லாச் செய்திகளும் விரும்பியோ, விரும்பாமலோ பிறர்



மூலப் பேச்சு வாக்கில் ஜமுனாவுக்குக் கிடைத்துக் கொண்டுதான் இருந்தது.

"அவன் பண்ற பந்தாவுக்குக் கேட்கவா வேணும்..." என்றார் அப்பா!

கல்யாணப் பத்திரிகையே புது மாடலில் நிறைய ஜிகினா வேலைகளுடன் ஒரு புஸ்தகம் மாதிரி இருந்தது.

ஜமுனா ரகசியமாக அதைத் தன் கைப் பையில் வைத்திருக்கிறாள். கிழித்துப் போடுவது அபசகுனமாகத் தோன்றியது.

நேற்று வந்த உறவினர்கள் கூட அவர்களுக்கு அழைப்பு இல்லை என்று தெரிந்ததும் ஆச்சரியப்பட்டுத்தான் போனார்கள்.

"நிஜம்மாவா ஜமுனா...?"

இந்த நேரத்தில் சாப்பாடு முடிந்திருக்கும். கலா தன் புதுக் கணவனைத் தன் தோழிகளுக்கு அறிமுகம் செய்து கொண்டிருப்பாள்.

நீண்ட நேரச் சடங்குகளை நிறைவேற்றிய பின்னர் இப்பொழுதுதான் அவர்களுக்குப் பேசிக் கொள்ள நேரம் கிடைக்கும்.

கல்யாண உடையில் நகை அலங்காரங்களுடன் கலா எப்படி இருப்பாள்...? இனிமேல் பழைய மாதிரி இந்த வீட்டுக்கு வருவாளோ? அவள் கணவன் எப்படி இருப்பான்...?

அம்மா விழித்துக் கொண்டாள்.

"என்ன ஜமுனா...? நீ தூங்கலியா?"

"இல்லேம்மா."

"போஸ்ட்மேன் போயிட்டானா...?"

"தெரியலே."

"துணி துவைச்சிக் காயப் போட்





'ரைட்' ராதிகா

கதை: ராஜா பாலசந்தர்
படம்: உமாபதி



டியா?''

''இல்லை....''

''பின்னே என்னதான் பண்ணினே?''

ஜமுனா அம்மாவுக்குப் பதில் சொல்லவில்லை. வீணாகப் பேச்சை வளர்க்க விருப்பமில்லாமல் எழுந்து போனாள்.

அம்மாவிற்கும் வருத்தமாகத்தான் இருக்கும். இருந்தாலும் அதையெல்லாம் வேலையில் ஈடுபட்டு மறந்து விடுவாள்! அதிகம் அலட்டிக் கொள்ளாத மனுஷி!

அம்மா மாதிரி இருந்துவிட்டால் கூட தேவலை என்று தோன்றியது. யோசிக்க யோசிக்கத்தான் எல்லாப் பிரச்னைகளும் விஸ்வரூபம் எடுக்கின்றன.

துவைக்கும் கல் சூடாக இருந்தது.

கொல்லைப்புறம் ஒரு காகம் அந்த மட்ட மத்தியானத்திலும் உயிரைக் கொடுத்துக் கத்திக் கொண்டிருந்தது.

இனிமே யாரு வரப் போறா. ச்சீ... போ...'' என்று கையை உயர்த்திக் காகத்தை விரட்டினாள்.

மனத்திற்குள் இன்று சாயங்காலம் கலா தன் வீட்டுக்குச் செல்கையில் காரை நிறுத்தி இங்கே 'வந்து' தன்னைப் பார்த்துவிட்டுப் போகக் கூடாதா என்று ஏக்கமாக இருந்தது.

''சார்... போஸ்ட்...''

சத்தம் கேட்டு வாசலுக்கு வந்தாள்.

மஞ்சள் தடவிய ஒரு கவர் இருந்தது.



''எனதருமை மாமனாரே வணக்கம்'' என்று கிண்டலாகச் சொல்லியபடி முகவரியை நோட்டமிட்டாள்.

அப்பாவுக்கு இன்று கொஞ்சம் நிம்மதியாக இருக்கும். நாளைக் காலையிலேயே அதற்குப் பொருத்தம் பார்த்து வரக் கிளம்பி விடுவார்.

''பாவம் அப்பா....''

அதற்குள் மணி ஐந்தாகிவிட்டது. பிரபாவை இன்னும் காணவில்லை. மேட்னி போயிருப்பாள். அப்பா வருகிற நேரம்.

வாசலில் வந்து நின்றாள். வெயில் தணிந்திருந்தது.

நாள் முடியப் போகிறது — கலாவின் வாழ்வில் மறக்க முடியாத நாள் —

தெருமுனையில் ஓர் அம்பாசிடர் திரும்புவதை ஆசையுடன் பார்த்தாள் ஜமுனா.

மனம் ஒரு நிமிடம் சலனப்பட்டது.

கார் நின்றது.

ஜமுனா அருகில் போனாள். கலாதான். பக்கத்தில் கணவன். மேலும் இரண்டு பெண்கள்.

''திருச்செந்தூர் போறோம் ஜமுனா... பிரார்த்தனை, கல்யாணம் நடந்ததும் வர்றோம்னு... இது ஜமுனா!'' என்று தன் கணவனுக்கு அறிமுகம் செய்தாள்.

தெருவில் பார்வையைத் திருப்பியவள்



அதிர்ந்தாள். அப்பா வந்து கொண்டிருந்தார்.

''பெஸ்ட் விஷஸ் கலா... அப்புறம் பார்க்கலாம்...''

''ஆமாம், நீ ஏன் வரலே? உன்னே ரொம்ப எதிர்பார்த்தேன் தெரியுமா....'' என்றாள் நிஜமான வருத்தத்துடன்.

ஜமுனாவுக்குப் பயமாக இருந்தது, அப்பா பார்த்துவிட்டால் திட்டுவாரோ என்று! அவர்கள் சீக்கிரம் கிளம்பினால் தேவலே என்று தோன்றியது.

அப்பா நெருங்கிவிட்டார். ஆவலில் காருக்குள் பார்த்தார். ''யாரு ஜமுனா?''

''நான்தான் பெரியப்பா.... திருச்செந்தூர் போறோம். ஆசீர்வாதம் பண்ணுங்கோ.'' என்றாள் கலா.

மாப்பிள்ளைப் பையன் கொஞ்சம் குழம்பி நின்றான்.

அப்பா பையில் கையைவிட்டு அவசரமாக ஒரு பத்து ரூபாய்த் தாளை அவளிடம் நீட்டி, ''நன்னா இரும்மா கலா... எங்கே இருந்தாலும் நீ என் குழந்தே....'' என்றார்.

கார் கிளம்பியது.

ஜமுனா, அப்பாவை — அந்தச் செயலை — நம்ப முடியாதவளாகப் பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

அப்பாவும் காலையிலிருந்து தவித்துக் கொண்டுதான் இருந்திருக்க வேண்டும்!



GM-37/87. Tm R

மதுராலயம் மதுராலயம் மதுராலயம் மதுராலயம் மதுராலயம் மதுராலயம் மதுராலயம் மதுராலயம்

சித்த - ஆயூர்வேத - ஓமியோபதி - அக்குபங்சர் மருத்துவமனை


- நாட்பட்ட நோய் (Chronic) களுக்கு மட்டுமே ஆலோசனை/சிகிச்சை தரப்படுகிறது
- பலரது வேண்டுகோளுக்கிணங்கி முன் தேதி-நேரம் (Pre-appointment) பெற்றுள்ளவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது
- முன் பதிவிற்கான விண்ணப்ப படிவம் வேண்டுவோர்க்கு அனுப்பப்படும்
- முன் தேதி-நேரம் (appointment) பெறுவதற்கான விண்ணப்ப படிவங்கள் காலை 8 மணி முதல் 10.30 மணி வரையிலும் கிட்டும். ஞாயிறு விசாரணைகள் தவிர்க்கப்படும். தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களை பெறலாம்.

★ தேகத்தின் எந்தவொரு பாகத்திலும் ஏற்படும் வலிகள், இளம்பிள்ளை வாதம், பக்கவாதம், கீல்வாதம் போன்ற எல்லாவகை வாதம், இதய நோய்கள், அடி படுதல் போன்ற விபத்துக்களால் ஏற்படும் நரம்புக் கோளாறுகள் (வலிகள், உறுப்புகள் இயக்கமின்மை) சைனஸ், ஈஸ்நோபில் நோய்கள், தலைவலி, குடற்புண், மூல நோய்கள், பிறவிக் காது கேளாமை, வாய் பேசாமை, திக்கிப் பேசுதல், இழைப்பு — இருமல், வயிற்று வலி, கை-கால் நடுக்கம், ஈரல் கோளாறுகள், செதில் உதிர்தல், இடைவிடா அரிப்பு, வெண் புள்ளிகள் முதலிய சர்ம நோய்கள், செக்ஸ் தொடர்பான நோய்கள், மற்றும் இதில் குறிப்பிடாத நோயுள்ளோரும் கூட முன் தேதி-நேரம் பெற்று குறிப்பிட்ட நேரத்தில் வருதல் நன்று.

கிளினிக்
மதுராலயம்
36, டாக்டர் முனியப்பா ரோடு,
கீழ்ப்பாக்கம்,
சென்னை-10.

clinic
Mathuralayam

தொலைபேசி :
662878



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 75 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 250/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 2500/— மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 250/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D—76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

இந்த நன்கொடைக்கு 80G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.

உறவு

இன்றைக்குத் தேதி இருபத்தைந்து. போன மாதம் இந்நேரத்துக்குக் குளிச்சாச்சு. இன்னிக்கு... ம்... ம்... இன்னியோட நாற்பத்தி மூணு நாளாச்சு. ஒருவேளை அம்மா நீ எனக்கு அருள் செஞ்சுட்டியா...

தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்ட மனம் தட்டாமாலை சுற்றியது.

அம்பாள் படத்தின்மீது மணத்துக்கொண்டிருந்த மல்லிகைச்சரம் 'பொத்' என அலட்சியமாக யாரோ தூக்கி எறிந்தாற் போல் கீழே வந்து விழுந்தது.

'ஓ! எனக்கா இந்த ஆசீர்வாதம்!'

'மலடி! மலடி!' என டமுக்குக் கொட்டி முழக்கப்பட்டவளுக்கா இப்படி ஒரு கருணை! 'காய்க்காத மரம்' என முத்திரை ஒட்டப்பட்டவளுக்கா இப்படி ஓர் அற்புத விடுதலை. நிச்சயமாக இந்தத் தடவை சும்மா தள்ளிப் போகலே. சுமக்கறதுக்குத்தான் தள்ளிப் போயிருக்கு.... நினைத்த நேரத்தில் உடம்பு சூடேறிக் காது மடல்கள் சிவந்தன.

கூடையாய்த் தணல் தணலாய்ச் சொல் கேட்டு இளைத்துத் தோற்று நிற்கும் எனக்கு, குளிரக் குளிரப் பால் வார்த்துக் குளிர வைத்தாயா? அழுது நின்று தொழுது சிரித்தவளுக்கு, அபயம் அளித்து, அணைத்து அருள் செய்துவிட்டாயா!

கற்பூர ஆரத்தியைக் காண்பித்தவளாய் நமஸ்கரித்து எழுந்தாள் பாமா.

லேசாகத் தலையைச் சுற்றியது. வயிற்றைக் குப்புறப் புரட்டி அடித்து வர, ஒரே எக்கலில் நெஞ்சில் வந்ததை வேகமாக ஓடிச் சென்று கொல்லைப்புறத்தில் கொட்டித் தீர்த்தாள்.

வாயைக் கொப்பளித்து நிமிர்ந்தபோது பார்வை பளிச்சென இருந்தது.

ஊர்ஜிதமான சந்தேகங்கள் பலம் சேர்க்க, துளித் துளியான நம்பிக்கைகள் சேர்ந்து, புரண்டு எழும்பிச் சாகரமாய் ஆர்ப்பரித்தன.

"என்னடி! என்ன... வாந்தியா எடுக்கறே? நேத்து பஜ்ஜியை முழுசா ஒரு தட்டுத் தின்னது ஆகலையோ என்னவோ?"

நாலு பஜ்ஜி தின்னதுக்கு இத்தனை பேச்சா?

பிறந்தகத்தில் சீராடப் பெண் வந்திருந்தாள் என்பதற்காகப் பண்ணின அத்தனையும் அவள் வயிற்றுக்குத்தான் போகணுமா?

சுமங்கலி

சந்தோஷமும், கொண்டாட்டமும் பெண் வந்தது குறித்துத்தானே?

அவளுக்கென்று உறவும் முறையும் அதிகம் இல்லையே. இருந்த ஒன்றிரண்டும் முகத்தில் சிரிக்கும், முதுகில் விமர்சிக்கும்...

குழந்தை இல்லை என்ற துயரம் ஆரம்பக் கோணலாக, பெரிய பிரச்சினையாகத்தான் உருவானது. நாட்கள் தள்ளத் தள்ள அதையே மையமாக வைத்து வட்டம் போட்டாள் பர்வதம். அதுதான் மாமியார். தம் பிள்ளைக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைக்கத்தான் பார்த்தாள் அவள். அதற்குப் பிள்ளை இடம் கொடுக்காதபோது, அவள் மனத்தில் காழ்ப்புணர்ச்சி கற்பூரமாய்ப் பற்றியது.

'உலகத்துல யாருக்குமே இல்லாத அதிசயமா இவன் ஒருத்தன்தான் பெண்டாட்டி வச்சிண்டுருக்கான்...'

'மூணு முடிச்சு போட்டவளிடம் எனக்



குன்னு 'கடமைகள் இருக்கு. பிள்ளை என்ற ஒரு செல்வம் இல்லையென்று ஆனதற்காக... பெண்மை என்ற லக்ஷ்மியை நான் காலால் உதைத்துத் தள்ளமாட்டேன்' என்று உறுதியாக இருந்தான்.

கரைப்பார் கரைத்தாலும் கரையாத கல்லாக இருந்தான் அவன். பாமாவின் மீது அவனுக்கிருந்த ஆசைகள் குறையவே இல்லை. அந்தக் காதலின்முன் அந்தத் தாயின் முயற்சிகள் தோற்றன.

தாயின் ஏக்கங்கள் நியாயமானவைதான். அதற்காக வரம்பு மீறுதல் எப்படிச் சாத்தியம்?

'மீறு' என்றது உறவு. உறவைப் புறக்கணிப்பது மொத்தத்தில் முடியாத ஒன்றானாலும் காரியச் செவிடாய்க் கர்மவாதியாய்த் திரும்பிக் கொண்டான் கோபால்.

தோற்றுப் போயிட்டேனே என்று முழங்காலைக் கட்டிக் கொண்டு முகாரி பாடாமல், ஜெயித்ததை எண்ணிச் சுணக்கம் இல்லாமல் வாழ்ந்த மனுஷத்தனம் வித்தியாசமாக, பாராட்டும்படி இருந்தாலும், தன்னால்தானே அவனுக்கு இத்தனை ஹிம்சை என்று அவனை அணைத்து உருகித்தான் போனாள் பாமா...

ஹிம்சை என்றால் எப்படிப்பட்ட ஹிம்சை! நாடி நரம்புகளை எல்லாம் செயலற்றுப் போக வைக்கும் ஹிம்சை. பிடி கவளத்தைத் தொண்டையிலிருந்து இறக்க முடியாத பிராணாவஸ்தை. நகக் கணுவில் குண்டூசியைக் குத்தும் ஜீவ ஹிம்சை! அடிமேல் அடி விழுந்து செயலற்றுப் போய் மனம் சுக்கு நூறாக நொறுங்கிச் சிதைந்து, பொடியாகிச் சித்தத்தை அசுவாதீனமாக்கும் ஹிம்சை...

அந்த ஹிம்சைக்கு முடிவு வந்துவிட்டது.

இரவு வந்தவுடன், அவனுக்காக ஏங்கி... குழைந்து... கரம் தொட்டுத் தன்னை இழக்கும் அந்த நேரத்துக்காகக் காத்திருந்தாள்.

பனியாக உருகிக் கலந்தாள்.

"நிஜமாகவா!" அவனால் தன்னையே நம்ப முடியவில்லை.

"அம்மாகிட்ட சொன்னியா!" அவன் பரபரத்தான்.

தன்னைச் சூலாகச் சுமந்தவளிடம் பரிமாறிக் கொள்ளத் துடித்தான்.

மெதுவாக அவன் மனமும் நோகாமல், தன் நெஞ்சமும் கனக்காமல் நடந்ததை உன்னிடம் சொல்லாமல் யாரிடம் சொல்லுவேன் என்று சொல்லி முடித்தாள்.

"ம்... ம்... டேக் இட் ஈஸி பாமா.... அம்மா தானே சொன்னா... சொன்னாச் சொல்லி விட்டுப் போறா... வயசாயிடுத்தோல்லியோ. தெரிஞ்ச லட்சணம் அவ்வளவுதான். அம்மாவுக்கு மட்டும் ஆசை இல்லையா என்ன? இன்னொரு கல்யாணத்தை முடிச்சுடணும்னு தலைகீழா நின்னாளே எதுக்கு? ஒரு பேரனோ, பேத்தியோ வேணும்னுதானே.... டாக்டர் கிட்ட கன்ஃபர்ம் பண்ணிக்கற மட்டும் மூச்சு விடாதே!"

அவனின் இதமான வார்த்தைகள் அவளைச் சுதந்திரமாக சுவாசிக்க வைத்தது.

தகப்பனாகும் அந்தச் சந்தோஷத்தில்

அவன் குழந்தையானான். சீமந்த புத்திரனை தொட்டிலாட்டி அடித்தான். மனைவியும் குழந்தையுமாகக் கடற்கரையில் ஸ்லோ மோஷனில் பவனி வந்தான். இறுக்கமாக அணைத்தான். அணைத்தபோது வலிக்குமோ என விலகி வியர்த்தான்.

'நீ எந்தன் இன்னுயிர் கண்ணம்மா எந்நேரமும் உன்தன்னைப் போற்றுவேன்' எனப் பாடி மனைவியை மன ஊஞ்சலில் ஏற்றினான். என்னைத் தந்தையாக்கி உயர்த்தும் என் அன்பு மனைவியே எனக் குளிர்ந்து காதலால் கட்டி அணைத்து உச்சி முகர்ந்தான்.

மறுநாள் மைலாப்பூர் போவதாகப் பொதுவாகச் சொல்லி ஏய்த்துவிட்டு மனைவியை டாக்டரிடம் அழைத்துச் சென்று...... 'வாழ்த்துக்கள்!' என்று லேடி டாக்டர் வாழ்த்திய போது லேசாகிப் போனான்.

இத்தனை சந்தோஷமா என்று உயர உயரத்தில் சிறகடித்து வட்டமடித்தான்.

நான்கு மாதம் முடிந்தபோது முகத்தில் பளபளப்புக் கூடி மெருகிட்டிருந்தது. கொஞ்சம் நிறம் கூடி, உடம்பு சேர்ந்து.... தாய்மை லக்ஷ்மிகரமாக விகசித்தது.

வட்டமாகக் குங்குமத்தைச் சீர் திருத்திக் கொண்டிருந்தாள்.

"அவளுக்கென்ன வயசு? நாற்பத்திரண்டா...? அண்ணனுக்கும் நாற்பத்தொன்பது வயசாச்சே... குழந்தை பிறப்பதற்குள் ஐம்பதுக்கு வந்துவிடுவார். அப்புறம் குழந்தை பிறந்தவுடன், அம்மாவைப் பாட்டின்னும் அப்பாவைத் தாத்தான்னுமா கூப்பிடும்?"

— கொல்லையிலிருந்து வந்த சம்பாஷணை. அவளைக் கல்லாய் இறுத்தியது.

"ஆமாம்... என்னவோ சொல்வாளே. அது போற வயசுலே நீ ஒண்ணு! அவதான் புள்ளைன்னு நம்புறான்னா, நீ கூடவா..."

— நாத்தனார் சாந்தியிடம் மாமியார் கிசுகிசுப்பது கேட்டது.

"டாக்டர்கிட்ட போயிட்டு வந்துட்டா தெரியுமோ?"

"ஆங்... இன்னும் மூணு மாசம் கழிச்சுப் போகச் சொல்லு, வயத்துல கட்டிம்பா..."

மாதமாக ஆக... பிள்ளைதான் என்று ஊர்ஜிதம் ஆனபோது, 'மிச்சம் இருக்கிற இந்த வீடு இளைய மகன் சுரேஷுக்குத்தான்' என்று கோட்டை கட்டியதில் விரல் விழுந்துவிட.... வருத்தமாகத்தான் இருந்தது பார்வதத்துக்கு.

அண்ணனின் நாலு விரல் சம்பாத்தியம் பின்னால் குட்டிப் போட்டு எல்லாமே என் குழந்தைகளுக்குத்தானே என்ற சீட்டுக் கட்டு வீடு கலைந்து பொல பொலவென்று சரிய... நாத்தனார் சாந்திக்கும் மனத்தில் குறைதான்!

'இத்தனை வருஷங்களுக்குப் பிறகு இந்தச் சனியன் வேற* எதுக்கு இப்ப வரப் போறது—' என்று உள்ளுக்குள் சலிப்புத்தான் அத்தனை உறவுகளுக்கும்!



அருள்வாக்கு

தாயன்பைப் போலக் கலப்படமே இல்லாத பூரணமான அன்பை இந்த லோகத்தில் வேறெங்குமே காண முடியவில்லை. பிள்ளை எப்படி இருந்தாலும், தன் அன்பைப் பிரதிபலிக்காவிட்டாலும்கூட, தாயாராகப் பட்டவள் அதைப் பொருட்படுத்தாமல் பூரணமான அன்பைச் செலுத்திக் கொண்டேயிருக்கிறாள். 'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்று இதைத்தான் சொல்லுகிறோம். 'தேவி அபராத க்ஷமாபண ஸ்தோத்திரம்' என்று அம்பாளிடம் நம் குறைகளைச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொள்கிற துதி ஒன்று இருக்கிறது. அதிலும் 'துஷ்டப்பிள்ளை இருப்பதுண்டு; ஆனால் துஷ்ட அம்மா என்று ஒருத்தி கிடையவே கிடையாது' என்று வருகிறது. பரிபூரணமான அன்பையும் தன்னலமே இல்லாத உழைப்பையும் அம்மா ஒருத்தியிடம்தான் பார்க்க முடிகிறது.

குழந்தையாகப் பிறக்கிற போதே அம்மாவிடம்தான் ஒட்டிக் கொள்கிறோம். ஆகாரம் தருவதிலிருந்து சகலத்துக்கும் அவள்தான் குழந்தைக்குக் கதியாக இருக்கிறாள். வயது ஏறுகிற சமயத்தை விட பால்யத்தில்தான் தாயார், குழந்தை இருவருக்கும் பரஸ்பர அன்பு மிக அதிகமாக இருக்கிறது. அதிலும் மனித இனத்தை விடப் பசுக் குலத்திடம்தான் இந்த அன்பு நிரம்பித் ததும்புகிறது. கன்று 'அம்மா' என்று கத்துவதில் உள்ள ஆவல் மாதிரி வேறெங்கும் அன்பைப் பார்க்க முடியவில்லை. இதைப் பார்த்துத்தான் மனுஷ்ய ஜாதியே 'அம்மா' என்று கூப்பிட ஆரம்பித்ததோ என்று தோன்றுகிறது. தமிழில் மட்டுமில்லாமல் தெலுங்கு, மகாராஷ்டிரம், கன்னடம் முதலிய பாஷைகளிலும் 'அம்மா' என்றே தாயாரைச் சொல்கிறார்கள். மலையாளத்தில் 'அம்மை' என்பார்கள். ஸம்ஸ்கிருதத்தில் 'மா' என்றும் 'அம்பா' என்றும் சொல்வதும் இதேதான். ஹிந்தியில் 'மா' 'மாயி' என்கிறார்கள். இங்கிலீஷ் மம்மி, 'மம்மா' எல்லாமும் கன்றுக் குட்டியின் அம்மாவிலிருந்து வந்தவைதான் போலிருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



அத்தியாயம் 2

சேற்றுப் பள்ளம்

காட்டிலும் மேட்டிலும் கல்லிலும் முள்ளிலும் அந்தப் பெண்ணைத் தொடர்ந்து வந்தியத்தேவன் ஓடினான். ஒருசமயம் அவள் கண்ணுக்குத் தெரிந்தாள். மறுகணத்தில் மறைந்தாள். இனி அவளைப் பிடிக்க முடியாது என்று தோன்றியபோது மறுபடியும் கண்ணுக்குப் புலப்பட்டாள். மாய மாரீசனைத் தொடர்ந்து இராமர் சென்ற கதை வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது. ஆனால் இவள் மாயமும் அல்ல; மாரீசனும் அல்ல. இவளுடைய கால்களிலே,மானின் வேகம் இருக்கிறது என்பது மட்டும் நிச்சயம். அம்மம்மா! என்ன விரைவாக ஓடுகிறாள்? 'எதற்காக இவளைத் தொடர்ந்து ஓடுகிறோம்? இது என்ன பைத்தியக்காரத்தனம்?' என்று எண்ணினான். உடனே அதற்கு ஒரு காரணமும் கற்பித்துக் கொண்டான். கோடிக்கரை நெருங்க நெருங்க, சேந்தன் அமுதன் வர்ணித்த மங்கையின் நினைவு அவனுக்கு அடிக்கடி



வந்து கொண்டிருந்தது. இவள் அந்தப் பூங்குழலியாகத்தான் இருக்க வேண்டும். இவளுடன் சிநேகம் செய்து கொண்டால் வந்த காரியம் நிறைவேறுவதற்கு அநுகூலமாயிருக்கும். அத்துடன், கலங்கரை விளக்கத்துக்குப் போக வழி கேட்டும் தெரிந்து கொள்ளலாம். தொலைதூரத்தில் வரும்போதே அவர்களுக்குக் கலங்கரை விளக்கின் உச்சி தெரிந்தது. ஆனால் அதை நெருங்குவது எளிதாயில்லை. காட்டுக்குள் புகுந்ததும் கலங்கரை விளக்குத் தெரியவேயில்லை. காட்டுக்குள்ளே சுற்றிச் சுற்றி வருவதாக ஏற்பட்டதே தவிர, வழி அகப்படவில்லை. இந்தச் சமயத்திலேதான் குழகர் கோவிலின் மதில் சுவரின் மேல் பூங்குழலியை வந்தியத்தேவன் கண்டான். அவளைப் பிடித்து வழி கேட்கலாம் என்று பார்த்தால், அவள் இப்படி மாய மானைப் போல் பிடிபடாமல் ஓடுகிறாளே? இவளை இப்படியே விட்டு விட்டுத் திரும்ப வேண்டியதுதான்! ஆனால் ஓட்டப் பந்தயத்திலேகூட ஒரு பெண்ணுக்குத் தோற்பது என்றால், அதுவும் மனத்துக்கு உகந்ததாயில்லை....

ஆ! அதோ திறந்த வெளி வந்துவிட்டது. சற்றுத் தூரத்தில் நீலக் கடல் தெரிகிறது. விரிந்து பரந்து அமைதி குடிகொண்ட அந்தக் கடலின் தோற்றம் என்ன அழகாயிருக்கிறது! அதோ கலங்கரை விளக்கமும் தெரிகிறது. அதன் உச்சியில் இப்போது ஜோதி கொழுந்துவிட்டு எரிகிறது. அதன் செந்நிறக் கதிர்கள் நாலாபக்கமும் பரவி விழுந்து விசித்திர ஜால வித்தைகள் புரிகின்றன.

இந்த இடத்தில் இந்தப் பெண்ணைப் பின்தொடர்வதைவிட்டுவிட்டுக்கலங்

கரை விளக்கை நோக்கிப் போகலாமா? கூடாது! கூடாது! இந்தத் திறந்த வெளியில் இவளை ஓடிப் பிடிப்பது சுலபம். இங்கே அவ்வளவு மணலாகக் கூட இல்லை. கால் மணலில் புதையவில்லை. பூமியில் புல் முளைத்துக் கெட்டிப்பட்டிருக்கிறது. சில இடங்களில் சேறு காய்ந்து பொறுக்குப் படர்ந்திருக்கிறது. இங்கேயெல்லாம் தடங்கலின்றி ஓடலாம். அந்தப் பெண்ணை இலகுவாய்ப் பிடித்துவிடலாம்! மேலும் அவள் கடலை நோக்கியல்லவா ஓடுகிறாள்? எவ்வளவு ஓடினாலும் முடிவில் கடலோரத்தில் சென்று அவள் நின்றுதானே ஆக வேண்டும்! ஒருவேளை இந்த விந்தையான பெண் கடலிலேயே முழுகி மறைந்து விடுவாளோ! அடடா! குதிரையிலேயே ஏறி வராமற் போனோமே? அப்படி வந்திருந்தால் இந்தத் திறந்த வெளியில் ஒரு நொடியில் இவளைப் பிடித்து விடலாமே?

அதோ அவள் சற்றுத் தயங்கி நிற்கிறாள். நேரே கடலை நோக்கி ஓடாமல் வலது பக்கமாகத் திரும்பி ஓடுகிறாள்! தன்னிடம் பிடிபடாமல் இருப்பதற்காக வலதுபுறத்தில் சற்றுத் தூரத்தில் தென்பட்ட காட்டை நோக்கி ஓடுகிறாள். காட்டுக்குள் அவள் புகுந்துவிட்டால் நிச்சயமாகப் பிடிக்க முடியாதுதான்! இத்தனை நேரம் ஓடியதும் வீண்! வந்தியத்தேவனுடைய கால்களும் அச்சமயம் கெஞ்ச ஆரம்பித்தன. அவனுக்குமேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஆரம்பித்துவிட்டது....

மீண்டும் அவளுடைய மனத்தை மாற்றிக்கொண்டுவிட்டாள் போலும்! காட்டுக்குள் போகும் எண்ணத்தை விட்டுவிட்டாள் போலும்! பம்பரத்தைப் போல் ஒரு சுற்றுச் சுற்றித் திரும்பி ஓடி வருகிறாள். கலங்கரை விளக்கின் அடிக்குப் போக நினைத்தாள் போலும். ஒரு நாலு பாய்ச்சல் பாய்ந்தால் அவளைப் பிடித்துவிடலாம். கைப்பிடியாக அவளைப்பிடித்து, "பெண்ணே! ஏன் இப்படி என்னைக் கண்டு மிரண்டு ஓடுகிறாய்? உனக்கு





உன் காதலனிடமிருந்து செய்தி கொண்டு வந்திருக்கிறேன்!'' என்று சொன்னால், எத்தனை அதிசயம் அடைவாள்! சேந்தன் அமுதன் அவளிடம் ஒன்றும் சொல்லி அனுப்பவில்லை என்பது உண்மைதான். அதனால் என்ன? ஏதாவது சொந்தமாகக் கற்பனை செய்து சொன்னால் போகிறது...!

வந்தியத்தேவன் மனத்திற்குள் தீர்மானித்தபடி தன் வேகத்தில் மிச்சமிருந்த வலிமையையெல்லாம் உபயோகித்துப் பாய்ந்து ஓடினான். திரும்பி ஓடி வந்து கொண்டிருந்த அவளை நாலே பாய்ச்சலில் பிடித்துவிடலாம் என்பதுதான் அவனுடைய உத்தேசம். திடீரென்று, ''ஐயோ!'' என்றான். தனக்கு என்ன நேர்ந்துவிட்டது என்பது முதலில் அவனுக்கே தெரியவில்லை. பிறகு புலப்படத் தொடங்கியது. அவனுடைய கால்கள் இரண்டும் சேற்றில் புதைந்து கொண்டிருந்தன. முதலில் பாதங்கள் மட்டும் புதைந்தன. பிறகு கணுக்கால் புதைந்தது. முழங்கால் வரையில் சேறு மேலேறிவிட்டது!

அடாடா! இந்த இடம் நம்மை எப்படி ஏமாற்றிவிட்டது? மேலே பார்த்தால் நன்றாய்க் காய்ந்து பொறுக்குத் தட்டியிருக்கிறது. உள்ளே சேறு இன்னும் காயவில்லை. என்றுமே முழுமையும் காய முடியாத புதை சேற்றுக் குழிகளைப் பற்றி வந்தியத்தேவன் கேள்விப்பட்டதுண்டு. ஆடு மாடுகள், குதிரைகள், யானைகள் கூட அப் பள்ளங்களில் அகப்பட்டுக் கொண்டால் சிறிது சிறிதாக உள்ளே அமுங்கிக் கொண்டேபோய்க் கடைசியில் முழுதுமே முழுகி மறைந்துவிடுமாம்! அத்தகைய புதை குழிதானே இது! அப்படித்தான் தோன்றுகிறது. முழங்காலும் மறைந்துவிட்டதே! மேலும் உள்ளே இறங்கிக் கொண்டேயிருப்போமோ? விரைவில் தொடை வரைக்கும் புதைந்துவிடும் போலிருக்கிறதே! யானைகளையும் குதிரைகளையும் விழுங்கி ஏப்பம் விடும் புதை சேறு நம்மைச் சும்மா விட்டுவிடுமா!

ஐயோ! இதுவா நமது முடிவு? நாம் கண்ட எத்தனை எத்தனையோ பகற் கனவுகள் எல்லாம் இதிலேயே புதைந்துவிட வேண்டியதுதானு? இந்த அபாய வேளையில் அந்த விசித்திரமான பெண் வந்து கைகொடுத்துக் காப்பாற்றினுல்தான் உண்டு. தப்புவதற்கு வேறு வழியில்லை. ஒரு பெருங் கூச்சல் போட்டுப் பார்க்கலாம்— இவ்விதம் எண்ணிய வந்தியத்தேவன், "ஐயோ! நான் செத்தேன்! சேற்றில் முழுகிச் சாகிறேன். எனக்குக் கை கொடுத்து உதவி செய்து காப்பாற்றுவார் யாரும் இல்லையா!" என்று கத்தினுன்.

அந்தக் கூக்குரல் பூங்குழலியின் காதில் விழுந்தது. அவனுக்கு நேர் எதிரே சற்றுத் தூரத்தில் ஓடிக் கொண்டிருந்த பூங்குழலி நின்ருள். ஒரு கணம் தயங்கினுள். வந்தியத்தேவனுடைய அபாயமான நிலையைப் பார்த்துத் தெரிந்து கொண்டாள்.

மறுகணம் அங்கே பாதி மணலிலும் பாதி சேற்றுக் குழியிலும் கிடந்த படகு ஒன்று அவள் கவனத்தைக் கவர்ந்தது. அக்குழியில் தண்ணீர் நிறைந்து ஆழமான, நீரோடையாக இருந்த காலத்தில் அப்படகு உபயோகப்பட்டிருக்க வேண்டும். அதில் இப்போது லாகவமாகக் குதித்து ஏறினுள். துடுப்பை எடுத்து இரண்டு தடவை வலித்தாள். அடாடா! இது என்ன அதிசயம்? அந்தப் படகு நீரில் அன்னப் பறவை செல்வதுபோல் அல்லவா சேற்றின் மேலே விரைவாக மிதந்து செல்கிறது? மிதந்து சென்று புதை சேற்றுக் குழியின் அக்கரையையும் அடைந்துவிட்டது. பூங்குழலி கெட்டித் தரையில் குதித்தாள். கரையில் கால்களை நன்ருய் ஊன்றிக் கொண்டு வந்தியத்தேவனுடைய கைகளைப் பற்றிக் கரையில் இழுத்துவிட்டாள். அம்மும்மா! அந்த மெல்லியலாளின் கைகளிலேதான் எவ்வளவு வலிமை! தஞ்சைபுரி கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையருடைய இரும்புக் கைகளைவிட இவளுடைய கரங்கள் அதிக உறுதியாயிருக்கின்றனவே!



கரை ஏறியதும் வந்தியத்தேவன் கல கல வென்று சிரித்தான். அவனுடைய கால்கள் மட்டும் கொஞ்சம் நடுங்கிக் கொண்டிருந்தன.

''என்னைக் காப்பாற்றிக் கரை சேர்த்துவிட்டதாக உனக்கு எண்ணம் போலிருக்கிறது! நீ வந்திராவிட்டால் நான் கரையேறியிருக்கமாட்டேன் என்று நினைத்தாயோ?'' என்றான்.

''பின் எதற்காக அப்படி, 'ஐயோ! ஐயோ!' என்று கத்தினாய்?'' என்று பூங்குழலி கேட்டாள்.

''உன்னை ஓட விடாமல் தடுத்து நிறுத்துவதற்காகத்தான்!''

அப்படியானால் மறுபடியும் உன்னைக் குழியிலேயே தள்ளிவிடுகிறேன். உன் சாமர்த்தியத்தினால் நீயே கரை ஏறிக் கொள்!'' என்று பூங்குழலி சொல்லித் தள்ள யத்தனித்தாள்.

''ஐயையோ!'' என்று வந்தியத்தேவன் விலகி நின்று கொண்டான்.

''எதற்காக அலறுகிறாய்?''

''உயிருக்காகப் பயப்படவில்லை:



சேற்றுக்குத்தான் பயப்படுகிறேன்! ஏற்கெனவே தொடை வரைக்கும் சேறாகிவிட்டது!''

பூங்குழலியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. வந்தியத்தேவனை ஏற இறங்கப் பார்த்தாள்.

''அதோ கடல் இருக்கிறது! போய்ச் சேற்றை அலம்பிச் சுத்தம் செய்து கொள்!'' என்றாள்.

''நீ கொஞ்சம் முன்னால் சென்று வழி காட்ட வேண்டும்!'' என்றான் வந்தியத்தேவன்.

இருவரும் கடற்கரையை நோக்கி நடந்தார்கள். சேற்றுப் பள்ளத்தைச் சுற்றிக் கொண்டு சென்றார்கள்.

''என்னைக் கண்டதும் எதற்காக அப்படி விழுந்தடித்து ஓடினாய்? என்னைப் பயங்கரப் பேய் பிசாசு என்று எண்ணி விட்டாயா?'' என்று வல்லவரையன் கேட்டான்.

''இல்லை; பேய் பிசாசு என்று எண்ணவில்லை. ஆந்தை என்று எண்ணினேன். உன் மூஞ்சி ஆந்தை மூஞ்சி மாதிரியேயிருக்கிறது!'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள்.

வந்தியத்தேவனுக்குத் தன் தோற்றத்தைக் குறித்துக் கர்வம் அதிகம். ஆகையால் அவனை ஆந்தை மூஞ்சி என்று சொன்னது அவனுக்கு மிக்க கோபத்தை உண்டாக்கிற்று.

''உன்னுடைய குரங்கு முகத்துக்கு என்னுடைய ஆந்தை முகம் குறைந்து போய்விட்டதாக்கும்!'' என்று முணு முணுத்தான்.

''என்ன சொன்னாய்?''

''ஒன்றுமில்லை. என்னைக் கண்டு எதற்காக அப்படி ஓடினாய் என்று கேட்டேன்.''

''நீ எதற்காக அப்படி என்னைத் துரத்திக் கொண்டு வந்தாய்?''

''கலங்கரை விளக்கத்துக்கு வழி கேட்பதற்காக உன்னைத் துரத்திக் கொண்டு வந்தேன்......''

''அதோ தெரிகிறதே விளக்கு! என்னை வழி கேட்பானேன்?''

''காட்டுக்குள் புகுந்த பிறகு தெரியவில்லை. அதனாலேதான்! நீ எதற்காக என்னைக் கண்டதும் அப்படி ஓட்டம் எடுத்தாய்?''

''ஆண் பிள்ளைகள் மிகப் பொல்லாதவர்கள். ஆண் பிள்ளைகளைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை!''

''சேந்தன் அமுதனைக் கூடவா?'' என்றான் வல்லவரையன் கொஞ்சம் மெல்லிய குரலில்.

''யாரைச் சொன்னாய்?''

''தஞ்சாவூர் சேந்தன் அமுதனைச் சொன்னேன்.''

''அவனைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?''

''அவன் உன் அருமைக் காதலன் என்று தெரியும்.''

''என்ன? என்ன?''

''உன் பெயர் பூங்குழலிதானே?''

''என் பெயர் பூங்குழலிதான். சேந்தன் அமுதனைப் பற்றி என்ன சொன்னாய்? அவன் என்......?''

''அவன் உன் காதலன் என்றேன்.''

பூங்குழலி கலீர் என்று நகைத்தாள். ''அப்படி யார் உனக்குச் சொன்னது?'' என்றாள்.

''வேறு யார் சொல்வார்கள்? சேந்தன் அமுதன்தான் சொன்னான்.''

''தஞ்சாவூர் வெகு தூரத்தில் இருக்கிறது. அதனாலேதான் அப்படிச் சொல்லித் தப்பித்துக் கொண்டான்!''

''இல்லாவிட்டால்......?''

''இங்கே என் முன்னால் சொல்லியிருந்தால் அந்தச் சேற்றுக் குழியில் தூக்கிப் போட்டிருப்பேன்.''

''அதனால் என்ன? சேற்றை அலம்பிக் கொள்ளக் கடலில் ஏராளமாய்த் தண்ணீர் இருக்கிறதே?''

''நீ விழுந்த புதை சேற்றுக் குழியில் மாடு, குதிரை எல்லாம் முழுகிச் செத்திருக்கின்றன. யானையைக் கூட அது விழுங்கிவிடும்!''

வந்தியத்தேவனுடைய உடம்பு சிலிர்த்தது. அவனை அந்தப் படுகுழி கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இழுத்துக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட உணர்ச்சியை நினைத்துக் கொண்டான். இவள் மட்டும் வந்து கரையேற்றியிராவிட்டால், இத்தனை நேரம்..... அதை நினைத்த போது

அவன் உடம்பெல்லாம் நடுங்கிற்று.

"சேந்தன் அமுதன் என்னைப் பற்றி இன்னும் என்ன சொன்னான்?" என்று பூங்குழலி கேட்டாள்.

"நீ அவனுடைய மாமன் மகள் என்று சொன்னான். உன்னைப்போன்ற அழகி தேவலோகத்திலேகூடக் கிடையாது என்று சொன்னான்......"

"தேவலோகத்துக்கு அவன் நேரிலே போய்ப் பார்த்திருப்பான் போலிருக்கிறது. இன்னும்......?"

"நீ நன்றாகப் பாடுவாய் என்று சொன்னான். நீ பாடினால் கடலுங்கூட இரைச்சல் போடுவதை நிறுத்திவிட்டுப் பாட்டைக் கேட்குமாம்! அது உண்மைதானா?"

"நீயே அதைத் தெரிந்து கொள்! இதோ கடலும் வந்துவிட்டது!......"

இருவரும் கடற்கரையோரமாக வந்து நின்றார்கள்.

அத்தியாயம் 3

சித்தப் பிரமை

வானத்தில் விண்மீன்கள் கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருந்தன. பிறைச்சந்திரன் நீலக் கடலில் மிதக்கும் வெள்ளி ஓடத்தைப் போல பவனி வந்து கொண்டிருந்தான்.

காற்றின் வேகம் அதிகமாகியிருந்தது. கடல் குமுறியது. வெள்ளலைக் கைகளை நீட்டிக் கரையில் நின்றவர்களைத் தன்பால் இழுக்க முயன்றது.

"ஏன் நிற்கிறாய்? சீக்கிரம் சேற்றைக் கழுவிக் கொள்! வீட்டுக்கு உடனே போக வேண்டும். இல்லாவிட்டால் இன்று எனக்குச் சோறு கிடைக்காது. அண்ணி சோற்றுப் பானையைக் கவிழ்த்து விடுவாள்!" என்றாள் பூங்குழலி.

"இங்கே கடலின் ஆழம் அதிகமா?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"உன்னைப் போல் பயங்கொள்ளியை நான் பார்த்ததேயில்லை. இங்கே வெகு தூரத்துக்கு ஆழமே கிடையாது. அரைக்காத தூரம் கடலில் போனாலும் இடுப்பளவு தண்ணீர்தான் இருக்கும். ஆகையினாலேதான் ஒவ்வொரு நாள் இரவும் கலங்கரை விளக்கு எரிய வேண்டியிருக்கிறது!"

வந்தியத்தேவன் தயங்கித் தயங்கித் தண்ணீரில் இறங்கினான். சேற்றைக் கழுவிக் கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு கரை ஏறினான்.

சற்றுத் தூரத்தில் வைத்தியருடைய மகன் குதிரை மேலேறி வருவதைக் கண்டான். வந்தியத்தேவனுடைய குதிரையும் பக்கத்தில் வந்தது.

"ஐயையோ! குதிரை சேற்றில் இறங்கி விடப் போகிறதே!" என்றான் வந்தியத்தேவன்.

"இறங்காது; மனிதர்களை விடக் குதிரைகளுக்கு விவேகம் அதிகம்!" என்றாள் பூங்குழலி.

"ஆனால் ஒரு குதிரையின் பேரில் மனிதன் இருக்கிறானே? அவன் என் குதிரையையும் பிடித்து இழுத்துக் கொண்டு வருகிறானே?"

"அது கொஞ்சம் அபாயந்தான்! ஓடிப் போய் எச்சரிக்கை செய்!"

"நில்லு! நில்லு!" என்று கூச்சலிட்டுக் கொண்டே வந்தியத்தேவன் ஓடிப் போய்த் தடுத்து நிறுத்தினான்.

பூங்குழலியும் சற்று நேரத்துக்கெல்லாம் அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டாள்.

மூவரும் கலங்கரை விளக்கத்தை நோக்கி நடந்தார்கள்.

"நீ குதிரையில் ஏறிக் கொள்ளலாமே?" என்றாள் பூங்குழலி.

"இல்லை; உன்னுடன் நடந்தே வருகிறேன்."

பூங்குழலி குதிரையின் அருகில் சென்று அதன் முகத்தைத் தடவிக் கொடுத்தாள். அதனால் மகிழ்ச்சி

அடைந்ததைப் போல் குதிரை உடம்பைச் சிலிர்த்துக்கொண்டு சற்று இலேசாகக் கனைத்தது.

"உன்னை என் குதிரைக்குப் பிடித்து விட்டது! இது மிக்க நல்லது."

"என்ன விதத்தில் நல்லது?"

"நான் இலங்கைக்குப் போக வேண்டும். இந்தக் குதிரையை உன்னிடம் ஒப்புவித்துவிட்டுப் போகலாம் என்று எண்ணுகிறேன். பார்த்துக் கொள்கிறாயா?"

"ஓ! பார்த்துக் கொள்கிறேன். எல்லா மிருகங்களும் என்னிடம் சீக்கிரம் சிநேகமாகிவிடும். மனிதர்களுக்கு மட்டுந்தான் என்னைக் கண்டால் பிடிக்காது......"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்? சேந்தன் அமுதன் உன் பேரில்......"

"எனக்கும் மிருகங்களின் பேரில் தான் பிரியம்; மனிதர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது!"

"மனிதர்கள் அப்படி என்ன உனக்குச் செய்துவிட்டார்கள்?"

"மனிதர்கள் பொல்லாதவர்கள். பொய்யும் புனைசுருட்டுமே அவர்களுக்கு வேலை!......"

"எல்லாரையும் சேர்த்து அப்படிச் சொல்லிவிடக் கூடாது. சேந்தன் அமுதன் நல்லவன். இதோ வருகிறானே, வைத்தியர் மகன், — இவன் ரொம்ப நல்லவன்......"

"நீ எப்படி?"

"நானும் நல்லவன்தான். என் பெருமையை நானே சொல்லிக் கொள்ளக் கூடாது அல்லவா?"

"நீங்கள் இருவரும் எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள்?"

"சக்கரவர்த்திக்கு உடம்பு குணம் இல்லை அல்லவா? அவருடைய நோயைக் குணப்படுத்தச் சில மூலிகைகள் வேண்டியிருக்கின்றன. இந்தக் காட்டில் அபூர்வ மூலிகைகள் இருக்கின்றனவாமே? அதற்காகத் தான் வைத்தியர் மகனும் நானும் வந்திருக்கிறோம்......"

"சற்றுமுன் இலங்கைக்குப் போக வேண்டும் என்று சொன்னாயே?"

"இங்கே கிடைக்காத மூலிகைகளை இலங்கையிலிருந்து கொண்டு வர வேண்டும். இலங்கையில் அனுமார் கொண்டு வந்த சஞ்சீவி பர்வதம் இன்னமும் இருக்கிறதாமே?"

"ஆமாம்; இருக்கிறது. அதனாலே தான் அங்கே ஆயிரக்கணக்கான ஜனங்கள் விஷக் காய்ச்சலில் இப்போது செத்துப் போய்க் கொண்டிருக்கிறார்கள்......"

"அதுவும் அப்படியா? எனக்குத் தெரியாதே? எங்களை அனுப்பிய அரண்மனை வைத்தியருக்கும் அது தெரியாது......"

"ஆண்பிள்ளைகளைப்போல்பொய் சொல்லுகிறவர்களை நான் கண்டதேயில்லை. இரண்டு நாளைக்கு முன் இரண்டு பேர் இங்கே வந்தார்கள். அவர்களும் இப்படித்தான் ஏதோ பொய் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொன்னது கொஞ்சம் நம்பக் கூடிய பொய்யாக இருந்தது......"

"அவர்கள் யார்? என்ன பொய் சொன்னார்கள்?"

"அவர்கள் தங்களை யாரோ மந்திரவாதி அனுப்பியதாகச் சொல்லிக் கொண்டார்கள். சக்கரவர்த்திக்கு ரட்சை கட்டுவதற்காகப் புலி நகமும் யானை வால் ரோமமும் வேண்டும் என்றும் அதற்காக இலங்கை போவதாகவும் சொன்னார்கள். அவர்களை அழைத்துக்கொண்டு என் அண்ணன் படகோட்டிக் கொண்டு இலங்கைக்குப் போயிருக்கிறான்......"

"ஓ! ஓ! அதுவும் அப்படியா?" என்றான் வந்தியத்தேவன். அவனுக்கு ரவிதாஸன் என்னும் பயங்கர மந்திரவாதியின் நினைவு வந்தது. இரவில் படுத்திருந்த பாழும் மண்டபத்தில் அடைந்த பயங்கர அனுபவமும் நினைவுக்கு வந்தது. கடவுளே! இந்த மாதிரி காரியங்களிலெல்லாம் ஏன் சிக்கிக் கொண்டோம்? போர்க்களத்தில் நேருக்கு நேர் பகைவனுடன் நின்று போர் புரியவேண்டும்! அப்போது நம் வீரத்தையும் தீரத்தையும் காட்ட வேண்டும். இந்த மாதிரி தந்திர மந்திர சூழ்ச்சிகளில் எதற்காக அகப்பட்டுக் கொண்டோம்?

நமக்கு முன்னாலேயே இலங்கைக்குப் படகில் சென்றிருப்பவர்கள் யாராயிருக்கக் கூடும்! இந்தப் பெண்ணை

எவ்வளவு தூரம் நம்பலாம்? இவளும் ஒருவேளை அந்தச் சதிகாரக் கூட்டத்தில்சேர்ந்தவளாயிருக்கக்கூடுமோ?... இராது, இராது! இவள் கள்ளங் கபடம் அற்ற பெண். இவளை எப்படியாவது சிநேகம் செய்து வைத்துக் கொள்வது நல்லது.

"பூங்குழலி! உன்னிடம் உண்மையைச் சொல்லி விடுகிறேன். சற்றுமுன், மூலிகை கொண்டு போக நான் வந்திருப்பதாகச் சொன்னேனே, அது பொய்தான்! மிக முக்கியமான இரகசியமான காரியத்துக்காக நான் இலங்கைக்குப் போகிறேன், அதை உன்னிடம் சொல்ல விரும்புகிறேன்..."

"வேண்டாம்! முக்கியமான இரகசியமான காரியங்களைப் பெண்களிடம் சொல்லக் கூடாது என்று உனக்குத் தெரியாதா? என்னிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம்......"

"சாதாரணப் பெண்களைப் பற்றித்தான் அப்படிச் சொல்லுவார்கள். உன்னிடம் இரகசியத்தைக் கூறினால் அப்படி ஒன்றும் நேர்ந்து விடாது."

"நான் சாதாரணப் பெண் இல்லையென்று உனக்கு எப்படித் தெரிந்தது? என்னை நீ பார்த்து ஒரு நாழிகை கூட ஆகவில்லையே?"

"பூங்குழலி! உன்னை அந்தக் கோவில் மதிலின் மீது முதன் முதலில் பார்த்த உடனேயே எனக்குப் பிடித்துப் போய்விட்டது. உன்னை ஒன்று கேட்கிறேன். அதற்கு உண்மையாக மறுமொழி சொல்கிறாயா?"

"கேட்டுப் பார்!"

"சேந்தன் அமுதன் உன்னுடைய காதலன் அல்ல என்பது நிஜமா? அவனை நீ மணந்து கொள்ளப் போவதில்லையா?"

"எதற்காகக் கேட்கிறாய்?"

"சேந்தன் அமுதன் என் சிநேகிதன். அவனுக்கு எதிராக ஒன்றும் நான் செய்யக் கூடாது. ஆனால் அவன் உன் காதலன் இல்லையென்றால்......"

"சொல்லு! ஏன் தயங்குகிறாய்!"

"அந்த ஸ்தானத்துக்கு நான் விண்ணப்பம் போடலாம் என்று பார்க்கிறேன். பூங்குழலி! காதலைப் பற்றி நீ குறைவாகப் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை. உலகத்தில் காதலைக் காட்டிலும் தெய்வீகமான சக்தி வேறு ஒன்றும் கிடையாது. அப்பர், சுந்தரர், சம்பந்தர் எல்லாரும் கடவுளைக் காதலனாகக் கொண்டு பாடியிருக்கிறார்கள். தொல்காப்பியரும், வள்ளுவரும், மற்றும் தமிழ்ப் பெரும் புலவர்களும் காதலைப் பற்றிப் பாடியிருக்கிறார்கள். காளிதாஸன் காதலைப் பற்றிப் பாடியிருக்கிறான். பிருந்தாவனத்தில் கண்ணன் கோபியரின் காதலுக்கு வசப்பட்டான்......"

"ஐயா! நான் ஒன்று சொல்கிறேன். அதை நன்றாய்க் கேட்டு மனத்தில் வாங்கிக் கொள்ளும்!"

"அது என்ன?"

"எனக்கும் உம்மைக் கண்டால் பிடித்துத்தான் இருக்கிறது. இரண்டு நாளைக்கு முன் வந்தவர்களைப் பார்த்ததும் உண்டான வெறுப்பு உம்மிடம் உண்டாகவில்லை......"

"ஓ! ஓ! நான் யோகசாலிதான்!"

"ஆனால் காதல், கீதல் என்ற பேச்சை மட்டும் எடுக்க வேண்டாம்!"

"ஏன்? ஏன்?"


"சேந்தன் அமுதன் என் காதலன் இல்லை. ஆனால் எனக்கு வேறு காதலர்கள் இருக்கிறார்கள்!......"

"அடடா! அடடா! வேறு காதலர்களா? யார்? எத்தனை பேர்?"

"இரவு நடுநிசியில் நான் வீட்டிலிருந்து எழுந்து செல்வேன். என்னைப் பின் தொடர்ந்து வந்தால் அவர்களை உமக்குக் காட்டுவேன். நீரே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்!"

இப்படிச் சொல்லிவிட்டுப் பூங்குழலி 'ஹா ஹா ஹா' என்று சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு வந்தியத்தேவனுடைய நெஞ்சை என்னமோ செய்தது. பாவம்! இந்தப் பெண்ணுக்குச் சித்தப்பிரமை போலும்! நம்முடைய காரியத்துக்கு இவள் மூலமாக எந்த வித உதவியையும் எதிர்பார்ப்பது வீண்! இவளிடம் ஒன்றும் சொல்லாமலிருப்பதே நலம்.





பத்தாயிரம் ஏக்கர் பண்ணையிலும் பெரும் நஷ்டம்!

வடார்காடு மாவட்டம் செங்கத்தில் இருக்கிறது மத்திய அரசு விவசாயப் பண்ணை. சுமார் பத்தாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு இதற்குச் சொந்தம். நூறு நிரந்தரத் தொழிலாளர்களும் இருநூறு பருவ காலத் தொழிலாளர்களும் வேலை செய்யும் இப் பண்ணை நஷ்டத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. என்ன காரணம்?

"ஏராளமான நிலப்பரப்பு இருந்தாலும் போதுமான அளவுக்குப் பாசனத்துக்கான தண்ணீர் வசதி இல்லை. சொட்டு நீர்ப் பாசனம் போன்ற முறைகளால் தண்ணீரைச் சிக்கனமாகப் பாய்ச்சியும்கூட சமாளிக்க முடியவில்லை. இருந்தாலும் நாங்கள் ஆண்டு தோறும் நஷ்டத்தின் அளவைக் குறைத்துக் கொண்டுதான் வருகிறோம். நிர்வாகம் மத்திய அரசிடம் இருந்தாலும் நிலம் மாநில அரசுக்குத்தான் சொந்தமானது. அதனால் மாநில அரசும் ஒன்றரைக் கோடி செலவில் பண்ணைக்காக ஒரு சிறு நீர்த் தேக்கம் கட்டித் தருவதாகச் சொல்லி, சர்வே எல்லாம் செய்து கொண்டு போனார்கள். அதன்பிறகு சத்தத்தையே காணோம். விரைவில் கட்டிக் கொடுத்தால் மிகவும் உதவிகரமாய் இருக்கும்!" என்றார் பண்ணையின் டைரக்டர் வி.கே. சர்மா.

— நமது நிருபர்கள்

கலங்கரை விளக்கின் அருகிலிருந்த வீட்டை அவர்கள் நெருங்கினார்கள். வீட்டுக்குள்ளிருந்து ஒரு பெரியவரும் வயது முதிர்ந்த ஸ்திரீயும் வெளியே வந்தனர். பூங்குழலியையும் மற்ற இருவரையும் குதிரைகளையும் பார்த்து விட்டுப் பெரியவர் திகைத்து நின்றார்.

"பூங்குழலி! இவர்கள் யார்? எங்கே இவர்களைப் பிடித்தாய்?" என்று கேட்டார்.

"நான் இவர்களைப் பிடிக்கவில்லை, அப்பா! இவர்கள்தான் என்னைப் பிடித்தார்கள்!" என்றாள் பூங்குழலி.

"எல்லாம் ஒன்றுதான். பொழுது போவதற்கு முன்னால் வீட்டுக்கு வந்து விடு என்று சொன்னால் நீ கேட்பதில்லை. முந்தாநாள் இரண்டு பேரை அழைத்துக் கொண்டு வந்தாய். இன்றைக்கு இரண்டு பேரை அழைத்து வந்திருக்கிறாய்! இவர்கள் எதற்காக வந்திருக்கிறார்கள்?"

"சக்கரவர்த்தியின் வைத்தியத்துக்காக மூலிகை கொண்டு போவதற்கு இவர்கள் வந்திருக்கிறார்கள், அப்பா!"

"ஏன் ஐயா! இந்தப் பெண் சொல்வது உண்மைதானா?" என்று அந்தப் பெரியவர் வந்தியத்தேவனைப் பார்த்துக் கேட்டார்.

"ஆம், பெரியவரே! இதோ சீட்டு!" என்று சொல்லி வந்தியத்தேவன் இடையில் கட்டியிருந்த துணிச் சுருளிலிருந்து ஓலை ஒன்றை எடுத்துப் பெரியவரிடம் கொடுத்தான்.

அதே சமயத்தில் இன்னொரு ஓலை தரையில் விழுந்தது. அதை அவசரமாகக் குனிந்து எடுத்துப் பத்திரப் படுத்தி வைத்துக் கொண்டான்.

"பெரிய மூடன் நான்! ஒரு தடவை காரியம் கெட்டும் புத்தி வரவில்லை!" என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டான்.


பெரியவர் அந்த ஓலையை வாங்கிக் கொண்டார். கலங்கரை விளக்கின் வெளிச்சத்தில் அதைக் கவனமாகப் பார்த்தார். அவர் முகம் மலர்ந்தது. தமது மனையாளை நோக்கி, "இளையபிராட்டி ஓலை கொடுத்து அனுப்பியிருக்கிறாள். இவர்களுக்கு உணவு அளிக்க வேண்டும். உள்ளே சென்று உன் மருமகளிடம் சொல்லு! சோற்றுப் பானையைக் கவிழ்த்து உருட்டி விடப் போகிறாள்!" என்றார்.

(தொடரும்)


விவரமறிந்தோர் நாடுவது
ஆஸ்ப்ரோ ஆறுதல்
அதி உன்னதமான
தலைவலி
நிவாரணி
உலகெங்கும் பல லட்சம் பேரின் நம்பிக்கை மருந்து


நான் ரசிப்பது...
காளி
கோன்
பருகப்பருக
பெருகிடும் இன்பம்!
ARTIFICIALLY
FLAVOURED.
CONTAINS NO
FRUIT JUICE OR PULP.
காளி மார்க்
காளி மார்க்
Kali mark
ADWAVE/KALI/2923 R

ஈரம்



கிணறு கூப்பிடுகிறது. ஏர் கூப்பிடுகிறது. பாலையில் உறங்கும் வேர்க்கடலை கூப்பிடுகிறது.

கொல்லையில் பனைமரத்தின் கீழ் வேட்டியை வழித்து உட்கார்ந்திருந்த அறுமுகம் அண்ணாந்து வானத்தைப் பார்த்தான். நீல வானில் வெள்ளியில் ஒரு கண் முளைத்த மாதிரி விடிவெள்ளி. அது கூப்பிடுகிற மாதிரி தோன்றிற்று. மழை வராது. வானம் உதறிப் போட்ட நீல வேட்டி மாதிரி அக்கடாவென்றிருந்தது.

கிணறு, ஏர், வேர்க்கடலை எல்லாமே போடுகிற கூப்பாடு மௌனமாக அவன் மனத்தைச் சுரண்டிற்று.

இன்னும் இரண்டு மெட்டு வெட்டி விட்டால் தண்ணீர் வந்துவிடும். ஒரு மெட்டுக்கு ஆயிரம் ஆய்விடும். அவ்வளவும் பாறை. முக்கால்வாசி வந்ததும் பல்லை இளிக்கும் பாறை. தோட்டா வைத்துத் தகர்த்தாலொழிய இலேசில் அசையாது.

இரண்டாயிரத்துக்கு எங்கே போவது?

நில அடமான பாங்கில் வாங்கிய லோனில் பாதியைத் தங்கை சுலோசனை கல்யாணம் விழுங்கிவிட்டது. இருந்த மிச்சத்தில் கிணறு பாதியில் நின்றது.

பணம், பணம், மனசு பணத்தை நோக்கிக் கூப்பாடு போட்டது.

மூன்று ஏக்கர் மேட்டு நிலத்தையும் இப்படி ஒரு மொட்டைக் கிணற்றையும் வைத்துக் கொண்டு விழிப்பவனுக்குப் பணம் தர எவரும் தயாராயில்லை. அதுவும் பாங்கில் அடமானம் போட்ட நிலம்.

நினைத்து நினைத்தே மனசு ஒரு சுரங்கமாகி விட்டது. கையாலாகாத்தனத்தையும், கசப்பையும் எதிரொலிக்கிற சுரங்கம்.

பருவ மழை பெய்திருந்தாலாவது மேட்டு வெள்ளாமைக்குக் கரம்பை ஓட்டி கடலைக்காய் போட்டிருக்கலாம். மழை பெரிய மௌனமாகச் சாதிக்கிறது. மழை வரவில்லை யென்று கங்கம்மாவுக்குக் கூழ் வார்த்தார்கள். சேரியிலிருந்து ஒரு கூட்டம் பெண்கள் ஏரிக்கரைக்குப் போய் மாரடித்து ஒப்பாரி வைத்து அழுதார்கள்.

வானம், இந்த மனிதர்கள் இன்னும் என்னென்ன செய்ய முடியும் என்று வேடிக்கை பார்த்தது. ஊருக்குள் பாரதப் பிரசங்கம். அர்ஜுனன் தவசுக்குப் பனை மரம் நட்டு, ராத்திரி வேளைகளில் சிறுவர்கள் கூட்டம் அதைச் சுற்றிக் கபாடி விளையாடுகிறது.

அர்ஜுனன் தவசு தப்பினால், பதினெட்டாம் போரன்று கட்டாயம் மழை உண்டாம்.

இப்படித்தான் காமனை எரிப்பதற்கு ஊர் முழுக்கப் பழம்பாய், துடைப்பம், முறம் என்று சேகரிக்கிற போதும் சொன்னார்கள். மழை வரவில்லை. காமன் வேஷம் போட்டுக் கொண்டு ஊர் முழுக்க அலைந்த சாமிநாதன் ரதி ஒப்பாரியைக் கேட்டு, தண்ணியடித்துத் தூங்கிப் போனான்.

மழை வரவில்லை!

அது தற்போது வராமலிருப்பதில் ஆறுமுகத்துக்குக் கொஞ்சம் ஆறுதல். அதற்குள் எங்காவது பணம் புரண்டால் ஒரு மெட்டு இறக்கி விடலாம். மழை வந்தால் கிணறு வெட்டை நிறுத்தி விட வேண்டியது தான். கிணறு வெட்டு ஆட்களும் தெற்கே போய் விடுவார்கள். ஆறுமுகம் பெருமூச் செறிந்தான்.

போன வருஷம் காசிக்கு ஊரில் ஒரு குடும்பம் போய்விட்டு வந்தது. கங்கை சமுத்திரமாக ஓடுகிறதாம்! வழியெல்லாம் கிருஷ்ணா, கோதாவரி என்று நதிப் பிரவாகங்களைப் பற்றி அவர்கள் கொட்டியளந்த போது வாய் பிளந்து கேட்டான் ஆறுமுகம்.

மனத்துக்குள் புண்ணைப் பிடுங்குவது போல் ஒரு வேதனை. இந்த ஊர், இந்த மாவட்டம் என்ன பாவம் பண்ணியது? கொட்டாறு போல் ஒரு மணல்வெளி. அதற்கும் எட்டு மைல் போக வேண்டும். பெயர் தான் பாலாறு. பாலாவது கிடைத்துவிடும். தண்ணீர் தான் கிடைக்காது.

''யார்ராது பனைமரத்தடியிலே?''

தூரத்தில் ஒரு குரல். அசப்பில் துரைசாமி மாதிரி இருந்தது. குரல் மாற்றம்.

''நான்தான், ஆறுமுகம்!''

''ஆறுமுகமா... எவனோ நொங்கு திருட ஒக்காந்திருக்கான்னு பார்த்தேன்!''

பேசியது பெருமாள். இப்போது குரல் தெளிவாயிற்று. ஆறுமுகம் எழுந்து விட்டான்.

''என்னடா இவ்வளவு கார்த்தாலே?''

''ஜலவாதிக்கு வந்தேன்.''

''தங்கச்சி, புள்ள பெத்துக்க வந்துச்சே, ஊருக்குப் போயிடுச்சா?''

''போயிடுச்சப்பா!''

''மச்சானுக்கு என்ன சீரு பண்ணே?''

''என்னத்தப் பண்றது? வெள்ளி அரணைக் கொடியும் காலுக்குக் கொலுசும் போட்டு அனுப்பிச்சேன்.''

மாப்பிள்ளை தோல்ஷாப்பிலேருந்து நின்னுட்டானாமே!''

''ஆமா... அவருக்குக் கைகட்டிச் சம்பளம் வாங்கறது பிடிக்கலியாம். லுங்கி வியாபாரம் பண்ணப் போறேன்னு சைக்கிள்ள லுங்கியைக் கட்டிட்டு அலையறார்...''

பெருமாள் சூள் கொட்டினான். பெருமாளுக்கு அக்கா, தங்கை, அண்ணன், தம்பி என்று பிக்கல் பிடுங்கல் கிடையாது. அவன், சிவப்பாய், வாட்டசாட்டமாய், பார்த்தால் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல அவன் மனைவி கோவிந்தி.

இருவருமே கஷ்டவாளிகள். பெருமாள், காடான காட்டுக்குள்ளும் போய் விறகு வெட்டித் தலைச்சுமை எடுத்து டவுனில் விற்று வருவான். கோவிந்தி ஆடு மேய்ப்பாள்!

ஆரம்பத்தில் நாலு உரு ஆடுதான். போன மாதம் கலப்பைக்காக மரம் வெட்டி வர நாடு பார்த்தான். மலைக்குப் போய்த் திரும்பும் போது, ஆட்டு மந்தையோடு அவளைச் சந்தித்தான். எண்பது உருவுக்கு வளர்ந்திருந்தது. பெரிய மந்தை.

''என்ன கோவிந்தி, பணக்காரி ஆய்ட்டே?''

''அட போயெண்ணா... ஒங் கண்ணு ஒண்ணு படாத இருந்ததுதான் கொறச்சல்.''

''அல்லார் கண்ணும் பட்டிருச்சா?''

''பின்னே... நாலு உரு வைச்சிருந்தா கோவிந்தி. எண்பது உருவாக்கிட்டா. ஆட்டுக்குநூறுன்னாலும்எட்டாயிரம்னு காது படப் பேசிக்கறாங்க.''

''பேசத்தான் பேசுவாங்க! ஆம்படையானும் பொண்டாட்டியுமா ஓடி ஓடிச் சம்பாரிக்கறீங்களே, — புள்ளையா குட்டியா? யார் தின்னப் போறாங்க...? எதுக்குச் சேத்து வக்கறீங்க? ரெண்டு வட்டி மூணு வட்டின்னு ஊருக்குள்ளே ஒங்க பணம் ஓடுதாமே?''

கோவிந்தி வெட்கத்தோடு சிரித்தாள்.

''ஒனக்கு இன்னாண்ணா மூணு ஏக்கர் பூமி வச்சிருக்கே... பேசறே! எங்களைச் சொல்லு. தோல் ஷாப் ஓரமா இருந்த நெலத்திலே மருந்துத் தண்ணி பாஞ்சு பாஞ்சு பூமி பாழாப் போயி, அதை வித்துக் கொண்டாந்த பணம் ஜீரணமாயிப் போச்சு. குத்தகைக்கு ஒட்ற நெலத்திலே ஒரு குடிசை போட்டிருக்கோம். எழுந்துக்கங்கன்னு செட்டியாரு சொன்னா எழுந்துக்க வேண்டியதுதான்.''

''அப்போ நெலம் வாங்கப் பணம் சேத்தறீங்க!''

அதற்குக் கோவிந்தி பதில் சொல்லாமல் சிரித்தாள்.

நிலம் வைத்திருப்பவன் பணத்திற்கும் பணம் வைத்திருப்பவன் நிலத்திற்குமாக என்ன பறப்பு இந்தப் பறப்பு?

பெருமாள் நின்று கொண்டிருக்க, வேலஞ்செடியில் முள்ளை விலக்கி, பல் துலக்கக் குச்சி ஒடிக்கும் போது, என்ன ஜாக்கிரதையாகக் குச்சி ஒடித்தும் முள் சற்றுக் கீறி விட்டது. ஒரு பொட்டு ரத்தம் கீழே கிடந்த சருகில் துடைத்து எறிந்தான்.

கழயவன்



அபசகுனம்

வேலே தேடித் தேடி
அலுத்துப் போனபோது —
'நோ — வேகன்ஸி'
போர்டு எழுதிச்
சம்பாதிக்கத் தெரிந்த
நண்பனைப் பார்த்தேன்
பெருமூச்சு விட்டேன்!

— நடாதூர் வி. திருமகன்

''என்னடா ஆறுமுகம்... ஆனி அழிஞ்சுடுச்சு. இன்னும் மழையில்லே...?''

''ஒனக்கு மழையில்லேன்னு என்ன கவலே? வெறகு வெட்டச் சவுகரியமாச்சு. ஆட்டுக்கு வேலங்காய் தின்னே வயிறு ரொம்பிடும்.''

''தெரியாதா விஷயம்?''

''என்னதுண்ணா?''

''ஆடுங்களே வித்துட்டேண்டா.''

''மொத்த உருவுமா?''

''மொத்தமுந்தான்.''

''பெரிய தொகை கெடைச்சிருக்குமே!''

''ஏதோ கெடைச்சுது.''

ஆறுமுகத்திற்குப் பாறைக்கு அடியில் நீர் கசிவதுபோல் ஒரு நம்பிக்கை. பெருமாளிடம் பணம் இருக்கிறது.

''என்னண்ணா அவ்வளவு பிருவாச் சொல்றே.''

''இதிலே என்னடா பிருவு. கெடச்சுதுன்னு தான் சொன்னேனே...''

பெருமாளின் பணம் பிருவாகச் சேர்த்தது தான். ஆடு மேய்த்து, விறகு சுமந்து, கரும்பாலே சீஸனில் வெல்லப் பதம் பார்த்து, ஈரத் துணியைக் கையில் வைத்து, கைசூடு பொறுத்து, வெல்ல உருண்டை உருட்டிக் கூலி வாங்கிச் சேர்த்த பணம்.

காலேயில் கேழ்வரகுக் களியும் புளி ஊறுகாயும் சாப்பிட்டுவிட்டுப் புணையில் கூழை ஊற்றித் தோளில் மாட்டி, மூங்கில் கூப்பில் மூங்கில் வெட்டி, அது தப்பினால் விறகு சுமந்து நகரத்தில் கேட்கும் அடாவடி விலேக்கு எதிர்ச் சவால் போட்டுச் சேர்த்த பணம்.

''எட்டு ரூபா வந்ததா?''

''கூடக் குறையன்னு வைச்சுக்கயேன்.''

தாயத்தை எப்படி உருட்டுவது என்று யோசிக்கிற மாதிரி மௌனமானான் ஆறுமுகம்.

''பணத்தை என்னண்ணா பண்ணப் போறே?''

''கைல ஏது? அப்பவே வாங்கினவுடனே கை மாறிடுச்சே.''

சப்பிட்டுவிட்டது. சுதாரித்தான் ஆறுமுகம். பெருமாள் பண விஷயத்தில் கறாரானவன். பிடியே தர மாட்டான்.

''எத்தினி வட்டிக்கு?''

''ரெண்டரை வட்டிதான்.''

''யாருக்கு?''

''அந்தக் கதை ஒனக்கு ஏண்டா?''

மீண்டும் நம்பிக்கை ஆறுமுகத்திற்கு மீண்டது.

''கொஞ்சம் நில்லுண்ணா, போயிடாதே! தோ வந்துடறேன்.''

ஆறுமுகம் சரசரவென்று செவத்தான் கிணற்றுக்குப் போனான். அக்கம்பக்கம் எல்லாம் மோட்டார் பம்ப் போட்டுவிட்ட இந்த நாளில், அவன் ஒருவன் மட்டும்தான் 'கவலே' இறைத்துக் கொண்டிருந்தான். ஆறுமுகம் கால் கழுவித் திரும்பும்வரையில் ஒரு பல் குச்சியை மென்று கொண்டு பெருமாள் நின்று கொண்டிருந்தான்.

''பெரியப்பு நெலத்தைப் பேசிக்கிட்டிருந்தியே, படிஞ்சிடுச்சா?''

''டேயப்பா... அவன் ஆனே வெல சொல்றும்ப்பா. அது நமக்குக் கட்டாது.''

''பேரத்துக்கு உக்காந்து பார்த்தியா?''

''அவன்தான் எடமே குடுக்கலியே.''

''பாம்புக் கடிக்கு மந்திரம் போடற முனிசாமி முட்றுப்பிலே இருக்கு.''

''அவரு மட்டுமா? காங்கிமேன் இல்லே... குறிகாரி ஆம்படையான். அவனும் மோதறான். அதனாலேதான் பெரியப்பு கோபுரத்திலே ஒக்காந்திருக்கான்.''

ஆறுமுகம் எதிர்பார்த்த தகவல் வந்துவிட்டது. பெருமாளு சொன்னதுபோல் பணம் கைமாறவில்லே. காத்திருக்கிறது. ஏரிக் கரை கொக்கு போல.

''நான் பேசிப் பாக்கட்டுமா அண்ணா.''

''அவன் மசிய மாட்டாண்டா.''

''இல்லேன்னா சிங்காரத்தை ஜ°ரிவிட்டா கேப்பான்.''

''எந்தச் சிங்காரம்?''

''தெருக்கூத்துச் சிங்காரம்.''

''முயற்சி பண்ணிப்பாரு.''

''உன் முடிவு சொல்லு.''

''பதினஞ்சுக்கு மேலே வேணாம்டா.''

ஆக, பெருமாளிடம் பதினேந்து நிகரம் உண்டு.

''ஆமா, விடிகாத்தாலே நீ எங்கே இங்கே வந்தே?''

''செட்டியாரு ஆங்கு வேணும்னு சொல்லிட்டிருந்தாரு. இது முத்திட்டிருக்கும்னேன். பரவால்லேன்னாரு. யாரோ மரத்தடியிலே ஒக்காந்திருக்கான்னு தோணிச்சு. அதுக்குத் தான் வந்தேன்.''

''அண்ணா.''

ஆறுமுகம் பனிச்சென்று தொனி மாறிக் கூப்பிட்டான்.

''என்னடா?''

''கெணறு வெட்டுப் பாதியிலே நின்னிருக்கு.''

''அதான் பார்த்தேனே...''

இருவரும் நடந்து கொண்டே ஆறுமுகம் கிணற்றருகே வந்துவிட்டனர். பொழுது.



செயலர்: உங்களைப் பார்க்க ஒரு தாடி வச்ச சாமியார் வந்திருக்கார். ஒரு காலத்தில் அவரை நீங்க காதலிச்சீங் களாம்!

நடிகை: கத்தப் பொய்! சாமியார் யாரை யும் எந்தக் காலத்திலும் நான் காத லிக்கவேயில்லை!

— மீனம்தனுசு

முதல் சலவையில் சாயம் போன துணி மாதிரி மெல்ல வெளுத்திருந்தது. மரங்களில் கீச்சு கீச்சு கீச்சென்று ஒரே சத்தம்.

பெருமாள் சத்தத்தைக் கேட்டு மரங்களை நிமிர்ந்து பார்த்தான்.

"அணிலுங்க இணை தேடற காலம்டா ஆறுமுகம். இன்னும் மழை விழலே."

அப்போதைக்கு அப்போது ஆளுக்கு ஆள் சொல்லிக் கேட்டு மரத்துவிட்டாலும், மழை இல்லாத செய்தி நறுக்கென்று, ஒரு கத்தி செருகியது போலக் குத்திவிட்டுத்தான் போகிறது.

"மண்ணைப் பாத்தியாண்ணா?"

பெருமாள் குனிந்து நிலத்தைப் பார்த்தான். செம்பாட்டு மண் தாகத்தில் வறண்டு வெடிப்புவிட்டு வாய் பிளந்திருந்தது.

"கெணத்தைப் பாரேன்."

பெருமாள் குனிந்து பார்த்தான்.

மழித்துவிட்ட கருப்புத் தலை போல, உள்ளே ஒரு பாறை முகம் எழும்பி நின்றது.

"எத்தனை மெட்டு வெட்டணும்னு தண்ணி பாக்கறவரு?"

"இன்னும் ரெண்டு மெட்டாம். அந்தப் பாறையை ஒடச்சு எடுத்துட்டா கீழே ஜீவ தாரை ஓடுதாம். ஒரு மெட்டுக்கு ஒரு ரூபான்னு ரெண்டாயிரம் வேணும்."

கிணறு, குடிபெயர்ந்தவர்கள் கைவிட்ட வீடுபோல் அத்துவானமாக இருந்தது. எவ்வளவு பணத்தை இதில் கொட்டுவான் ஆறுமுகம்?

"நான் ரெண்டரை வட்டி கொடுக்கறேண்ணா. ஒரு ரெண்டு ரூபா 'எல்ப்' பண்ணு."

"என்னடாது வெள்ளாட்றியா? அதான் மின்னாலியே சொல்லிட்டேனே, கைவசம் எங்கிட்டே பணம் இல்லேன்னு."

அந்த நேரத்தில் மூசுமூசுசென்று இரைத்து நாக்கைத்தொட்டுப்போட்டு,வயிறும்சுமையுமாய்க் கர்ப்பமாயிருந்த பெண் நாய் ஒன்று ஆறுமுகம் கிணற்றுக்குத் தொட்டி கட்டியிருந்த இடத்திற்கு ஆவலாக ஓடி வந்தது.

இருவரும் அதைத் திரும்பிப் பார்த்தனர்.

நாய் தொட்டியைச் சுற்றி வந்து மோந்து பார்த்துத் தண்ணீர் ஓடும் கால்வாயை ஒரு முறை குனிந்து, எதையோ தேடிவிட்டு இருவரையும் பார்த்தது. தண்ணீர்.

பெருமாள் அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"கொஞ்சம் யோசனை பண்ணிச் சொல்லுண்ணா.

பெருமாள் நாயையும் கிணற்றையும் ஒரு முறை பார்த்துவிட்டு ஆறுமுகத்தைப் பார்த்தான்.

"நான் கார்த்திகை தீபத்துக்கு அண்ணாமலையாரைப் பார்க்கக் குடும்பத்தோட போகணும்னு ஒரு உண்டி போட்டு வச்சிருக்கேன்."

"கார்த்திகைதானேண்ணா! அதுக்குள்ளே களக்கா அறுவடை வந்துடும். நான் திருப்பிடறேன்."

பெருமாள் ஏமாற்றத்துடன் வயிற்றுச் சுமையோடு திரும்பிச் செல்லும் நாயையே பார்த்துக் கொண்டு சொன்னான்.

"அது சாமி உண்டிக்கைடா. கொழந்தையில்லேன்னு கும்பிடிக்கைக்காக எட்டு வருஷமா வளர்ற உண்டி."

"அதான் சொல்லிட்டியேண்ணா."

"முழுக்கக் கேளு."

"சொல்லு."

"உண்டிக்கையை ஒடைக்கிறது தெய்வ குத்தம்."

ஆறுமுகம், காக தலையாக விழப் போகிறதா, பூவாக விழப் போகிறதா என்பது போல் பெருமாளைப் பார்த்தான்.

"ஒடைச்சு எடுத்த காசை வட்டிக்கு விடறது பெரிய பாவம்டா."

காசு சுண்டிக் கொண்டு மேலேதான் கர்ணம் போட்டுக் கொண்டிருந்தது. இன்னும் தரையில் விழவில்லை.

"கார்த்திகை பொறந்ததும் திருப்பிடுவே இல்லே...."

"களக்கா பிடுங்கக் காலம் தப்பிப் போச்சுன்னாக்கூடத் தோட்டத்தைக் காட்டிக் கவுண்டர்கிட்டே பணம் வாங்கித் தரேண்ணா!"

"எனக்கு வட்டி வேண்டாம்டா."

பாறைக்குக் கீழே ஒரு கண் பிளந்து சர சரவென்று ஊற்றுப் பொங்கிய மாதிரி ஈரம் படர்ந்தது, ஆறுமுகம் மனத்தில்.

"அண்ணா....!" என்றான்.

கண் பார்வை, அடுத்த கொல்லைக் கிணற்றில் தண்ணீர்த் தேடிக் கொண்டு போகும் அந்தக் கர்ப்பிணி நாயையே ஏதோ யோசனையில் பார்த்துக்கொண்டிருக்க, பெருமாளுக்கு தூரத்தில் அதன் வால் ஆடுவது மட்டும் தெரிந்தது.

நிழல் யுத்தம்

16

பாலகுமாரன்

இலை போட்டுக் காத்திருந்தார்கள். அம்மா மூன்று தினுசு காய்,இரண்டு கூட்டு, இரண்டு பச்சடி என்று அட்டகாசம் செய்திருந்தாள். கருணைக் கிழங்கு வறுவல், கார பிஸ்கட் மிக்ஸர் என்று புதிது புதிதாய் லலிதாவுக்குக் காட்டினாள். "உப்பு போறுமோ, பாரு" என்று ரசத்தை உள்ளங்கையில் விட யத்தனித்தாள்.

"தம்ளர் கொடுங்கோம்மா."

சின்ன தம்ளரில் அரை தம்ளர் ரசம் ஊற்றப்பட ,லலிதா மெல்ல உதடு பொருத்திக் குடித்துவிட்டு,'டாப் க்ளாஸ்' என்றாள்.

முரளியோட அப்பாக்கு ரசம் ரொம்ப நன்றாயிருக்கணும். இலைல ஓட ஓட விட்டு உறிஞ்சிக் குடிக்கணும்.

"நீ கொஞ்சம் ரசம் குடிக்கிறயா முரளி?"

"ஜி. எம். வரட்டும்மா."

பசி வயிற்றைக் கிள்ளியது. பன்னிரண்டரை மணியிலிருந்து 'வருவார் வருவார் என்று காத்திருந்து இரண்டு மணிக்குப் போன் பண்ணிக் கிளம்பிவிட்டார் எனத் தெரிந்து வாசலுக்கும் உள்ளுக்குமாய், அலைகையில் தட்டு வேட்டியும் அரைக்கைச் சட்டையுமாய் ஜி. எம். உள்ளே நுழைகையில் அப்பாடா என்று தோன்றிவிட்டது.

ஒண்டுக் குடித்தனங்கள் தடக் தடக்கென்று வெளியே தலை நீட்டின. பல் காட்டின. ஜி. எம். உள்ளே நுழைந்ததும் வெளிச்சத்தையும் காற்றையும் மறைத்து,படிவாசலை அடைத்துக் கொண்டன.

"ரொம்ப சிம்ப்பிள்.... ரொம்ப சிம்ப்பிள்!"அடுத்த போர்ஷன் மாமி ஜி.எம். ஐ உற்றுப் பார்த்து முகத்துக்கு எதிரே பாராட்டினாள்.

"போறும் போ அந்தப் பக்கம்" என்று முரளிக்குச் சொல்லத் தோன்றிற்று.

"வேஷ்டி எனக்குச் சரியா இருக்கா சங்கரன். ரொம்ப வருஷம் ஆயிடுத்துப்பா கட்டிண்டு."

"சும்மா தஞ்சாவூர் மிராசு மாதிரி இருக்கேள்" சங்கரன் கைகட்டிப் பாராட்டினார். முரளிக்கு ஜி. எம். மாறு வேஷப் போட்டிக்கு வந்தாற்போலத் தோன்றினார்.

"உட்காரலாமா?" முரளி மெல்லக் கேட்டான்.

"நமஸ்காரம்பண்ணிட்டுஉட்காருங்கோ".

முரளியும் லலிதாவும் நமஸ்காரம் செய்தார்கள். நமஸ்கரிக்கிறபோது அம்மாவை வந்தவுடன் நமஸ்கரிக்காதது நினைவுக்கு வந்தது. ஏன் யாரும் சொல்லவில்லை என்று கேள்வி வந்தது.

"ரிசப்ஷனுக்கு வெறுங்கையோட வந்துட்டேன் சங்கரா.... என்னுடைய ஸ்மால் ப்ரெஸெண்ட்" ஜி. எம். நீட்ட, முரளி வாங்கிக் கொண்டான்.

"உங்க ஆசீர்வாதத்தை விடவா ப்ரெஸெண்ட் முக்கியம்."

"அதெப்படி.... நமஸ்காரம் பண்ணினா வெறும் கையோட அனுப்பக் கூடாதுன்னு ஒரு சம்பிரதாயம் உண்டே."

"அடேங்கப்பா.... சகலமும் தெரிஞ்சு வச்சிருக்கேள்."

"விடப்படாது. டைகட்டித் தொழில் செய்தாலும் இதுல இருக்கிற நிறைவு, சந்தோஷம் எதுல உண்டு, சொல்லு."

"ஆயிரத்துல ஒரு வார்த்தை."

"உட்காரலாமா?"

"உட்காரலாம்."

"முரளி, இப்படி சார் கூட உட்கார்" சங்கரன் முன்னே தள்ளினார்.

"லெட் ஹெர் ஆல்ஸோ ஸிட்! இப்படி அவன் கூட உட்காரும்மா."

"இல்லை.... பரிமாறணும்."

"பரவாயில்லை லலிதா, சார் சொல்றார் கேளு" சங்கரன் லலிதாவையும் உட்கார வைத்தார்.

"சார், இது என் தாயார். அம்மா.... சித்த இப்படி வாயேன்."

சமையலறைச் சுவர் தாண்டி அம்மா ஹால் விளிம்புக்கு வந்தாள்.

"ரொம்பச் சந்தோஷம்." ஜி.எம். கைகூப்ப, அம்மா தலையாட்டினாள்.

வெறுமே ஒரு மௌனம் நிலவியது. என்ன பேசுவது என்று தெரியாமல் இறுகப் பரவிற்று.

"ஆரம்பிச்சுடலாமே....", சங்கரன் உடைக்க, அம்மா சமையலறைக்குப் போனாள்.

சகலரும் உட்கார அம்மாவும் ஒரு மாமியும் பரிமாறினார்கள்.

பேசிக் கொண்டே சாப்பிட்டார்கள். ஜி.எம். முரளியின் தந்தை பற்றி, அவர் மரணம் பற்றி, படித்த விதம் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

"என்ன சாப்பிட மாட்டேங்கறே.... டயட்டா?" எட்டி லலிதாவை விசாரித்தார்.

"இல்லை. மத்தியானம் நான் ஜாஸ்தி சாப்பிடறதில்லை. தூக்கம் வர்றது."

"கரெக்ட். நானும் ப்ரெட், ஆம்லெட், காப்பியோட நிறுத்திடுவேன். அப்படியும் தூக்கம் வரும்."

எல்லோரும் சிரித்தார்கள்.

முரளிக்கு இந்த விருந்தே வேஸ்ட் என்று தோன்றிற்று.

"பியானோ எய்த் க்ரேடாமே நீ... உங்கப்பா சொன்னார்."

"ம்ம்."

"கல்யாணத்துக்குப் பாட்டுக் கத்துக்கற மாதிரி கத்துண்டதா, இல்லே....."

"ஐ லவ் ம்யூசிக்."



''குட். டென்த் க்ரேட் வரைக்கும் போக ணும். முரளி சொன்னுன்னு விட்டுருதே.''

''அவரும் கத்துக்கப் போறுராம்.''

''அடி சக்கை.... யாரு மச்சர்.... நீயா?''

லலிதா சிரிக்க,முரளி அசடு வழிந்தான்.

''பியாஞே இல்லே! பியாஞேவுக்கு என்ன பக்கவாத்தியம்னு கேட்டார்.''

''போச்சுடா. முதல் நாளன்னிக்கே பக்க வாத்தியம் பேச்சா...'' ஜி. எம். தொடை தட்டிச் சிரித்தார்.

மறுபடி ஹால் பருக்கை தெறிக்கச் சிரித்தது.

''இல்லே. பொண் பார்க்க வந்தபோதே கேட்டார்.''

மறுபடி சிரித்தார்.

''பார்த்தவுடனே கட்டிப் போட்டுட்டே. வெரிகுட். வெரிகுட். என்னப்பா முரளி பியாஞேவுக்கு எது பக்க வாத்தியம்?''

ஹால் அதிர்ந்தது.

''வெட்கப்படாத.நீ வாய் விட்டுக் கேட்டுட்டே. நாங்க எல்லோரும் கேட்காத. அப்பப்பக் கிடைக்கறதை எடுத்துப் பக்கவாத்தியமா, பெண்டாட்டிக்கு வாசிக்கிறோம்.''

மறுபடி குலுங்கியது.

''பொண்டாட்டி சுப்ரீமா இருக்கறது ஒரு ப்ளஷர்.பெரிய கொடுப்பினே.அக்கடான்னு வீட்டை அவகிட்டக் கொடுத்துட்டு ஆபீஸே கதியா இருக்கலாம். வீடு, சமையல், காஸ், பால் கணக்கு எதுவும் தெரியாது எனக்கு.''

''பாக்கியம்... பாக்கியம்....'' சங்கரன் ஒத்துப் பாடினுர்.

கையலம்பினுர்கள். அவசரமாய்எச்சலிட்டுத் துடைக்கும்வரை வாசலில் நின்றிருந்தார்கள். ஈரம் காயுமுன் பாயை உதறிப் போட்டு வெற்றிலேத் தட்டை வைத்ததும் உள்ளே நுழைந்தார்கள்.

''இந்தக் கல்யாணமே உங்களால் நடந்தது. சங்கரன் ஜி. எம். கையைத் திருப்பி வாசனேப் பாக்கைக் கொட்டினுர்.

''நான் என்ன பண்ணினேன்!''

''வந்து உங்ககிட்ட முரளி வேலேக்குச் சொல்றபோது எனக்கு அழுகையே வந்துடுத்து.''

''கவனிச்சேன்.''

''டக்குன்னு என் நிலேமையப் புரிஞ்சுண்டு... பகவானே... நேரம்.... என் நல்ல நேரம்.''

''இல்லே. நீங்க பேசறபோது என் நிலேமையை யோசிச்சேன். நானும் உங்களே மாதிரி... உங்களுக்காவது ஒரு பொண்ணு. எனக்கு ரெண்டு பேர். பெரிய படிப்புப் படிக்க வைக்கிறோம். ஹாஸ்டல்லே தங்க வைக்கிறோம். இஷ்டத்துக்கு உடுத்த, சாப்பிட வைக்கிறோம். ஆனு கல்யாணம்....? யாரையாவது இழுத்துண்டு போன்னு சொல்ல முடியுமா? சொல்ல மனசு வருதா?''

''அதெப்படி... அதெப்படி....''

''கல்யாணம்ங்கறது மட்டுமாவது இப்படித்தான் நடக்கணும். கம்ப்யூட்டர் சயன்ஸ் படிச்சாலும் நம்ம குழந்தை இப்படிக் குனிஞ்சு தாலி கட்டிண்டாத்தான் நமக்கு ஒரு சந்தோஷம். திருப்தி.''

''இல்லேயா...!''

''எங்க வீட்டுக் கல்யாணத்துக்கெல்லாம் சங்கரன் உங்களேத்தான் நம்பியிருக்கேன்.''

''ஒரு வார்த்தை.... ஒரு வார்த்தை சொல்லுங்கோ. ஜானவாசக் கார்லேர்ந்து கட்டுச் சாதக் கூடை வரைக்கும் நான் இருக்கேன், இன்சார்ஜ்...''

''உம்முது சொந்த வீடா?''

''ஆமாம்.''

''எப்போ வாங்கினது? இந்த இடம் முரளிக்குப் போறுதே.....''

''கொஞ்சம் சிரமம். பழகிட்டார் போல இருக்கு''.

''மாப்பிள்ளேக்கு ஒரு வீடு வாங்கிக் கொடுத்துடும். சந்தோஷமா இருக்கட்டும்.''

''பகவான் இருக்கார். சாமர்த்தியம் உள்ள பிள்ளே. உங்களே மாதிரி உள்ளவா தட்டிக் கொடுத்தா முன்னுக்கு வந்துருவான்.''

''ஸின்ஸியரா வேலே செய்யட்டும். எங்க கொண்டு போய் நிறுத்தறேன் பாருங்கோ.''

''பெரிய வார்த்தை. முரளி கேட்டுக் கோப்பா.''

''ஆபீஸே கதியா இருக்கணும். எக்ஸிக்யூட்டிவ்ன்னு வந்துட்டா அவனுக்குப் பொழுதுபோக்கு, விளையாட்டு, வேலே எல்லாம் ஆபீஸ்தான்.''

''ரொம்ப கரெக்ட்.''

''அதுக்கு நல்ல மனேவி வேணும். வீட்டுக் கவலேயே தராத மனேவி வேணும்.''

''கேட்டுக்கோ லலிதா.''

''இந்தச்சூட்சமம்புரிஞ்சுது...வாழ்க்கைல டாப் ரேங்க் ஆபீஸரா வந்துடலாம். காசாக் கொழிக்கலாம்.''

''அனுபவம்... அனுபவம் பேசறது.''

''என்னமோ எனக்குத் தெரிஞ்சதைச் சொன்னேன். கிளம்பட்டுமா!''

வாசல்வரை போய் வழியனுப்பினுர்கள்.

''உங்கம்மாகிட்டச் சொல்லு. ஏ கிளாஸ் சாப்பாடு''—கார் கிளம்பும்போது ஜி. எம். சொன்னுர். கையசைத்தார். இறுகப் பின்ஞல் சாய்ந்து கொட்டாவிவிட்டார். கார் கிளம்பிற்று.

மறுபடி உள்ளே வந்தார்கள். சங்கரன் விடை பெற்றுக் கிளம்பினுர். லலிதா வாசல் வரை அவரை வழியனுப்பிவிட்டு வந்தாள்.

''அம்மா சாப்பிட்டாளா...'' உள்ளே நுழைந்ததும் கேட்டாள். ஹாலில் சோர்வோடு உட்கார்ந்திருக்கும் அம்மாவின் எதிரே இலே போட்டாள்.

''எனக்கு ரசம் சாதம் போறும் லலிதா.''

''ஏம்மா?''

''தலே மறுபடி கிறுகிறுக்கறது''

''இத்தனே ஐட்டம் எதுக்கு இழுத்துப் போட்டுண்டேள்.''

''ஆசை...''

''கஷ்டப்படறேளே...''

''இன்னிக்கு ஒரு நாள்தானே. நம்ம சமையல்னு நிறைய.... தோணினது பண்ணினேன்.''

லலிதா அம்மாவை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வையில் நட்பு இல்லே.

(தொடரும்)

அந்தோ! ஆம்பூர் நகராட்சி.



நாகராஜன்



காற்றடித்தால் இடிந்து விழும்.....!

"எங்கள் ஆம்பூர் நகராட்சிக்கு ஆண்டுக்கு முப்பத்தாறு லட்சம் ரூபாய்க்குமேல் வருமானம் வருகிறது. அப்படியிருந்தும் நகராட்சிக்குச் சொந்தமான குப்பை லாரி ஒன்று சுமார் பத்தாண்டுகாலமாக ரிப்பேரானபடியேதான் கிடக்கிறது. இறந்து போன ஏழு நகர சுத்தித் தொழிலாளர் குடும்பங்களுக்குப் பணிக் காலத்தில் இறந்தால் கொடுக்கப்பட வேண்டிய இருபதாயிரம் ரூபாயை அவர்கள் இறந்துபோய் ஓராண்டுக்கு மேலாகியும் கொடுக்கவில்லை. கடந்த 84—ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற ஆறு தொழிலாளர்களுக்கு இன்னமும் கிராஜுவடி பணம் கொடுக்கப்படவில்லை.

"இவை எல்லாவற்றையும்விட ஒரு வேடிக்கை, நகர சுத்தித் தொழிலாளர்களில் கனகராஜ்என்றபெயரில்இருவர் இருந்தனர். ஒருவரின் தந்தை பெயர் சுந்தசாமி. மற்றவரின் தந்தை பெயர் கண்ணன். இந்நிலையில் இருவருக்கும் வித்தியாசம் தெரியாமல் சுந்தசாமி மகன் கனகராஜ் கட்டிய எல்.ஐ.சி. பிரீமியத்தைக் கண்ணன் மகன் கனகராஜ் பெயரிலேயே வரவு வைத்துக் கொண்டு வந்து விட்டார்கள். பிரீமியம் கட்டியவர் இப்போது இறந்துபோய்விட்டார். அவருடைய குடும்பத்தார் இப்போது அந்த எல்.ஐ.சி. பணத்தை வாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் ஆம்பூர் நகராட்சியிலுள்ள அத்தனை தொழிலாளர்களும்எதிர்ப்புத்தெரிவிக்கும்விதமாக எல்.ஐ.சி. பாலிஸிகளைச் சரண்டர் செய்து விட்டோம்.

"மேலும் நகராட்சித் தொழிலாளர்களுக்கென்று கடந்த 75—ல் சாமியார்மடம் என்ற இடத்தில் கட்டப்பட்ட குடியிருப்புகள், பராமரிப்பின்றிப் பாழடைந்து கிடக்கின்றன..." என்று பல்வேறு குறைகளையும் பொரிந்து தள்ளினார் ஆம்பூர் நகர சுத்தித் தொழிலாளர்களில் ஒருவரான நாகராஜன்.

அவரிடம் விடைபெற்றுக் கொண்டு நாங்கள் பஸ் ஸ்டாண்டுக்கு நடந்தபோது, வழியில் ஓரிடத்தில் ஆதி திராவிடர் நல ஆரம்பப் பள்ளியொன்று நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தோம். பள்ளிக்கான கட்டடமா அது? கொடுமை! வேகமாகக் காற்றடித்தால்கூட இடிந்துவிடும் அவலத்தில் இருந்தது அது.

உண்மையில் ஆதி திராவிடர்களை உயர்த்த நினைக்கும் அரசு, இப்படி அவர்களுக்கென்றே ஒரு பள்ளியைப் பிரித்து வைத்து, அவர்களின் தாழ்வு மனப்பான்மையை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டே இருக்க வேண்டுமா என்பதுதான் நமது முதல் கேள்வி. மற்ற மாணவர்களோடு அவர்களும் சமமாகப் போட்டி போடத் தகுதி உள்ளவர்களாக்க, அவர்களுக்கு ஸ்பெஷல் கோச்சிங் போன்றவற்றைக் கொடுப்பதுதானே நியாயமானதாக இருக்கும். அப்படியின்றி இப்படிப்பட்ட அவலமான கட்டடங்களின் கீழ் அவர்களை ஒதுக்கி வைத்துப் பாடம் சொல்லிக் கொடுப்பது அவர்களை மேலும் பலவீனமாக்குகிற விஷயமே அன்றி வேறில்லை.

— திருபர்

* உண்ணாவிரதம்



ஜெகதாஸ் உண்ணாவிரதம் இருந்தாரே?



* வண்ணை கணேசன், சென்னை—11

? தமிழக வலது கம்யூனிஸ்ட் பிளவு குறித்து?

! வலது கம்யூனிஸ்ட் கட்சியில் இயங்கி வரும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 'நியூ செஞ்சுரி வெல்ஃபேர் சொசைட்டி' என்ற தோர் அமைப்பைத் துவக்கியது. அது அம்பத்தூரில் ஒரு மருத்துவமனை நிறுவுவதற்காக நாற்பத்தெட்டு லட்ச ரூபாய் நிதியை அமெரிக்காவிடமிருந்து வாங்கியது. அது கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைக்கே விரோதமானது என்கின்றனர் கல்யாண சுந்தரமும் அவரது கோஷ்டியினரும். உண்மையில் அந்த நிதி அமெரிக்காவிடமிருந்து நேரடியாகப் பெறப்பட்டதல்ல; இந்திய அரசு மூலமாகத்தான் பெறப்பட்டது. அது தவறானால், அமெரிக்கா முக்கிய பங்கு வகிக்கும் உலக வங்கியின் நிதியைப் பெறும் மே. வங்க முதல்வர் ஜோதிபாசு, கேரள முதல்வர் ஈ.கே. நாயனார் போன்றவர்களும் தவறு செய்பவர்களே ஆகிறார்கள். ஆக, தோண்டித் துருவிப் பார்த்தால், அது கொள்கை ரீதியான பிளவு அல்ல; தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளால் ஏற்பட்டிருக்கும் கோஷ்டி மனப்பான்மைதான் என்பது புரியும்.

* இராமலிங்க், தக்கலை

? இந்தியாவில் எது மலிவாகக் கிடைக்கிறது? எது அரிதாகக் கிடைக்கிறது?

! துப்பாக்கிகளும் வெடிகுண்டுகளும் மிக மலிவாகக் கிடைக்கின்றன. மனிதாபிமானம் தான் அரிதாகிவிட்டது.

* மு. செந்தில்வாசன், திருமருகல்

? 'உலகில் எல்லோரையும்விட நானே உண்மையானவன்' என்று என்.டி. ராமாராவ் கூறியுள்ளது எதனைக் காட்டுகிறது?

! ஒரு மாநில முதல்வராக மக்கள் மத்தியில் நின்று கொண்டு மைக் முன்னால் பேசுகிறோம் என்கிற எண்ணத்தைவிட அவருக்கு இன்னமும் ஸ்டுடியோவுக்குள் போய் கேமரா முன்னால் வசனம் பேசுகிறோம் என்ற எண்ணம்தான் மேலோங்கியிருக்கிறது போலும்!

* ஆர். முருகேசன், மத்தம்பாளையம்

? ஜெகதாஸ் உண்ணாவிரதம் இருந்தாரே..?

! உண்ணாவிரதத்தின்போது, 'என் போன்றவர்கள் தண்ணீரை வாங்க முடியும்; சுத்தப்படுத்த முடியும்; சூடு படுத்த முடியும். ஆனால் ஏழை மக்கள் என்ன செய்வார்கள்? அவர்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்காகத்தான் உண்ணாவிரதமிருக்கிறேன்...' என்று பத்திரிகைகளுக்கு 'ஆவேசமாகப் பேட்டி கொடுத்தவரை ஜெப்பியார் வந்து எந்த நிரந்தரத் திட்டத்தைச் சொல்லி உண்ணாவிரதத்தை வாபஸ் பெற வைத்தார்? அதையும் மக்களுக்குச் சொல்லியிருக்க வேண்டாமா? சொல்லாததால் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானமாக விளங்கியிருக்கக் கூடிய உண்ணாவிரதம் வெறும் ஸ்டண்ட் போலாகிவிட்டது.

* வி.கே. வீரசேகரன், விக்கிரபாண்டியம்

? ஜெயில் சிங்கின் மனம் எப்படிப்பட்டது?

! கவிதை உணர்வு நிரம்பியது. அவர் சென்ற வாரம் பெங்களூர் வந்திருந்த போது, 'நான் அவர்களுடைய கரங்களில் மலர்க்கொத்து கொடுத்தேன். ஆனால் அவர்களோ, கைகளில் கற்களை வைத்துக் கொண்டு என்னைத் தேடுகிறார்கள்...' என்று சொன்ன உருதுக் கவிதை வரிகள் அற்புதமானவை. எங்கோ ஓரிடத்தில் அவர் புண்பட்டுப் போயிருக்கிறார் என்பதைத்தான் எத்தனை நாசூக்காக இந்தக் கவிதையின் மூலம் வெளிக்காட்டிவிட்டார்!

* ஏ.டி. சௌமியன், விருத்தாசலம்

? எதனை எண்ணினால் தங்களுக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது?

! சென்னைக் குடிநீர் நிறுவனம் வழங்கும் குடிநீரைக் காய்ச்சித்தான் குடிக்க வேண்டும்

என அரசாங்கமே அறிவிப்புச் செய்து கொண்டிருந்தாலும் எல்லா இடங்களிலும்— எல்லா மக்களும் காய்ச்சிய நீரையா குடிக்க முடியும்? முடியாதபோது எத்தனை பேர் அந்தத் தண்ணீரால் உடல் நலம் பாதிக்கப் படுகிறார்கள் தெரியுமா? இந்த லட்சணத் தில் குடிநீர் நிறுவனம் என்று இதற்குப் பெயர் ஒரு கேடா? அசுத்த நீர் வழங்கு நிறு வனம் என்று பெயர் மாற்றம் செய்து கொள் ளட்டும்!

*** த. சத்தியநாராயணன், அயன்புரம்**

? எம்.ஜி. ஆர். பொதுக் கூட்டத்தில் பேசு வார் என்று அமைச்சர் சுவாமிநாதன் அறி வித்திருப்பது குறித்து?

! ஒரு முதலமைச்சர் பொதுக் கூட்டத்தில் பேசப் போவதை ஓர் அமைச்சர் பெருமை யாய் அறிவிக்கும் நிலைமை இங்கே... ம்...

*** இந்திரா கோபாலன், திருச்சி—14***

? ஜனாதிபதி தேர்தலுக்குப் போட்டியிடும் கிருஷ்ணய்யருக்கு டி.வி.யில் பிரசாரம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டது எந்த வகையில் நியாயம்?

! உண்மையில், மற்ற பொதுத் தேர்தல் பிர சாரங்களைவிட ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் தான் மிக மிகக் கண்ணியமானதாகவும், அறிவு பூர்வமாகவும் இருக்கும். இருக்க முடியும். இந்நிலையில் அப்பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்களின் கருத்துக் களைப் பொது மக்களும் கேட்க வேண்டியது அவசியம். அதற்கு மக்களுக்கும் உரிமை உண்டு. இந்தச் சூழ்நிலையிலும் கிருஷ்ணய்ய ருக்கு டி.வி.யில் வாய்ப்புத் தர மறுத்ததற்குக் காரணம் ஆர்.வி. 'நான் பிரசாரம், செய்யப் போவதில்லை' என்று முன்னறிவிப்பு செய்து விட்டதாகத்தான் இருக்கமுடியும். ஆக, டி.வி.







கட்சியில் பிளவு

என்பது ஆளுங் கட்சியின் ஜால்ரா என்பது மீண்டும் நிரூபணமாகி விட்டது.

*** டி. அன்பு சரவணம், வீரராக்கியம்**

? தற்போதைய நடிகைகளில் ஊர்வசிப் பட்டம் பெறும் தகுதி யாருக்கு உள்ளது?

! சாரதா, லட்சுமி, ஷோபா, சுஹாசினி வரிசையில், இன்றைய இளைய தலைமுறையில் யார் இருக்கிறார்கள்? யாரும் இல்லை!

*** மு. மதிவாணன், அரூர்**

? 'பிரதமர் ராஜீவ் காந்தியின் மீது சுமத் தப்பட்டிருக்கும் ஊழல் குற்றச்சாட்டுக் களில் ஒன்றை நிரூபித்தால் அவர்களுக்குப் பத்து லட்ச ரூபாய் பரிசு தருகிறேன்' என்று பிளிட்ஸ் ஆசிரியர் கரஞ்சியா அறிவித்திருப் பது பற்றி?

! யாருடைய ஸ்விஸ் பேங்க் கணக்கி லிருந்து எடுத்துத் தரப் போகிறாராம் அவர்!

*** ஜி. சந்தானம், வலங்கைமான்**

? படித்துவிட்டு வேலைக்காகப் பேயாய் அலையும் இன்றைய இளைஞர்களைப் பற்றித் தங்கள் கருத்து?

! பெரும்பாலான இளைஞர்கள் வெள்ளைக் காலர் வேலைதான் வேண்டும் என்று பிடி வாதம் பிடிப்பதால் ஏற்படும் பிரச்னைகள் தான் ஏராளம். சொந்த அறிவையும் திறமை யையும் நம்பி எந்த வேலையானாலும் சரி என்று உழைத்துப் பாடுபடுகிற மனோபாவம் இன்றைய இளைஞர்களுக்கு வந்துவிட்டாலே, வேலையில்லாப் பிரச்னைகளில் பாதி பறந்து போய்விடும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

*** நிரஞ்சனா, திருச்சி**

? கொஞ்ச காலத்துக்கு முன்னால் கங்கை யைத் தூய்மைப்படுத்தப் போவதாக ஜரூராக ராஜீவ் அறிக்கை விட்டாரே, என்ன ஆயிற்று?

! அரசியலைக்கூடத்தான் சுத்தப்படுத்தப் போவதாக அறிக்கைவிட்டார்! என்ன ஆயிற்று? அதே கதிதான் கங்கைக்கும்! குறைந்தபட்சம் ஐந்நூறு ரூபாய் நோட்டில் காந்தி படத்தை அச்சடிக்கும் யோசனையை யாவது விட்டொழிக்கலாம். காந்தி நோட்டு கறுப்புப் பணமாகி லஞ்சம் தரப் பயன்படும் போது ரொம்ப அசிங்கமாக இருக்கும்.

* ரூ. 15 பரிசு பெறுபவர்:
இந்திரா கோபாலன்,
D—1463,
பி.எச்.இ.எல். டவுன்ஷிப்,
கைலாசபுரம், திருச்சி—620 014.

பணத்துக்குப் பணம்; பழிக்குப் பழி!

ஜெஃப்ரி ஆர்ச்சர்

அத்தியாயம் — 4

டாக்டர் ராபின் மாணவனாக இருந்த போது, ஆயுத சிகிச்சையும் ஓரளவு பயின்றிருந்தான். ஆனால் அதெல்லாம் மறந்தே போய்விட்டது. ஸர்ஜரியில் ஈடுபாடு இல்லாமல் வைத்தியராக மட்டுமே தொழில் நடத்தி வந்தான். அவனிடம் வரும் கேஸ்களில் யாருக்காவது ஆயுத சிகிச்சை தேவைப்படுவதாக அவனுக்குத் தோன்றினால் அத்துறையில் ஒரு நிபுணருக்குச் சிபாரிசுக் கடிதத்துடன் நோயாளியை அனுப்பிவிடுவான்.

ஆனால் இப்போது ராபின், சர்ஜரி புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு படிக்கலானான். ஒரு கால்பினாடர் ஆபரேஷன் செய்வதென்றால் வயிற்றின் எந்தப் பகுதியில் எப்படி கத்தி வைத்து எந்தக் கோணத்தில் அல்லது வடிவத்தில் தோலைக் கிழிக்க வேண்டும் என்பதைக் கருத்தூன்றிப் படித்தான். கால்பினாடர் என்பது கல்லீரலின் அடியில் அந்த உறுப்பு சுரக்கும் பித்த நீரைச் சேகரித்து வைக்கும் பை. இந்தப் பித்த நீர்ப் பையில் சிலசமயம் சிறுசிறு கற்களாகத் திரவம் இறுகி விடுவது உண்டு. இப்படிப் படிகக் கற்கள் தோன்றிவிட்டால் வயிற்றின் வலப்புறத்தில் தாங்க முடியாத வலி ஏற்படும். மார்புக் கூட்டின் ஒன்பதாவது எலும்புக்குக் கீழே அழுத்தினால் நோயாளி வலி தாங்காமல் அலறுவான்.

ஏறத்தாழ இதேபோன்ற ஒரு வலியை ஏற்படுத்தக் கூடிய ஒரு மருந்து இருக்கின்றதா என்று தேடினான் ராபின். பல நூல்களை ஆராய்ந்து கடைசியில் 'பிராஸ்டிக்மின்' என்ற மாத்திரையைத் தேர்ந்தெடுத்தான்.

ராபினின் திட்டத்தில் ஒத்துழைக்க வேண்டிய ஸ்டீஃபன் நோயாளிக்கு மயக்கம் தரும் டாக்டராக — அனெஸ்தடிஸ்ட்டாக — ராபினின் உதவியுடன் தீவிர பயிற்சி பெற்றான்.

பியர்ரி சூதாட்டம் பற்றிய சகல விவரங்களையும் தெரிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானான்.

ராபினின் திட்டத்தை நிறைவேற்ற அவர்கள் இதையெல்லாம் ஒரு நிபுணத் துவத்துடன் அறிந்து கொள்ள வேண்டியிருந்தது.

ஹார்விக்குச் சூதாட்டத்தில் கொஞ்சம் பலவீனம் உண்டு. மொனாகோ என்ற சின்னஞ் சிறு நாட்டின் மான்டிகார்லோ என்ற பகுதி சூதாட்டத்துக்கு உலகப் பிரசித்தி பெற்றது. விடுமுறையில் ஓரிரு நாட்களையேனும் அங்கு கழிப்பது ஹார்விக்கு ஒரு பெரிய மனித தோரணையில் திருப்தி அளித்தது. குறிப்பிட்ட ஒரே ஒரு காஸினோவுக்குப் போய்த்தான் அவன் சூதாடுவான்.

இம்முறை ஹார்வி அங்கு வந்து சேர்வதற்குச் சில தினங்கள் முன்பே நண்பர்கள் நால்வரும் மான்டிகார்லோவில் இருந்தனர். மான்டிகார்லோவில் சூதாடப் பெரும் பணக்காரர்கள் உலகெங்கிலுமிருந்தும் வருவார்கள். எனவே ஏராளமான ஐந்து — ஆறு நட்சத்திர ஹோட்டல்கள் தவிர, முன்னெச்சரிக்கையாக ஒரு நவீன ஆஸ்பத்திரியும் கட்டியிருந்தார்கள். அது அளவில் பெரிதல்ல. ஆனால் வசதிகளில் அதைவிடச் சிறந்ததாக உலகில் இன்னொன்றைக் கூற முடியாது. பெரும்பாலும் ஒரு சில தினங்கள் சூதாட வந்துவிட்டுத் திரும்பிவிடும் பெரும் செல்வந்தர்கள்தான் மான்டிகார்லோவில் அதிகம். உல்லாசப் பயணிகளாக வரும் அவர்கள், மருத்துவமனையை நாடப் போவதில்லை. ஆனால் தப்பித் தவறி வந்துவிட்டாலோ பணம் பிடுங்குவதில் அந்த மருத்துவமனைக்கு ஈடாக உலகில் வேறு ஒன்று கிடையாது! பெரும்பாலும் கட்டில்கள் காலியாக இருக்குமாதலால் அகப்பட்டபோது சுருட்டினால்தானே உண்டு!

இந்த மருத்துவமனைக்குப் புதிய மாறுவேடத்தில் சென்ற ராபின், தன்னை டாக்டர் பார்க்கர் என்று அறிமுகம் செய்து கொண்டு விஸிட்டிங் கார்டும் கொடுத்தான். அமெரிக்காவிலிருந்து வருவதாகக் கூறி அமெரிக்க ஆங்கிலம் பேசினான்: "ஒரு கோடீசுவரனுடன் வந்திருக்கிறேன். அவனுக்கு உடல் நலமில்லை. எப்போது வேணுமானாலும் வயிற்று வலி தாக்கலாம். 'ஓய்வாக இரு' என்றால் கேட்க மாட்டேனென்கிறான். சூதாட்டத்தில் உள்ள மோகம்-இங்கு இழுத்து வந்துவிட்டது. பின்னோடு நானும்

வர வேண்டியதாகிவிட்டது. எனக்கு எந்தக் கணத்திலும் ஒரு ஆபரேஷன் தியேட்டர் தேவைப்படலாம்!''

''அதில் ஒரு பிரச்னையும் இல்லையே! நாலு தியேட்டர்களில் ஒன்றை உங்களுக்காக ரிஸர்வ் செய்து வைத்து விடுகிறேன்'' என்றார் மருத்துவமனையின் தலைமை அதிகாரி. ''எத்தனை நாட்களுக்கு உங்களுக் கென்று ஒதுக்கி வைக்கிறோமோ அத்தனை தினங்களுக்கு உரிய கட்டணத்தைச் செலுத்தி விட்டால் சரி.''

''ஆகட்டும்'' என்று அட்வான்ஸ் கொடுத் தான் ராபின். ஆஸ்பத்திரியையும் குறிப்பாக ஆபரேஷன் தியேட்டரையும் சுற்றிப் பார்த் தான். வசதிகளை ஆராய்ந்தான். திருப்தி அடைந்தான். ''நர்ஸ் ஒருத்தி எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும். அவள் திறமைசாலியாக இருப்பதோடு அழகியாக வும் இருக்க வேண்டும். என் நோயாளிக்கு அவலட்சணங்களைக் கண்டால் அலர்ஜி'' என்றான் கண்சிமிட்டி.

தலைமை அதிகாரி புரிந்து கொண்டதற்கு அடையாளமாகத் தலையசைத்தார். ''அந்த விஷயத்தில் நீங்கள் குறை கூறவே இடம் வைக்க மாட்டேன்'' என்று உறுதி அளித் தார்.

''ஆம்புலன்ஸ் ஒன்றும் வாடகைக்கு வேண்டும். எப்போதும் டிரைவருடன் தயார் நிலையில் அதை வைத்திருக்க விரும்புகிறேன். டிரைவர் என்னிடமே இருக்கிறான்.''

''வாகனத்துக்கு ஏற்பாடு செய்து விடு கிறேன்.''

ராபின் விடை பெற்றான்.

ஹோார்வி அவர்கள் எதிர்பார்த்த நாளில் வந்து, எதிர்பார்த்த ஹோட்டலில் தங்கி, எதிர்பார்த்த காஸினோவுக்குச் சூதாடச் சென்றான். பிளாக் ஜாக் மேஜையை அடைந்து சீட்டாட ஆரம்பித்தான். பியர்ரி அவன் அருகிலேயே சாமர்த்தியமாக இடம் பிடித்து அமர்ந்து ஆட ஆரம்பித்தான். அதிக மாகப் பணம் இழக்காமல் ஆடுவது ரொம்பக் கஷ்டமாக இருந்தது. இனி தாங்



காது என்று அவன் சோர்வுடன் எண்ணத் தொடங்கிய சமயம், எந்த வாய்ப்பை எதிர் பார்த்துக் காத்திருந்தானோ அந்த சந்தர்ப்பம் அவனுக்கு அமைந்தது. ஹார்வி காப்பிக்கு ஆர்டர் கொடுத்தான். இரண்டு மூன்று நிமிடங்களில் அது வந்து சேர்ந்தது. ஆவி பறந்தது. பியர்ரி பாக்கெட்டுக்குள் கைவிட்டு, ராபின் தந்திருந்த மாத்திரையை எடுத்தான். கூடவே கைக்குட்டையையும் உருவி பெரிதாகத் தும்முவதுபோல் நடித்து, மூக்கைத் துடைத்தான். அனைவர் கவனமும் திருப்பப் பட்டிருந்த அந்தக் கண நேரம் மாத்திரையைக் காப்பிக் கோப்பையில் போட்டுவிட அவனுக்குப் போதுமானதாக இருந்தது. அது உடனே அமிழ்ந்து மறைந்து சில விநாடிகளில் கரைந்தும் விட்டது.

ஹார்வி பாதி காப்பியை உறிஞ்சிவிட்டு அதற்குரிய சின்ன டேபிளில் வைத்துவிட்டு மறுபடி ஆட் ஆரம்பித்தான்.

"முழுக்கக் குடித்துத் தொலையேன்டா, பாவி" என்று பியர்ரி தனக்குள் அவனைத் திட்டினான்.

ஆனால் அந்தச் சுற்று ஆட்டம் முடிந்த பிறகுதான் மறுபடி காப்பி அருந்தினான் ஹார்வி. தலையைக் கனத்தது. இன்னொரு கப் காப்பிக்கு ஆர்டர் கொடுத்தான்.

சீட்டுக்களை விநியோகித்தவர், "நீங்கள் தான் ஆரம்பிக்க வேண்டும் மிஸ்டர்" என்று கூறினான்.

"நீ நாசமாய்ப் போக" என்று சம்பந்தமில்லாமல் அவனைச் சபித்தபடியே, ஹார்வி தரையில் சாய்ந்தான்.

அவனைச் சுற்றிலும் கூட்டம் சேர்ந்தது. பியர்ரி அசைவற்று இருக்க, வேறு ஒரு பக்கம், வேறு ஒருவித சூதாட்டத்தில் பணத்தை எவ்வளவு குறைவாக முடியுமோ அத்தனை குறைவாக இழந்து கொண்டிருந்த ஸ்டீஃபன், சந்தடி கேட்டுத் திரும்பினான். விரைந்து கூட்டத்தை நெருங்கி, "நகருங்கள், நான் டாக்டர்" என்றான். கூட்டம் வழிவிட்டது.

ஹார்வியின் ஆடையை நெகிழ்த்திய ஸ்டீஃபன், "எங்கே வலி?" என்றான். ஹார்வி சுட்டிக்காட்டவும், ஸ்டீஃபன் அவன் வயிறு முழுவதையும் தடவினான். "எங்கே வலிக்கிறது? இங்கேயா? இங்கேயா? எப்படி வலிக்கிறது? கிடுக்கிப் பிடி போட்டுச் சுண்டி இழுக்கிறதா? விட்டு விட்டுச் 'சுரீர், சுரீர்' என்கிறதா?" என்றெல்லாம் கேட்டபடியே மார்புக் கூட்டின் ஒன்பதாவது எலும்புக்குக் கீழே ஓர் அழுத்து அழுத்தினான். ஹார்வி வலியில் துடித்து அலறினான்.

"ஆஹா! இதைத்தான் மர்ஃபி அடையாளம் என்று மருத்துவம் சொல்கிறது!" என்றான் ஸ்டீஃபன். "உனது பித்த நீர்ப் பையில் கற்கள் உருவாகியுள்ளன. உடனே ஆபரேஷன் தேவைப்படும்" என்றான். "ஆஸ்பத்திரியில் கைதேர்ந்த சர்ஜன் யாராவது இருந்தால் நீ பிழைத்துப் போவாய்!"

பியர்ரி அந்தச் சமயத்துக்காகக் காத்திருந்தவனைக இடையில் புகுந்து, "டாக்டர் வைலி பார்க்கர், நான் தங்கியிருக்கும் அதே ஹோட்டலில்தான் தங்கியிருக்கிறார்!" என்றான்.

"எந்த வைலி பார்க்கர்? பிரபல அமெரிக்க சர்ஜனா? நிக்ஸனைக் கவனித்துக் கொள்கிறானே, அவனா?" என்று கேட்டான் ஸ்டீஃபன்.

"அவனேதான்" என்றான் பியர்ரி.

"அவனையே கூப்பிடு" என்று முனகினான் ஹார்வி. "என்ன செலவானாலும் பரவாயில்லை. என்னால் தர முடியும். எனக்குத் தலைசிறந்த டாக்டர்தான் வேண்டும்!"

"உடனே போன் செய்" என்றான் ஸ்டீஃபன். "ஆம்புலன்ஸுக்கும் சொல்லு."

பியர்ரி போன் இருந்த இடத்துக்கு வேகமாக நடந்தான்.

அப்புறம் காரியங்கள் மளமளவென்று நிறைவேறின.

ராபினுக்கு பியர்ரி போன் செய்த பத்தாவது நிமிடம் ஸைரன் ஒலிக்க, ஜேம்ஸ் ஆம்புலன்ஸுடன் காஸினோ வாசலுக்கு வந்து சேர்ந்தான். ஸ்ட்ரெட்சரைத் தூக்கிக் கொண்டு, "எங்கே நோயாளி?" என்று பரபரப்புடன் விசாரித்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வந்தான். பியர்ரியின் உதவியுடன் ஸ்ட்ரெட்சரில் ஹார்வியைப் படுக்க வைத்து, இருவருமாகத் தூக்கிக் கொண்டு ஆம்புலன்ஸுக்குப் போனார்கள். பியர்ரியும் ஸ்டீஃபனும் மனிதாபிமான அடிப்படையில் ஹார்விக்கு உதவும் நோக்கில் ஆம்புலன்ஸில் ஏறிக் கொண்டார்கள். ஆம்புலன்ஸ் மீண்டும் ஸைரன் ஒலி கிளப்பிக் கொண்டு பறந்தது!

மருத்துவமனை வாசலிலேயே ராபின் காத்துக் கொண்டிருந்தான். அவன் முன்னால் நடக்க, ஸ்ட்ரெட்சரில் ஹார்வியைத் தூக்கிக் கொண்டு பியர்ரியும் ஸ்டீஃபனும் பின்னால் சென்றார்கள். ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழைந்தார்கள். கதவு சாத்தப்பட்டது.

ஸ்டீஃபன் மயக்கம் தரும் டாக்டராக மாறினான். ஆபரேஷன் மேஜை மீது ஹார்வி படுக்க வைக்கப்பட்டான். அவனை அமைதிப்படுத்த முதலில் ஒரு தூக்க மருந்து ஊசி போட்டான் ஸ்டீஃபன். பிறகு மூவரும் கைகள், முகங்களைக் கழுவிக் கொண்டு, கிருமிகள் அற்ற உடைகளையும் முகமூடிகளையும் அணிந்து கொண்டு ஹார்வியை அணுகினார்கள்.

ஸ்டீஃபன் இந்தக் கணத்துக்காகப் பல நாட்களாகவே பயிற்சி பெற்று வந்தான். ராபின் கற்றுத் தந்திருந்தபடி முகமூடியை ஹார்வியின் மூக்கின் மீது வைத்து மயக்க வாயுவைச் செலுத்தினான். ஹார்வி மயக்கமடைந்ததும் கால் பிளாடர் ஆபரேஷனுக்கு வயிற்றில் எப்படிப் புறத்தோலை வெட்ட வேண்டுமோ அப்படி கத்தியால் கீறினான் ராபின். ரத்தம் பீறிட்டது. ஒற்றி எடுத்தான் பியர்ரி. புறத்தோலை வெட்டி, ரத்தத்தை ஒற்றி எடுத்த கையோடு, வெட்டிய இடத்தில்

தையல் போடவும் ஆரம்பித்து விட்டான் ராபின்! தோலை விலக்கி ஹார்வியின் வயிற்றுக்குள் எட்டிக்கூடப் பார்க்கவில்லை அவன்! அதற்கு அவசியமில்லையே!

"இது காட்கட் தையல். ஒரே வாரத்தில் கரைந்து போகும். வடு மட்டுமே தெரியும்" என்று பேசிக் கொண்டே காரியம் செய்தான் ராபின்.

ஹார்வியின் நோயற்ற வேதனைக்கு முடிவு கட்ட, சிகிச்சையற்ற ஓர் ஆபரேஷன் நாடகம் நடந்து முடிந்தது! ஹார்வி அவனுடைய அறைக்குக் கொண்டு செல்லப்பட்டான். அவனைக் கவனித்துக் கொள்ள ஓர் அழகிய, ஆற்றல் மிக்க நர்ஸ் தயாராக இருந்தாள்.

"இன்றைக்கு மூன்றாவது நாள் உன்னைச் சீண்டி விளையாட ஆரம்பித்து விடுவான் என் நோயாளி!" என்று அவளிடம் குறும்பாகக் கூறினான் ராபின். அவள் முகம் சிவந்தாள்.

"நன்றாகக் கவனித்துக் கொள். கோடீசுவரனுக்கும்!" என்று கூறிக் கண் சிமிட்டலுடன் விடைபெற்றான் ஸ்டீஃபன்.

மறுநாள் ராபின் ஹார்வியைச் சந்தித்த போது அவன் கரங்களில் உள்ளூர் தினசரி இருந்தது. அதில் ஹார்வி என்ற பெரும் அமெரிக்கச் செல்வந்தன் எப்படித் திடீரென்று நோய்த் தாக்குதலுக்கு உள்ளாகி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப் பட்டான் என்றும் தாமதமின்றி ஆபரேஷன் செய்யப்பட்டதால் உயிர் தப்பினான் என்றும் செய்தி வெளியாகியிருந்தது!

நன்றியில் கரைந்தான் ஹார்வி. "டாக்டர்! என் உயிரை மீட்டுத் தந்தீர்கள். உங்களுக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்ய முடியும்?" என்றான்.

"என்னிடம் பில் கேட்காதீர்கள்! நான் ரொம்பப் பெரிய டாக்டர். பில் அனுப்பினால் உங்களுக்குத் தாங்குமோ என்னவோ! நீங்களாகவே கொடுப்பதைக் கொடுங்கள்!" என்றான் ராபின். அவனுடைய தன்மானத்தை உசுப்பிவிடச் சிரித்தான்.

"எவ்வளவானாலும் கொடுக்க எனக்குச் சக்தி இருக்கிறது. சொல்லுங்கள் டாக்டர்!" என்றான் ஹார்வி.

"இரண்டு நாட்கள் போகட்டும். இந்த நர்ஸை நீங்கள் ஆஸ்பத்திரியைச் சுற்றித் துரத்த ஆரம்பிப்பீர்கள். அப்போது அனுப்புகிறேன், பில்!" என்று கிண்டலாகக் கூறிவிட்டுக் கிளம்பினான் ராபின்.

"அதுவரை தினம் இரண்டு தடவையாவது வந்து என்னைப் பரிசோதித்து விட்டுப் போக வேண்டும்" என்று ஹார்வி நிபந்தனை விதிக்க, "ஆகட்டும்" என்று தலையாட்டினான் ராபின்.

நான்கைந்து நாட்கள் சென்றதும் எண்பதாயிரம் டாலருக்கு பில் கொடுத்தான் ராபின்.

உடனேயே அந்தத் தொகைக்குப் பெயர் குறிப்பிடாமல் 'கேஷ் செக்' எழுதிக்



"நம்முடைய திருமணத்துக்கு நமது பெற்றோர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் போலிருக்கு. நாம ரெண்டு பேரும் எங்காவது ஓடிப் போயிடுவோமா...?"

"இன்னும் ஒரு வாரம் பொறு!"

"ஏன்?"

"ஊர்ல இன்னும் சில பேரிடம் கடன் வாங்க வேண்டியிருக்கு!"

— கடுவை கோபாலசாமி

கொடுத்த ஹார்வி, சந்தோஷமாக நர்ஸின் கரத்தைப் பற்றி இழுத்துப் பக்கத்தில் அமர்த்திக் கொண்டான்.

நண்பர்கள் நால்வரும் மாறுவேடம் கலைந்து லண்டன் திரும்பினார்கள்! இரண்டாவது திட்டத்திலும் அபார வெற்றி பெற்றாகிவிட்டது! இன்னும் இரு வெற்றிகள் பாக்கியிருந்தன. அவர்கள் மகிழ்ச்சியில் மிதந்தார்கள் — ஜேம்ஸ் ஒருவனைத் தவிர.

பல நாட்கள் இடைவெளிக்குப் பிறகு ஜேம்ஸ் தன் காதலி ஆன்னியை லண்டனில் சந்தித்தான்.

உற்சாகமிழந்து அவன் காணப்பட்டது அவளுக்கு வருத்தத்தை அளித்தது. அவனைக் குஷிப்படுத்த நினைத்து, "நீ கேட்டுக் கொண்டபடியே நம்மைப் பற்றி என் அம்மாவிடம் பேசினேன்" என்றாள்.

"அம்மா? அமெரிக்காவில் அல்லவா இருக்கிறாள்?"

"ஆமாம். பாஸ்டனுக்கு போன் போட்டுப் பேசினேன். அப்பா பிஸினஸ் விஷயமாக ஐரோப்பாவில் சுற்றிக் கொண்டிருக்கிறாராம். பத்துப் பதினைந்து தினங்களில் திரும்பி வந்துவிடுவாராம். 'அவரிடம் பேசித் திருமணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்' என்றாள் அம்மா. கல்யாணம் பாஸ்டனில்தான் நடக்க வேண்டும் என்பதில் அம்மா குறியாக இருக்கிறாள். அவளுக்கு ஒரே உற்சாகம். இப்போதே திட்டங்கள் தீட்ட ஆரம்பித்து விட்டாள்!"

ஜேம்ஸ் அவளை அப்படியே வாரி அணைத்துக் கொண்டான். ஆன்னி திணறிப் போனாள்!

(தொடரும்)

வடாற்காடு மாவட்டக் கலெக்டர் திருமதி எஸ். மாலதியை நாம் பேட்டி கண்டபோது மொத்தம் எழுபத்து நான்கு ஆபீஸர்கள் உடனிருந்தார்கள். வடாற்காடு மாவட்டப் பிரச்னைகள் பற்றிச் சென்ற இதழிலும் இந்த இதழிலும் இடம் பெற்றுள்ள கட்டுரைகளில் உள்ள விஷயங்களெல்லாம் கலெக்டரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன. அவை குறித்துத் தக்க நடவடிக்கை எடுப்பதாகக் கலெக்டரும் அதிகாரிகளும் வாக்களித்தார்கள். சில நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்டன! மேற்படி கட்டுரைகளில் இடம் பெறாத பல பிரச்னைகளும் பேட்டியின்போது விவாதிக்கப்பட்டன. அந்த விவரங்கள் இதோ.....



"நீங்கள் காணும் பேட்டி டி.டி.சி. மீட்டிங் மாதிரி..."

கல்கி: பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வேங்கட சமுத்திரம் கிராமத்தில் வசிக்கும் நீலாம்பாள் என்பவரிடம் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் இலவச வீடு கட்டித் தருவதாகச் சொல்லி அறுவைச் சிகிச்சை செய்த பிறகும் வீடு ஏதும் கட்டித் தரப்படவில்லையாமே?

ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், பேர்ணாம்பட்டு: அவர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டது உண்மை. ஆனால், அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் இலவச 'வீடு என்று அவரிடம் வாக்குறுதி ஏதும் அளிக்கப்படவில்லை. மேலும் அவருக்கு வீட்டு மனைப்பட்டாவே இல்லை. மனைப் பட்டா பெற்று, அத்துடன் அவர் விண்ணப்பித்தால், அவருக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்கி: மேலும் அதே ஊரில் ஏற்கெனவே வீடு உள்ளவர்களிடமும் லஞ்சம் வாங்கிக் கொண்டு மறுபடியும் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதாகப் புகார் சொல்கிறார்கள்....

கலெக்டர்: கவனித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

கல்கி: வாலாஜாபேட்டை அருகிலுள்ள காவிரிப்பாக்கம் ஏரிப் பகுதிகளில் சுமார் நான்காண்டுகளுக்கு முன்பு குடிநீர்த் திட்டத்திற்காகச் சில கிணறுகள் வெட்டப்பட்டு அவை இன்னமும் அப்படியே கிடக்கின்றனவே?

கலெக்டர்: கடந்த 81—83 வறட்சி நிவாரணப் பணியின்போது வெட்டப்பட்டவை அவை. அவற்றில் இப்போது குடிநீர் ஏதும் பெற இயலாது என்பதால் அத்திட்டம் கைவிடப்பட்டுவிட்டது.

கல்கி: அந்தப் பகுதியிலேயே படியம்பாக்கத்திலுள்ள ஹரிஜனங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கொடுப்பதாகச் சொல்லி சர்வே செய்தும், இன்னும் கொடுக்கப்படவில்லையாமே? அதேபோல் வேலூர் அருகிலுள்ள புலிமேடு ஹரிஜன மக்களுக்கும் பாதை வசதி இல்லை!

மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்: குறிப்பிடப்பட்ட குறைகளைக் களைய நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அது குறித்த அறிக்கை ஒன்றும் அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசின் ஒப்புதல் கிடைத்ததும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

கல்கி: வாலாஜாவிலிருந்து வள்ளுவம்பாக்கம் செல்லும் பேருந்துகள் மகேந்திரவாடி கால்வாய் வழியாகத்தான் செல்ல வேண்டும். அதில் பாலம் இல்லாததால் வெள்ளம் வரும்போது போக்குவரத்துத்

தடைப்படுகிறது என்கிறார்கள்.

நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புறச் சாலைகள் கோட்டப் பொறியாளர், இராணிப்பேட்டை: அந்த இடத்தில் மட்டு மல்ல; அதே கால்வாய் குறுக்கிடும் பூண்டி—சென்னசமுத்திரம் சாலையிலும் பாலம் கட்டத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைத்ததும் வேலை துவங்கப் படும்.

கல்கி: அரக்கோணத்தில் லட்சக் கணக் காகச் செலவு செய்து கட்டப்பட்டுள்ள நக ராட்சி தினசரி மார்க்கெட் இன்னமும் திறக் கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

கலெக்டர்: ஏலத் தொகை நகராட்சிக்குக் கட்டுப்படியாகக் கூடியதாக இல்லை என்ப தால்தான் தாமதம். விரைவில் ஆவன செய்யப்படும்.

கல்கி: அரக்கோணம் நகரில் மேட்டுப் பாங்கான இடங்களுக்குக் குடிநீர் வழங்கு வதற்காகத் தாலுகா ஆபீஸ் அருகில் மேல் நிலைத் தொட்டி ஒன்று கட்டுவதற்காக இரண் டாண்டுகளுக்கு முன்பே அடிக்கல் நாட்டப் பட்டும் இன்னும் அப்படியே கிடக்கிறதே?

கலெக்டர்: கவனிக்கிறேன்.

கல்கி: அரக்கோணம் நேருஜி நகர் நான் காவது தெருவில் கப்பிச் சாலை போடவும், கழிவு நீர்க் கால்வாய் அமைக்கவும் 85—ல் காண்ட்ராக்ட் விடப்பட்டது. சாலை அமைக் கப்பட்டுவிட்டது. இன்னும் கழிவு நீர்க் கால் வாய் மட்டும் அமைக்கப்படவில்லை. நகராட்சி யில் கேட்டால் சிமெண்ட் பற்றாக்குறை என் கிறார்களாம்! உண்மைதானா?

கலெக்டர்: சிமெண்ட் பற்றாக்குறை என்பது உண்மைதான். விசாரிக்கிறேன்.

கல்கி: அதே நேருஜி நகர் இரண்டாவது தெருவில் வசிக்கும் இரா. நடராசன் என்ப வர் வீடு அளவேயான எதிர் வீட்டுக்கு ரூ 217 வரி. அதே அளவிலான பக்கத்துத் தெரு வில் உள்ள ஒரு வீட்டுக்கு ரூ 75 மட்டுமே வரி. ஆனால் இவர் வீட்டுக்கு மட்டும் 454.50 வரி. இது நியாயமா? மேல்முறையீடு செய் தும் பயனில்லையாமே?

கலெக்டர்: தவறுகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

கல்கி: தாழையூத்து ஊராட்சியிலுள்ள ஏரி வேலை முடிந்து பல ஆண்டுகளாகியும் கால்வாய் வெட்டப்படவில்லை!

பொதுப்பணித்துறை செயற்பொறி யாளர் திருவண்ணாமலை: அந்த ஏரிக்கான ஆயக்கட்டு நிலத்தின் மொத்தப் பரப் பளவே முப்பது ஏக்கர்தான். அதனால் புதிய கால்வாய் வெட்டப்படத் தேவையில்லை. தேவையான வாய்க்காலைப் பயனடையும் ஆயக்கட்டுதாரர்களேதான் வெட்டிக் கொள்ள வேண்டும்.

கல்கி: வாணியம்பாடி அருகில் பாலாற் றின் குறுக்கே கட்டப்பட வேண்டிய புல்லூர் அணை, ஆம்பூர் அருகே கானாற்றில் கட்டப் பட வேண்டிய வெல்லக்கல் அணை மற்றும் பேரணாம்பட்டில் கட்டப்பட வேண்டிய செண்பகத் தோப்பு அணை ஆகியவை இன்னும் கட்டப்படவில்லையே, ஏன்?

கலெக்டர்: புல்லூர் அணைத் திட்டத்தின் படி ஆந்திர மாநிலத்தில் 77.7 ஹெக்டேர் நிலம் தேவைப்பட்டதால், ஆந்திர அரசின் அங்கீகாரம் தேவைப்பட்டது. ஆந்திர அரசு அதற்கு மறுத்துவிடவே, தமிழ்நாடு எல்லைக் குள்ளேயே, ராமநாய்க்கன் பட்டி என்னுமிடத் தில் அவ்வணை கட்டத் திட்ட மிடப்பட்டது. அதனால் ஐந்து கிராமங்களும், ஒரு மதுரா கிராமும் ஐந்து காலனிகளும் 1,048 கட்ட டங்களும் ஏராளமான பயிர் நிலங்களும் பாதிக்கப்படும் என்பதால் அதில் ஏராள மான சிரமங்கள் உள்ளதாக அரசுக்குத் தெரி விக்கப்பட்டுவிட்டது. வெல்லக்கல் அணை கட்டுவதற்காகக் கடந்த 82 முதல் 85 வரை ஆய்வு மேற்கொண்டதில் போதிய நீர்வரத்து இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஐந்தாண்டுகளுக்கு ஆய்வு செய்து, போதுமான நீர்வரத்து இருப்பின் அணை கட்டுவதற்குத் திட்டமிடப்படும். செண்பகத் தோப்பு அணைக்கு வனத்துறை வசமுள்ள நிலம் தேவைப்படுவதால் அவர்கள் அனுமதி கோரப்பட்டுள்ளது.

கல்கி: வெள்ளக்குட்டை அருகிலுள்ள குஜிகான் ஏரி, வேலாயுதன் குட்டை ஆகிய வற்றின் கால்வாய்கள் தூர்வாரப்படாமல் இருக்கின்றதாமே?

பொதுப்பணித்துறை செயற் பொறி யாளர்: அக்குட்டைகளுக்கு நேரடி ஆயக் கட்டு நிலங்கள் ஏதும் இல்லை. அப்பகுதிக் கிணற்றுப் பாசன வசதிகளுக்காக மட்டுமே அக்குட்டைகள் கட்டப்பட்டன. எனவே, கால்வாய்களைத் தூர் எடுக்க வேண்டிய அவசியமில்லை.

கல்கி: ஆம்பூர் அருகிலுள்ள பச்சக் குப்பம், வாணியம்பாடி அருகிலுள்ள புதூர் கேட் ஆகிய இடங்களில் ரயில் பாதைகள் குறுக்கிடுவதால் மேம்பால வசதி அவசியம் என்கிறார்களே?

தேசிய நெடுஞ்சாலைத் துறைக் கோட்டப் பொறியாளர்: மேம்பாலங்கள் அமைக்கும் திட்டம் உள்ளது. பணி ஆரம்பமாக இன்னும் இரண்டாண்டு காலம் ஆகும்.

கல்கி: செட்டியப்பனூர் பாலம் எப் போது கட்டி முடிக்கப்படும்?

தேசிய நெடுஞ்சாலைத் துறைக் கோட்டப் பொறியாளர்: தோரய மதிப்பீடு செய்யப் பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட் டுள்ளது. சரியான மதிப்பீட்டுக்கான புல னாய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்கி: போளூரிலிருந்து அத்திமூர் வழி யாக ஆலங்காயம், வாணியம்பாடி செல்லும் மலைப்பாதை முக்கால்வாசி முடிவடைந்த நிலையிலும் அப்படியே கிடப்பதேன்?

தே. நெடுஞ்சாலைத் துறைக் கோட்டப்

பொறியாளர்: இத்திட்டத்தை முடிக்க 192.4 லட்சத்திற்குத் திருத்திய மதிப்பீடு செய்யப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்ததும் பணி முடிக்கப்படும்.

கல்கி: ஆற்காடு — கண்ணமங்கலம் சாலையிலுள்ள காவனூர் ஏரிக்குள் சுமார் முப்பது ஏக்கர் அளவுக்கு நில ஆக்ரமிப்புச் செய்துள்ளதால், முழுமையாக நீர் தேங்க முடிவதில்லை. அதேபோல் பெருங்காஞ்சி என்னும் ஊரிலுள்ள ஏரியும் தூர்ந்து கிடக்கிறதாமே?

பொதுப்பணித்துறை செயற் பொறியாளர்: காவனூர் ஏரியிலுள்ள ஆக்ரமிப்புகளை அகற்றுவதற்காக, வருவாய்த் துறையினருடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும். பெருங்காஞ்சியிலுள்ள ஏரியைத் தூர் எடுத்தால் அம்மண்ணை எங்கு போய்க் கொட்டுவது? அதோடு, அதற்கு ஒரு கோடி ரூபாயாவது செலவாகும். எனவே, அது சிக்கனமானதல்ல.

கல்கி: பெருங் காஞ்சியிலுள்ள அகஸ்தீஸ்வரர் ஆலயம் சரியான பராமரிப்பின்றிக்



கலெக்டர் பேட்டியின்போது உடனிருந்த அதிகாரிகளில் ஒரு பகுதியினர்

கிடக்கிறதே?

இந்து அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர்: போதுமான நிதி வசதி அக்கோயிலில் இல்லை என்பதால், அதைச் சோளிங்கபுரம் அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலின் உபகோயிலாகச் சேர்த்து உத்தரவு பிறப்பிக்க ஆணையர் அவர்களுக்குப் பரிந்துரை செய்ய இருக்கிறோம்.

கல்கி: ஆம்பூர் நகராட்சிக்குச் சொந்தமான துப்புரவு லாரி பல வருடங்களாக உபயோகிக்கப்படாமல் கிடப்பதேன்? மேலும் நகராட்சித் துப்புரவுத் தொழிலாளர்களுக்கான குடியிருப்பு பராமரிக்கப்படாமல் பாழடைந்து வருவதேன்?

நகராட்சி ஆணையாளர், ஆம்பூர்: லாரி பழுதடைந்துவிட்டதால் உபயோகிக்க முடியவில்லை. அதைப் பொது ஏலத்தில் விடுவதற்காகச் சென்னையிலுள்ள நகராட்சி இயக்குனரின் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும் ஏலம் விடப்படும். மேலும் துப்புரவுப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் தூரத்தில் இருப்பதால் எந்தப் பணியாளரும் அங்கே குடியிருக்க விரும்பாததால்தான் அப்படிப் பழுதடைந்து கொண்டு வருகின்றன.

கல்கி: வந்தவாசி தாலுகாவைச் சேர்ந்த விசாமங்கலம் என்னும் ஊரில் இருக்கும் காதர்பேக் என்ற முன்னாள் இராணுவத்தினர் ஒருவர், அங்குள்ள ஒன்பதரை ஏக்கர் ஓடைப் புறம்போக்கில் சுமார் மூன்று ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்து வருகிறார். அவர் சாகுபடி செய்யும் நிலம் நீர்ப் பிடிப்புப் பகுதி அல்ல என்றும் பொதுப் பணித் துறையினர் சான்றிதழ் கொடுத்துள்ளனர். எனவே தமக்குப் பட்டா வேண்டும் என்கிறார்.

கலெக்டர்: ஓடைப் புறம்போக்கு நிலம் நீர்ப் பிடிப்புக்கு அப்பாற்பட்டதாக இருந்தாலும் பட்டா கொடுக்க முடியாது. ஆனாலும் அவர் சாகுபடி செய்வதில் ஆட்சேபணை இல்லை.

கல்கி: வாணியம்பாடியிலுள்ள சேஷகிரி ராவ் வீதியில் மட்டும் கழிவு நீர் செல்லக் கால்வாயே இல்லை என்று வருத்தப்படுகிறார்கள்!

வாணியம்பாடி நகராட்சி ஆணையர்: அதற்கான தீர்மானம் போடப்பட்டு, சென்னையிலுள்ள நகராட்சிகள் நிர்வாக இயக்குனருக்கு அனுமதி கோரி அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும் வேலை துவங்கப்படும்.

கல்கி: வாணியம்பாடி நகராட்சி நடுநிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி போதாது. அதனால் பூங்காவில் வகுப்புகள் நடக்கும் நிலை. இருக்கும் கட்டடங்களும் இடிந்து விழும் நிலை!

வாணியம்பாடி நகராட்சி ஆணையர்: போதுமான நிதி வசதி இல்லாமைதான் காரணம். நகராட்சி நிதி நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டவுடன் பழுதுகளைச் சரி பார்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கல்கி: அதேபோல் ஆம்பூரிலுள்ள ஆதி திராவிடர் நல ஆரம்பப் பள்ளிகளும் சரியான கட்டட வசதியின்றித்தான் இருக்கின்றன.

கலெக்டர்: கவனிக்கிறேன்!

கல்கி: ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் பணிபுரியும் பல தொழிலாளர்கள் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாகத் தினக் கூலிகளாகவேதான் பணி புரிகின்றனர். நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்கிறார்கள்.

ஆம்பூர் சர்க்கரை ஆலைத் தனி அலுவலர்: சர்க்கரைத் தொழில் என்பது பருவ காலத் தொழில் என்பதால் அனைவரையும் நிரந்தரமாகப் பணியில் வைத்துக் கொள்ள இயலாது.

நீங்கள் பிறந்த தேதி, நேரம், ஊர், இவற்றின் அடிப்படையில் துல்லியமாக ஜாதகம் கணிப்பதற்கு கம்ப்யூட்டர் முறையில் ஓர் அபூர்வ சாதனம் உங்களுக்காக உருவாகியுள்ளது.

திருக்கணித சித்தாந்தப்படி நட்சத்திரம், திதி, ஜன்ம ராசி, ஜன்ம லக்னம், பாவம், தசவர்க்கங்கள், சர்வாஷ்டகவர்க்கம், வாழ்நாள் பூராவும், தசாபுக்திக் காலங்கள், ஷட்பலம் முதலிய அனைத்தும் சுத்தமாக கம்ப்யூட்டரில் பிரிண்ட் செய்யப்பட்டு வழங்கப்படும்.

கட்டணம் ரூ. 25/— மட்டுமே.

துல்லியமான ஜாதகத்தைப் பெற பிறந்த தேதி, நேரம், ஊர், இவற்றுடன் ரூ. 25/— எம். ஒ. செய்யுங்கள். ஐ. பி. ஒ. அல்லது டிராப்ட் அனுப்பியும் பெறலாம்.

விவரங்களுக்கு:

SWATHI ENTERPRISES,
1 E, Lakshmi Bhavan,
609, Anna Salai,
Madras— 600 006.

ஆத்ம யோக வித்யாஸ்ரமா

22 கான்ரான் ஸ்மித் ரோடு கோபாலபுரம், சென்னை—600 086

(தமிழ்நாடு அரசு சங்கப் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

இது ஓர் இலவச சிக்ஷ பாரம்பரியத்தைத் தழுவிய பிரம்மச்சரியம், யோகாசனம், பிராணாயாமம், பிராண யோகம், மனக் கட்டுப்பாடு மற்றும் பிரம்ம லயதானமும் போதிக்கும் நிலையமாகும்.

நல் இதயமுற்றோர்க்கு ஆன்மிக பணியாற்ற ஓர் வேண்டுகோள்:

இந்நிலையம், டாக்டர் சுவாமி வேதானந்தா அவர்களால் துவக்கப்பட்டது. 25 ஆண்டுகளுக்கு மேலாக சுவாமிஜி அவர்கள், இந்த ஆன்மிக பயிற்சியை மக்களுக்கு அளித்து அருந்தொண்டாற்றி வருகிறார். இப்பயிற்சி நிலையத்தில் பிரம்மசரியம், யோகாசனம், பிராணாயாமம், தியானம் இவைகளை சிறந்த முறையில் சுவாமிஜி அவர்களின் நேரடிப் பார்வையில் அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வித்யாஸ்ரமத்தில் அளிக்கப்படும் இப்பயிற்சிகளின் மூலம் அன்றாட வாழ்க்கையில் உழல்பவரும்கூட, நல்ல உள்ளத் தூய்மையையும், மன மகிழ்ச்சியையும் இவற்றால் பெறமுடியும். சிறந்த பயிற்சியாளர்கள் மூலம் அளிக்கப்படும் இப்பயிற்சியை இலவசமாகப் பெற தங்கள் விண்ணப்பங்களை தங்கள் பெயர், வயது, கல்வித் தகுதி, தற்போதைய நிலை முதலியவற்றுடன் தபால் மூலம் அனுப்பும்படி உங்களை அன்புடன் அழைக்கிறோம். இந்நிலையத்தின் பணிகள் செவ்வனே நடைபெற பரந்த மனப்பான்மையும், முழு ஒத்துழைப்பையும் கொடுக்கக் கூடிய நபர்களையே எதிர்நோக்கியுள்ளது. எனவே, உங்களையும், உங்கள் நண்பர்களையும் மற்றும் மனமொத்த நபர்களையும் இப்பயிற்சி நிலையத்திற்கு ஆதரவளிக்க வேண்டுகிறோம். உங்களின் ஆதரவு மிக மிக இன்றியமையாதது. இப்பணி மூலம் நீங்கள் மன அமைதியையும், தன்னை உணரும் தன்மையையும் பெறும் வாய்ப்பை பெறுவீர். இந்நிலையத்திற்குத் தாங்கள் அளிக்கும் நன்கொடை வருமான வரி விதி 80—ஜி அடிப்படையில் வரிவிலக்குக்கு உட்பட்டது. காசோலை அனுப்புவோர் கோடிட்ட காசோலையை "ஆத்மயோக வித்யாஸ்ரமா" விற்கு அனுப்பி வைக்கவும்.



''கார்தான் இருக்கே, ஏன் உங்கள் பெண் தினமும் காலேஜுக்குப் பஸ்ஸில் போறா?''
''ஒரு டைரக்டர் பார்வையில் பட வேண்டிய வாய்ப்புப் பறிபோயிடுமே!''

— மணியன் தர்மலிங்கம்

கல்கி: ஆம்பூரிலிருந்து பேர்ணாம்பட்டு வழியாகக் குடியாத்தம் செல்லும் பஸ்கள், 'பேர்ணாம்பட்டுவரையுள்ள பதினாறு கி.மீ. தூரத்தில் மொத்தம் பதினாறு இடங்களில் நிற்கின்றன. ஆனால், பேர்ணாம்பட்டிலிருந்து குடியாத்தம் வரையிலான அதே தூரத்தில் ஓரிடத்திலகூட நிற்பதில்லை என்று புகார் சொல்கிறார்கள்!

நிர்வாக இயக்குனர், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம்: பேர்ணாம்பட்டிலிருந்து குடியாத்தம் தடத்தில் மொத்தம் பதினொரு இடங்களில் பஸ்கள் நிற்கின்றன. அது அல்லாமல் இடையில் கை காட்டினாலும் நிறுத்தப்படுகின்றன. நிற்காத பேருந்துகள் பற்றிப் பயணிகள் புகார் செய்தால் தக்க முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்!

கல்கி: வேலூர் செங்கம் பஸ் வசதியை மேலும் மூன்று கிராமங்களுக்கு நீட்டிப்புச் செய்தால்சுமார்பத்தாயிரம்மக்கள் பயனடைவார்கள்.

மண்டலப் போக்குவரத்து அலுவலர்: இதுவரை அப்படியொரு கோரிக்கை எங்களுக்கு வரவில்லை. வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்கி: வாணியம்பாடி தாலூகாவிலுள்ள மாதனூர் பஞ்சாயத்துத் தலைவர் கிருஷ்ணசாமி என்பவர், பஞ்சாயத்துக்குச் சொந்தமான புறம்போக்கில் பள்ளிக் கட்டடத்தைக் கட்டாமல் ஓர் ஏக்கருக்கும் குறைவாக உள்ள கோயில் நிலத்தில் கட்டியுள்ளாராமே? அதுவும் சம்பந்தப்பட்டவர்களின் அனுமதி இல்லாமல்!

கோட்ட வளர்ச்சி அலுவலர் வேலூர்: உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டட வசதி இல்லாததால் ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தில் நடந்து வருகிறது. பொதுமக்கள் நன்கொடையில் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருவதும் உண்மைதான். அது ஆரம்பப் பள்ளி அருகிலேயே வேறு இடமில்லாததால் கோயில் புறம்போக்கு இடத்தில் சம்பந்தப்பட்டவர்களின் அனுமதியின்றித்தான் கட்டப்படுகிறது.

கல்கி: பஞ்சாயத்துப் புறம்போக்கில் ஏன் கட்டப்படவில்லை?

கலெக்டர்: நான் விசாரிக்கிறேன்.

கல்கி: அரக்கோணம் அருகிலுள்ள மோசூர், ஜடேரி, நம்மானேரி, முத்து லட்சுமிப்பேட்டை ஆகிய ஊர்களில் 3,500க்கு மேல் மக்கள் தொகை இருந்தும் ஒரு மருந்தக வசதிகூட இல்லை என்கிறார்கள்.

மாவட்டச் சுகாதார அலுவலர்: அருகிலேயே சின்னமோசூர் கிராமத்தில் மருந்தகம் ஒன்று இயங்கி வருகிறது. இருப்பினும் மோசூர், ஜடேரி கிராமங்களில் மக்கள் தொகை அடிப்படையில் — தகுதி இருப்பின் ஒரு மருந்தகம் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கல்கி: அரக்கோணம் தாலூகாவிலுள்ள பாணாவரம் உயர்நிலைப் பள்ளிக்குப் போதிய கட்டட வசதி இல்லை. இத்தனைக்கும் இப்பள்ளி விளையாட்டுத் துறையில் மாநில அளவில் சிறப்பாகத் திகழும் பள்ளி. ஊக்கம் வேண்டாமா?

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்: கட்டட வசதி குறித்துப் பள்ளிக் கல்வி இயக்குனருக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வர வேண்டும்.

கல்கி: ஜோலார்ப்பேட்டை அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பறை வசதிகூட இல்லை!

மா.மு. கல்வி அலுவலர்: இதற்கும் பள்ளிக் கல்வி இயக்குனருக்குப் பரிந்துரை அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

கல்கி: வந்தவாசி, தாலூகாவில் ஐயவாடி, கிட்டவாடி, தூக்குவாடி, அருகில்வாடி என்ற ஊர்ப் பெயர்கள் ஆபாசமாக இருப்பதால் அவற்றையெல்லாம் மாற்ற வேண்டும் என்கிறார்கள்.

கலெக்டர்: அப்படியொரு கோரிக்கை இதுவரை வரவில்லை. இருந்தாலும் கவனிக்கிறேன்.


கல்கி: வேலூர் — படவேடு பஸ் அடிக்கடி நின்றுவிடுகிறது. காரணம் கேட்டால் ரோடு வசதி சரியில்லை என்று சொல்லப்படுகிறதாம்.

நெடுஞ்சாலைத் துறைக் கோட்டப் பொறியாளர், திருவண்ணாமலை: இச்சாலைப் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் தொடர்பாக ஆரணி மற்றும் போளூரில் உள்ள உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. விரைவில் செய்யப்படும்.

கல்கி: அதேபோல் விருதம்பட்டு — லெப்பை கிருஷ்ணாபுரம் சாலையும் (16 கி.மீ.) பதினைந்து ஆண்டுகளாகப் பராமரிக்கப்படவில்லை என்கிறார்கள்.

கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை, வேலூர்: தற்போது அச்சாலையைப் பழுது பார்க்கும் பணி துவங்கப்பட்டுவிட்டது. விரைவில் சீர் செய்யப்பட்டுவிடும்.

கல்கி: திருப்பத்தூர் நாட்றம் பள்ளிச் சாலையிலுள்ள இருப்புப்பாதைப் பாலம்



''நீ உசிலைமணி ரசிகனா?''

''இல்லே. நான் டிஸ்கோ சாந்தியின் ஒரே ஒரு படத்தை மாட்டினத்துக்குப் போட்டியா இப்படி என் மனைவி வீடு பூராவும் உசிலைமணியின் படத்தை மாட்டிட்டா!''

— மேல்குந்தை ஷாக

மிகக் குறுகலாக உள்ளது. அகலமாக்கப்பட வேண்டும் என்கிறார்கள்!

கோ. பொறியாளர், நெ. சா. துறை மற்றும் ஊ.ப. துறை, வேலூர்: அங்குள்ள இரண்டு இருப்புப் பாதைக் கீழ்ப் பாலங்களையும் திருத்தி அமைப்பதானால் மொத்தம் எழுபத்தைந்து லட்சம் செலவாகும். அதை மாநில அரசும் மத்திய அரசும் சரி பாதியாக ஏற்கும் பட்சத்தில் ஒரு சிறப்புத் திட்டத்தின் மூலம் செய்யலாம். எனினும் இது குறித்துக் கோரிக்கை ஏதும் வரவில்லை. வந்தால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்கி: காரப்பட்டு என்னும் கிராமத்திலிருந்து செங்கத்திற்கு பஸ் வசதி இல்லை என்கிறார்கள்!

பொது மேலாளர், பட்டுக்கோட்டை அழகிரி போ. கழகம்: இது குறித்து இது வரை எங்களிடம் கோரிக்கை வரவில்லை. இருப்பினும் இதையே கோரிக்கையாக ஏற்றுப் பேருந்து வசதிகள் ஏற்படுத்துவதற்கான முன்னோடி சர்வே ஒன்றை மேற்கொள்கிறோம்.

கல்கி: வாலாஜபேட்டை நூலகத்தில் வார், மாத ஏடுகள் போன்றவை அந்தந்த வாரங்களில் போடப்படுவதில்லை. மிகவும் தாமதமாகப் போடுகிறார்கள் என்றும் புத்தகங்கள் சரியான முறைப்படி அடுக்கி வைக்கப்படுவதில்லை என்றும் புகார் சொல்கிறார்களே?

மாவட்ட நூலக அலுவலர்: விடுமுறை நாட்கள் தவிர மற்ற நாட்களில் சரியான முறையிலேயே வார, மாத ஏடுகள் வழங்கப்படுகின்றன. இட வசதிக் குறைவு காரணமாகவே, புத்தகங்கள் சரியான முறையில் அடுக்காத குறைபாடு நேர்ந்துள்ளது. நூலகக் கட்டடத்தை விரிவுபடுத்தும் பணி விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே, இக்குறையும் விரைவில் சீர் செய்யப்பட்டு விடும்.

கல்கி: மாதனூருக்கும் ஆம்பூருக்கும் இடையிலுள்ள கீழ்முருங்கையில் பாண்டியன் என்ற இராணுவ வீரருக்குச் சொந்தமான இடத்தைக் கடந்த 79-ல் ஹரிஜன நலத் துறை வீட்டு வசதி வாரியம் ஆர்ஜிதம் செய்தது தவறு என வழக்கில் தீர்ப்பான பிறகும், நிலத்தை அவரிடம் ஒப்படைக்கவில்லையாமே?

கலெக்டர்: விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

கல்கி: வடாற்காடு மாவட்டப் பஞ்சாலை ஒருகாலத்தில் இந்தியாவிலேயே முதலிடத்தில் இருந்தது. இன்றோ பெரும் நஷ்டம் ஏற்பட்டு மூடும் அபாயத்தில் உள்ளதற்கு என்ன காரணம்?

கலெக்டர்: பஞ்சு விலை உயர்ந்த அளவுக்கு நூல் விலை உயராததுதான் காரணம். மேலும் ஏராளமான தொழிலாளர்கள் இருந்தும் இன்னும் இரண்டாவது யூனிட் அமைக்கத் தாமதமாவது. அதை அமைத்து விட்டால் சரியாகிவிடும் என்று நம்புகிறோம்.

கல்கி: இரத்தினகிரி அருகிலுள்ள பூட்டுத்தாக்கு கிராமத்திற்குப் பாலாற்றிலிருந்து குடிநீர் வருகிறது. அங்கிருந்து நாராயணபுரத்திற்குக் குடிநீர் கொண்டு வர 80-லேயே பூமிக்கடியில் குழாய்கள் பதிக்கப்பட்டும் இன்னும் திட்டம் செயல்படவில்லையே, ஏன்?

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளர், வேலூர்: நாராயணபுரம், கன்னிகாபுரம் குடிநீர்த் திட்டத்திற்கான எல்லாப் பணிகளும் முடிந்துவிட்டன. எனினும் தலைப்பிடத்திலுள்ள விசையேற்றிகளின் இயக்குத்திறன் குறைந்துவிட்டதால், புதிய விசையேற்றிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதை ஊராட்சிகள் பொருத்தியவுடன் திட்டம் செயல்படும்.

கல்கி: செக்கஸ்லோவாக்கியா கூட்டுறவில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்கோடா இந்தியா (பி) லிமிடெட் கம்பெனி தொழிலாளர்களைக் கொத்தடிமைகள் போல் நடத்தி வந்ததாகவும் அதனால் உரிமைகள் கேட்டுப் போராடியதற்காக நிர்வாகம் உடனடியாக லே-ஆப் செய்துவிட்டதாகவும் புகார் சொல்கிறார்களே?

மாவட்டத் தொழிலாளர் நல அலுவலர்: அரக்கோணத்திலுள்ள அக்கம்பெனியில் மொத்தமுள்ள 141 தொழிலாளர்களில் அறுபத்தெட்டுப் பேரை ஆட்குறைப்புச் செய்ய அனுமதி கோரிச் சென்னையிலுள்ள தொழிலாளர் நல இணை இயக்குனருக்கு அனுப்பியுள்ளார்கள். மற்றபடி அங்கு வேறு தகராறுகள் ஏதும் இல்லை.

கல்கி: மு. அய்சாயா என்பவர் கடந்த 11.9.84 அன்று குடியாத்தம் அருகிலுள்ள வேப்பூர் கிராம எல்லையில் நடந்த பஸ் விபத்தில் இறந்து போனார். அப்படி விபத்தில் இறந்து போனவர்களின் குடும்பத்திற்கு அரசால் வழங்கப்படும் ஆயிரம் ரூபாய் இன்னும் அவரது மனைவி திருமதி இராணிக்கு வழங்கப்படவில்லையாமே?

கலெக்டர்: விசாரித்து ஆவன செய்கிறேன்.

கல்கி: ஆம்பூர் மற்றும் வாணியம்பாடியிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்க, கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்ட நிலையிலும் இன்னும் அமைக்கப்படவில்லை

யே?

தோல் பதனிடுவோர் சுற்றுப்புறச் சூழ் நிலைக் கட்டுப்பாடு சங்கம், வாணியம்பாடி: தமிழ்நாடு தோல் அபிவிருத்திக் கழகம், வாணியம்பாடி தோல் பதனிடுவோர் சுற்றுப் புறச் சூழ்நிலைக் கட்டுப்பாடு சங்கத்துடன் சேர்ந்து, சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்துவ தற்காக வளையாம்பட்டு என்னுமிடத்தில் இருபது ஏக்கர் நிலம் வாங்குவதற்குத் திட்ட மிடப்பட்டுள்ளது. விரைவில் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

கல்கி: இராணிப்பேட்டையிலுள்ள தமிழ் நாடு குரோமேட் அண்ட் கெமிகல்ஸ் என்ற அரசு நிறுவனத்திலும் மற்றும் திருமலை கெமிகல்ஸ் நிறுவனத்திலும் அவற்றிலிருந்து வெளியேறும் கழிவு நீரைச் சுத்தப்படுத்தும் இயந்திரங்கள் உள்ளனவா?

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய மண்டல அலுவலர்: தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்ட் கெமிகல்ஸ் நிறுவனத்தில் கழிவு நீர் அசுத்தங்களை மட்டுப்படுத்தும் தொட்டி உள்ளது. ஆனால் திருமலை கெமிகல்ஸ் நிறு வனத்தில் இல்லை. விரைவில் ஏற்படுத்து மாறு கோரியுள்ளோம்.

கல்கி: திருமலை கெமிகல்ஸில் கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் இருப்பதாகச் சொன் னார்கள். காட்டவும் செய்தார்கள். அவை உண்மையல்லவா?

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய ம. அலுவலர்: உண்மை அல்ல!

கல்கி: திருவண்ணாமலையிலுள்ள பால் பதனிடும் நிலையக் கழிவு நீரைச் சுத்தப் படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளன?

கூட்டுறவுச் சங்கம் (பால்வளம்) துணைப் பதிவாளர்: தற்போது அங்கு தொழிலக நீரியிற் கழிவு நிலையம் ஏதும் இல்லை. அமைப் பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

கல்கி: திருவண்ணாமலையிலுள்ள பைபாஸ் ரோடு இன்னமும் உபயோகப்படுத்தப்பட வில்லையே, ஏன்?

நகர மற்றும் கிராமப்புறத் திட்டத் துணை இயக்குனர்: அச்சாலையை நெடுஞ்சாலைத் துறையினரிடம் ஒப்படைக்க அரசு ஆணை கோரப்பட்டுள்ளது. அரசு ஆணை வந்ததும் உடனடியாக அது மாற்றுவழிச் சாலையாகப் பயன்படுத்தப்படும்.

கல்கி: வேலூரிலுள்ள திருநகரிலிருக்கும் தாயுமானவர் தெரு கடந்த ஏழாண்டு கால மாக நெடுஞ்சாலையுடன் இணைக்கப்படாத தற்கு என்ன காரணம்?

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறைக் கோட்டப்பொறியாளர்: ஆக்ரமிப்பு கள்தான் காரணம். இன்னும் ஒரு மாத காலத்திற்குள் ஆக்ரமிப்புகள் அகற்றப்பட்டு, அது பிரதான சாலையுடன் இணைக்கப்பட்டு விடும்.

கல்கி: வேலூர் — ஆரணி ரோட்டிலுள்ள அத்திமலைப்பட்டு கிராமத்தில் மலைப்பாங் கான பகுதிகளில் போலீஸ் ஸ்டேஷனுக்கு மாமூல் கொடுத்துவிட்டுக் கள்ளச் சாராயம் காய்ச்சப்படுவதாகச் சொல்கிறார்கள்.

மாவட்டக் காவல்துறைக் கண்காணிப் பாளர்: அத்திமலைப்பட்டு கிராமத்தில் திடீர்ச் சோதனை நடத்தியதன் மூலம் சண் முகம் என்பவரைக் கள்ளச் சாராயம் விற்ற தற்காகக் கைது செய்யப்பட்டுள்ளது. மேலும் அவ்வப்போது திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கல்கி: வேலூர் மத்தியச் சிறையில் கைதி களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உணவு சரியான முறையில் வழங்கப்படுவதில்லை என்று பழைய கைதிகள் புகார் சொல் கிறார்களே?

வேலூர் மத்தியச் சிறைக் கண்காணிப் பாளர்: இக்கூற்று உண்மைக்குப் புறம்பா னது. எல்லாம் விதிமுறைகளின்படி வழங் கப்படுகின்றன. எனினும் இக்குறைகள் வராமல் பார்த்துக் கொள்ளப்படும்.

கல்கி: வேலூர் சிறையிலிருக்கும் மாசிலா மணி என்ற ஆயுள் தண்டனைக் கைதியை மட்டும் சுய விருப்பு வெறுப்புக்களின் காரண மாக நன்னடத்தையின் பேரில் விடுதலை செய்யாமல் அதற்கு அவர் மன நோய் உள்ளவரென்று காரணம் சொல்லப்படுகிற தாமே?

வேலூர் ம. சிறைக் கண்காணிப்பாளர்: இதுவும் உண்மைக்குப் புறம்பானது. அவர் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார். அவரது முன் விடுதலைக்கும் அரசுக்குப் பரிந் துரை அனுப்பப்பட்டு வருகிறது.

கல்கி: வேறு எந்த மாவட்டத்திலும் இல் லாமல், இந்த மாவட்டத்தில்தான் அந்தந்த ஊரின் பஞ்சாயத்துத் தலைவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களோ, அந்தந்த கட்சி களைக் குறிக்கும்வகையிலான நிறங்களில் ஊர் களின் பெயர்ப் பலகைகள் எழுதப்பட்டுள் ளன. அண்மையில் நெல்வாய் கிராமத்தின் பஞ்சாயத்துநிதியில்கட்டப்பட்டநிழற்குடைக் குக் கருணாநிதி பெயர் வைக்கவேதான் அ.தி. மு.க.வினர் அதை உடைத்தெறிந்திருக்கின்ற னர். இவற்றையெல்லாம் ஏன் ஒட்டு மொத்த மாகத் தடை செய்யக் கூடாது?


கலெக்டர்: தகுந்த நடவடிக்கை எடுக் கிறேன்.

கல்கி: மிக்க நன்றி.

கலெக்டர்: உண்மையில் நீங்கள் கண்டது பேட்டியே அல்ல; டி.டி.சி. மீட்டிங் (மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம்) மாதிரிதான் இருந் தது. சொல்லப் போனால் டி.டி.சி.யில் சொல் லப்படும் பிரச்னைகளைவிடவும் அதிகமாகச் சொல்லியிருக்கிறீர்கள். நிச்சயம் தகுந்த நட வடிக்கைகள் எடுப்போம். நன்றி. வணக்கம்!

வெகுமதி (THE BOUNTY)









இரு நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட சரித்திரக் கதை. ப்ளை (BLIGH)தான் கப்பல் காப்டன். தன் ஆத்ம நண்பன் கிரிஸ்டியனை விதிகளுக்குப் புறம்பாகத் தனது உதவியாளனாகப் பதவி உயர்வு கொடுத்து, கப்பலின் பயணத்தைத் தொடர்கிறார் கேப்டன். தஹிதி தீவை நெருங்கும்போது கப்பல் புயலில் சிக்க, அந்தத் தீவில் இறங்கிக் கொள்ளும் நிர்ப்பந்தம்.

தீவு சாதாரணத் தீவு இல்லை. அரைகுறை உடை அணிந்த இளம் பெண்கள் எறும்புகளைப் போல் சுற்றிச் சுற்றி வருகின்றனர். தீவுத் தலைவனின் மகளைக் காதலிக்கத் தொடங்குகிறான், இரண்டாம் ஆபீசர் கிரிஸ்டியன். ஆபாசம் என்ற கலப்பைத் தொட்டுவிடாமல் அதே நேரம் கிளர்ச்சியூட்டும் கவர்ச்சியைத் தாராளமாக வாரியிறைக்கும் காட்சிகள்.

கிரிஸ்டியன் கப்பலைக் கிளப்ப மறுப்பதை கேப்டனால் பொறுக்க முடியவில்லை. கேப்டனின் ஆவேசம், கிரிஸ்டியனின் தர்ம சங்கடம், தீவின் மீதும் காதலியின் வயிற்றில் வளரும் தன் குழந்தையின் மீதும் அவனுக்கு விழுந்துவிட்ட பிடிப்பு — தனக்குப் பதவி உயர்வு கொடுத்த கேப்டனுக்கு எதிராகவே அவன் திரும்புகிறான்.


வேண்டா வெறுப்பாகக் கப்பலைக் கிளப்பி, நடு வழியில் கேப்டனை எதிர்த்து போராட்டம் நடத்தி, கப்பலைத் தன் வசமாக்கிக் கொள்ளும்போது, கிரிஸ்டியனின் மன உணர்வுகளைத் துல்லியமாக நம்மால் உணர முடிகிறது. கேப்டனும், அவர் நண்பர்களும் ஒரு படகில் ஏற்றப்பட்டு நடுக்கடலில் இறக்கிவிடப்பட்டு.... விலாவாரியாகப் பின் பகுதியை வளர்த்துக் கொண்டு போவது மட்டும் கொஞ்சம் இழுவை. மற்றபடி, ஏராள பொருள் செலவில், கப்பலையும், மனிதர்களையும் அழகாகப் புரிய வைத்திருக்கிறார்கள்.

—ஜெயமன்மதன்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543 434157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 38, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 75/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 350/—; விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)



டீ காப்பியோடு சேர்த்தி: பிரிட்டானியா மாரி நேர்த்தி.



பிரிட்டானியா

மாரி

LINTAS BIN MRE 11 2416 TM

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Sri Lanka